


# தமிழரசு





மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் (17.1.'92).

## இந்த இதழில்...


குடியரசு நாள் விழா ... 2

தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு ... 4

காங்கேயத்தில், அரசு விழாவில் முதல்வர் உரை ... 5

மாமல்லபுரம் பொங்கல் நாட்டிய விழா ... 9

நீலகிரி மாவட்ட நலப் பணிகள் ... 13

திண்டுக்கல் அண்ணா மாவட்டப் பட்டுத்தொழில் வளர்ச்சி ... 15

திருவள்ளுவர் திருநாள் ... 17

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ... 20

தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்வி ... 22

மனிதாபிமானத்தின் மணிமகுடம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். —மாண்புமிகு முதல்வர் உரை ... 23

கர்நாடகக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பாதுகாப்பு ... 27

உணவு: சில மருத்துவ உண்மைகள் ... 29

பனை ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல் ... 33

மருத்துவ வசதிகளைப் பரவலாக்கப் பத்தாயிரம் முகாம்கள் —மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 36

தெலுங்கு கங்கைத் திட்டம்: தமிழக—ஆந்திர முதல்வர்கள் சந்திப்பு ... 38

பார்கூரில், அரசு விழாவில் முதல்வர் உரை ... 43

கலைமாமணி விருது வழங்கும் விழா ... 46



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

தைத் திங்கள் - 18

மலர்:22 1-2-1992 இதழ்:15




சென்னையில்

# குடியரசு நாள் விழா

இந்தியாவின் 43-வது குடியரசு நாள் விழா, 26.1.92 அன்று தமிழக மெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது; சென்னையில் நடை பெற்ற குடியரசு நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர் களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்களைத் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப., அவர்கள் வர வேற்றார்.

காமராசர் சாலை-காந்தி சிலையருகில் அன்று காலை 8 மணி யளவில் மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைத்தார்.

தீரச்செயல் புரிந்த 9 பேருக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்திலான அண்ணா வீரப்பதக்கத் தையும் ஆயிரம் ரூபாய்க் கான காசோலையையும் வழங்கிப் பாராட்டினார்.

திருவண்ணாமலை தண்டராம்பட்டு திரு. வெங்கடேசன், திரு நெல்வேலி ஸ்ரீபுரம் கல் லூரி மாணவி கே. மைதிலி, வேளாங்கண்ணி, திரு.இராசேந்திரன், திரு. இரத்தினம், திரு. குழந்தை வேலு, திரு. சாமிக் கண்ணு மற்றும் பரமக் குடி பொதுவக்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளித் தலைமை யாசிரியர் திரு. கே. பாலானந்தம், கோவை மாவட்ட வனச்சரக அதி காரி திரு. ஜி.கே. முத்துசாமி, பத்மாநாப புரம் உதவி மாவட்ட ஆட்சியாளர் அலுவலக தபேதார் திரு. குமரேசன் ஆகியோர் அண்ணா பதக்கத்தை பெற்றனர்.

தொடர்ந்து நடை பெற்ற அணிவகுப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் பல்வேறு துறை களின் அலங்கார ஊர்திகள் இடம் பெற் றன. தேசிய ஒருமைப் பாட்டைச் சித்திரிக்கும் பல்வேறு மாநிலக் கலைக் குழுவினரின் நிகழ்ச்சி களும் 13 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவி களின் கலைநிகழ்ச்சி களும் இடம் பெற்றன.

நிகழ்ச்சி முடிவில்-சிறப்பாக அலங்கரிக்கப்



பட்டிருந்த விவசாயத் தோட்டக்கலை ஊர்திக்கு முதல் பரிசும், சமூக நலத் துறை ஊர்திக்கு இரண்டாம் பரிசும், மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊர்திக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

பள்ளி மாணவ மாணவிகளின் அணிவகுப்புக் கலைநிகழ்ச்சியைச் சிறப்பாக அமைத்திருந்தமைக்காக- ஜவகர் பால பவனுக்கு முதல் பரிசும், லேடி வெல்லிங்டன் பள்ளிக்கு இரண்டாவது பரிசும், சில்ரன் கார்டன் மேநிலைப் பள்ளிக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
**என். இளங்கோ**









# தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு: திட்டக்குழுத் துணைத்தலைவருடன் மாண்புமிகு முதல்வர் டெல்லியில் ஆலோசனை

**1992-'93-** ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டின் திட்ட ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை 10.1.'92 அன்று புதுடெல்லியில் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சு வார்த்தையின் போது, மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நெடுஞ்செழியன் மற்றும் அரசு அலுவலர்கள் முதல்வருக்கு உதவியாக இருந்தனர்.

திட்டத்தின் ஆதாரங்களைக் கணக்கிடுவதற்கு இடையூறாக இருக்கும் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். மத்திய அரசு, பண்டங்களின் நிர்ணய விலையை உயர்த்துவதற்கு முன்பு, மாநில அரசைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு பெருமளவில் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1992-93-ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசின் திட்ட முதலீடு தொகையை ரூ.1,751 கோடி என்று திட்டம் தீட்டியிருப்பதாகக் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது மிகவும் குறைந்த பட்சத் திட்ட முதலீடு என்று கூறினார்.

இந்த ஆண்டு தமிழக அரசு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் பெரும் முயற்சி எடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டி, மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தமிழகத்தின் வெற்றிகரமான நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சியைக் கருத்திற்கொண்டு அதற்கு இணையாக மத்திய அரசும் தன்னால் இயன்ற அளவு கணிசமான கூடுதல் மத்திய உதவி அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசு எதிர்நோக்கியுள்ள மிக மோசமான நிதி நெருக்கடியின் காரணமாக மாநில அரசுக்கான மத்திய நிதி உதவியைக் கொஞ்சமாகத்தான் உயர்த்த முடியுமெனத் திட்டக் குழுத் துணைத் தலைவர் குறிப்பிட்டார். இருந்தாலும் குறைந்த பட்சமாகத் தேசிய சராசரிக்கு இணையாகத் தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டு தனிநபர் திட்ட முதலீடு இருக்கும் வகையிலாவது 1992-'93-ஆம் ஆண்டுக்கான திட்டம் இருக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

இது குறித்து மேலும் ஆய்வு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை அலுவலர்களுக்கு முதல்வரின் விருதுகள்

1992-பொங்கல் திருநாளையொட்டி காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை ஆகியவற்றைச் சேர்ந்த 1,047 அலுவலர்களுக்கு முதலமைச்சரின் விருதுகள் வழங்க மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

காவல் துறையைச் சேர்ந்த 927 காவலர்களுக்கும், தீயணைப்புப் படையைச் சேர்ந்த 100 அலுவலர்களுக்கும், சிறைத் துறையைச் சேர்ந்த 20 அலுவலர்களுக்கும். ஆகமொத்தம் 1,047 பேர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

இந்த விருது பெறுவோருக்கு 1992 பிப்ரவரி மாதத்திலிருந்து மாதந்தோறும் அவர்களின் பதவியைப் பொறுத்து ரூ.20 அல்லது ரூ.25-ஊதியத்தில் கூடுதலாகக் கிடைக்கும்.

# என்னை வழிநடத்திச் செல்லுவது மனிததெய்வங்களின் நம்பிக்கையும் மாமனிதர்களின் தத்துவங்களுமே!

## காங்கேயத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் பெருமிதம்

**நம்** இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பெயர் சூட்டப்பட்ட பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், தந்தை பெரியாரின் துணிவான குரல் ஒலித்த இடத்திலிருந்து, அவரது காலடி மண் மீது நின்று, எனதருமை வாக்காளப் பெருமக்களைச் சந்திப்பதில் பெருமிதம் அடைகின்றேன். எனது அரசியல் பயணத்தில், எனக்கு மாபெரும் வெற்றியை முதன்முதலாகத் தேடித்தந்து, இன்று நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலிருப்பதற்கு அன்றே அடித்தளம் அமைத்துக் கொடுத்த சிறப்பிற்குரிய மாவட்டம், உங்கள் மாவட்டம்.

சென்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், நான் எங்கு போட்டியிடுவேன் என்பதைத் தெரிந்துகொள்ள, நம்மவர்களும் மிக்க ஆவலோடு இருந்த நேரம்; நம் எதிரிகளும் மிகுந்த அக்கறை காட்டிய நேரம். அந்த இக்கட்டான நேரத்தில்தான், நான் போட்டியிடத் தேர்ந்தெடுத்த தொகுதி, காங்கேயம் என்றால், நான் உங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு என்பதை நீங்கள் உணர முடியும்! என் நம்பிக்கை வீண் போகவில்லை. நான் தேர்ந்தெடுத்துப் போட்டியிட்ட இத்தொகுதியில், வாக்காளப் பெருமக்கள் என்னை அமோகமாக வெற்றி பெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாட்சியை, மீண்டும் தமிழகத்தில் மலரச் செய்திடும் வாய்ப்பையும் வழங்கிவிட்டனர்.

அவ்வாறு என்னை மகத்தான வெற்றி பெறச்செய்த, இத்தொகுதியின் வணக்கத்திற்குரிய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், எனது இதய பூர்வமான நன்றியை முதற்கண் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்தக் காங்கேயம் தொகுதியில், நான் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த நேரத்தில், இத்தொகுதியின் அனைத்துக் கிராமங்களுக்கும் நேரில் சென்று வாக்குக் கேட்பது என்ற முடிவிலேயே இருந்தேன். அந்த வகையில்தான், இத்தொகுதியில் ஒரு நாள் முழுவதும் பல்வேறு கிராமங்களிலும், இதே காங்கேயம் நகரிலும், சென்னி மலையிலும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, உங்களை எல்லாம் நேரில் சந்தித்துச் சென்றேன். முதலில் திட்டமிட்டபடி, தேர்தல் கடந்த மே மாதம் 26-ந் தேதியே நடந்திருக்குமானால், 21,22 ஆகிய தேதிகளில் நான் பர்கூர் தொகுதிச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, 23,24 ஆகிய தேதிகளில் மீண்டும் இங்கு வந்து, எஞ்சிய எல்லா ஊர்களுக்கும் நேரில் சென்று, உங்களை எல்லாம் சந்தித்திருப்பேன்.

ஆனால், நாம் அனைவரும் சற்றும் எதிர்பார்க்காத, கொடிய நிகழ்ச்சியான ராஜீவ் காந்தி படுகொலை, 21-ந் தேதி அன்று நடைபெற்று, நடக்க இருந்த தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார் என்ற கொடுமையான செய்தி, அன்று பர்கூர் தொகுதியில் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் உடனடியாக எனது சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தச் செல்ல வேண்டியதாயிற்று. நம்முடைய வெற்றி விழாவில் கலந்து கொள்ள வரவேண்டிய, அந்த நல்லவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதே, என்ற பெருந்துயருடன் டெல்லி சென்று வந்தேன்.

அதன் பின்னர்தான், ராஜீவ் காந்தியைக் கொன்ற கொடியவர்களின் குறி, அவர்மீது மட்டுமல்லாது, என் மீதும் இருந்தது என்பதும், அக்கொலைக் கும்பலை இயக்கிய கொடியோர், பின்னாலிருந்து என்மீது தாக்கிடவே கட்டளையிட்டிருந்தனர் என்ற செய்தியும் கிடைத்தது. தேர்தல் ஜூன் மாதம் 15-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து நான் சுற்றுப் பயணம் செய்வது நல்லதல்ல என்ற எச்சரிக்கையும் என்னிடம்





தெரிவிக்கப்பட்டது.

**உங்கள் வீட்டுப் பிள்ளை**

இச்சூழ்நிலைகளை விளக்கித்தான், இத்தொகுதியில் உள்ள வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் கைப்படவே கடிதம் எழுதி நேரில் அனுப்பி இருந்தேன், மேலும் என் கடிதத்தில், 'என் உயிருக்குப் பயந்து உங்களைக் காண நேரில் வராதிருக்கிறேன் என யாரும் கருதிட வேண்டாம். காவல்துறையினரது அறிவுரைக்கும், கழக முன்னணியினர் அன்புக் கட்டளைக்கும் கட்டுப்பட்டுத்தான், உங்களைக் காண வெளியில் வரமுடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளேன். விரைவில் இந்த நிலை மாறும்; நம்முடைய ஆட்சி அமையும்; தமிழகத்தில் சீரழிந்துபோன சட்டம்-ஒழுங்கு சீர்படுத்தப்படும்; அமைதி மிக்க தமிழ்நாடு உருவாகும். அத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கித் தந்துவிட்டு, ஓடோடி உங்களை வந்து சந்திப்பேன்; நன்றி கூறுவேன், தொகுதிக்கான நற்பணிகளை மேற்கொள்வேன்' என்றும் தெரிவித்திருந்தேன். என் நிலைமையை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இங்கு நான் கிராமம் கிராமமாக நேரில் சென்று ஆதரவு கோரியபோது, 'என்னை உங்கள் வீட்டுப்பிள்ளையாக நினைத்து, எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன். அந்த என் அன்பு வேண்டுகோளை மனமுவந்து ஏற்று, என்னை உங்கள் வீட்டுப் பிள்ளையாகவே பாவித்து, எனக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்த காங்கேயம் தொகுதி மக்களுக்கு, நான் என் வாழ்நாள் முழுவதும் பணிபுரியக் கடமைப்பட்டுள்ளேன்.

சொன்னது சொன்னபடி, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குச் சீர்செய்யப்பட்டு, போராளி குழுக்களின் நடமாட்டத்தையும், அவர்களது மிரட்டல்களையும் ஒடுக்கி, சரித்திரச் சாதனைகள் பலவற்றை அரசின் மூலம் நிகழ்த்திவிட்டு, உங்களைச் சந்திக்க ஓடோடி வந்திருக்கிறேன்.

நான் இத்தொகுதியின் பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் பொறுப்பேற்காமல், என்னை வெற்றி பெறச்செய்த இன்னொரு தொகுதியான பர்கூர் தொகுதியின் பிரதிநிதியாகச், சட்டமன்றப் பேரவையில் அங்கம் வகிப்பதற்கான உண்மைக் காரணத்தை இன்று உங்களிடம் தெரிவிக்கவும் நான் கடமைப்பட்டுள்ளேன். காங்கேயம் தொகுதி அமைந்துள்ள பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், தற்போது ஒன்றுக்கு இரண்டு அமைச்சர்கள்; மாண்புமிகு சகோதரர்கள் முத்துசாமி அவர்களும், செங்கோட்டையன் அவர்களும் இருக்கின்றனர். ஏற்கெனவே பல்வேறு சந்தர்ப்பங்களில், வேறு பலரும் இப்பகுதியில் இருந்து அமைச்சர்களாக இருந்துள்ளனர். அந்த வகையில் காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, இம்மாவட்டத்தில் ஏனைய தொகுதிகளும், அவ்வப்போது சில அமைச்சர்களின் நேரடிப் பராமரிப்பில் இருந்திட வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

ஆனால், உங்களைப் போன்றே பெரும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புக்களுடனும், என்னை வெற்றி பெறச் செய்திட்ட, பர்கூர் தொகுதி அமைந்துள்ள தர்மபுரி மாவட்டத்தின் பிரதிநிதிகளாக, இதுவரை, நமது நாடு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே பார்த்தால் கூட, ஒருவர்கூட் அமைச்சரவையில் பொறுப்பேற்கவில்லை, என்ற வருந்தத்தக்க நிலையே இருந்து வந்துள்ளது.

**பர்கூர் தொகுதிச் சிறப்பு**

பெரியார் மாவட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தருமபுரி மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். எனவே, அப்பகுதி மக்களின் அப்பெருங்குறையை, வாட்டத்தைப் போக்கவே, பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைத்துக்கொண்டு, இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தேன் என்ற உண்மையை - எனது உள்ள உணர்வை - தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இதுதவிர, வேறு எக்காரணமும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களாகிய உங்களை நான் என்றுமே மறக்க முடியாது. ஏனென்றால், என்னை முதலில் தேர்ந்தெடுத்து முதலமைச்சராக ஆக்கியதோடு மட்டுமல்லாமல், நான் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து நடந்த இடைத்தேர்தலில், என்மீது கொண்ட நம்பிக்கை காரணமாகவும், என் வேண்டுகோளுக்குச் செவிமடுத்தும், எனக்காக நீங்கள், இங்கே வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களையும், அமோகமாக வெற்றிபெறச் செய்து, இது எனது தொகுதிதான் என்பதை உறுதிப்படுத்தினீர்கள்.

ஆனால், என்னை நம்பி வாக்களித்த உங்களை மறந்துவிட்டேனா என எவரும் அஞ்ச வேண்டாம். உங்களையெல்லாம் நேரில் சந்தித்து, இந்த உண்மையைத் தெரிவித்துக்கொள்ளவே, இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, இப்போது அலைகடலெனத் திரண்டுள்ள உங்கள் முன் நின்றுகொண்டிருக்கின்றேன்.

பர்கூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை நான் தக்கவைத்துக் கொண்டுள்ளேன் என்றாலும், என்னை முதலமைச்சராக்கிட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும், உற்சாகத்தோடும், என்னை வெற்றி பெறச்செய்த இக் காங்கேயம் தொகுதி, என்றும் எனது சொந்தத் தொகுதிதான் என்பதை, மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் தொகுதிக்கு என் மனதில் என்னென்ன வகையில் முன்னுரிமை உண்டோ - அதே முன்னுரிமை காங்கேயம் தொகுதிக்கும் உண்டு; என்றென்றும் உண்டு என்பதை மிக அழுத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் - பர்கூர் மட்டுமல்லாமல், மிகச் சோதனையான ஓர் காலக்கட்டத்தில், 1989 தேர்தலில் என்னை முதன் முதலாகச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த, மதுரை மாவட்டம் போடி

தொகுதியும் எனது தொகுதியே என்பதை யும் நன்றியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னைத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச்செய்த இம்மூன்று தொகுதிகள் மட்டுமல்லாமல், என்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு, தமிழகம் முழுவதும் உள்ள தொகுதிகள் அனைத்திலும், அமோக வெற்றியை எங்கள் அணிக்கு அள்ளிக் குவித்தார்களே; அந்த வகையில், தமிழகத் தில் உள்ள அனைத்துத் தொகுதிகளும் எனது தொகுதிகளே என்ற உணர்வுடன் தான், உங்கள் சகோதரியான நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

**மனித தெய்வங்கள்**

எங்களை வழிநடத்திச் செல்வது - எங்களை இத்தகைய உயர்வுக்கு ஆளாக்கி யுள்ள ஏழை, எளிய, பின்தங்கிய, தாழ்த் தப்பட்டவர்களாக உள்ள மனித தெய் வங்கள் எங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் - மாமனிதர்களாக வாழ்ந்து மறைந்த, பேறறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகி யோரின் நல்ல தத்துவங்களும் தான் ஆகும்.

நாங்கள் மக்களை முழுமையாக நம்பி தேர்தலில் நிற்பவர்கள். அதனாலேதான், எந்த வேட்பாளரை எங்கு நிற்க வைத் தாலும், எங்கள் வெற்றி உறுதியாகிறது. சில கட்சிகள் வேட்பாளரை மாற்றினால் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில், ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கி, பல முறை முழுத் தோல்வியைத் தழுவிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

மக்களையும் என்னையும் எந்தச் சக்தியும் பிரித்துவிட முடியாது, என்ப தற்குரிய அனுபவ, நேரடி எடுத்துக் காட்டுகளில் ஒன்றுதான், எனது காங்கேயம்

# சரித்திரச் சாதனைகள் பல நிகழ்த்தியுள்ள அரசு இது!

தொகுதியின் தொடர் வெற்றியாகும். எங் களை நம்புகிறவர்களுக்கு நாங்கள் தொண்டு செய்கிறோம். நம்பாதவர்கள் தோல்வியால், விரக்தியால் துவண்டு போகிறார்கள். ஏழைகள் என்னை, என் இயக்கத்தை அதிகமாக நேசிக்கிறார்கள், நம்புகிறார்கள். அது ஏழைகளின் குற்றமா? அல்லது எங்கள் குற்றமா? ஏழைகளின் குரலாய் இருந்து, ஏழை களின் நலனுக்காகவே நல்லாட்சி புரிந்த புரட்சித் தலைவரின் வாரிசுகள் நாங்கள், ஆகவேதான் என்ன எதிர்ப்பு வந்தாலும், அது எந்தத் திசையிலிருந்து வந்தாலும், அவைகளைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், நான் ஏழை மக்களுக்குப் பணியாற்றுவதையே, என் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன்.

என்மீது தமிழக மக்கள் கொண்டுள்ள அளப்பரிய அன்பை ஈடுகட்டுவதற்காக வும், அவர்கள் என்மீது செலுத்தியுள்ள நம்பிக்கைக்கு நன்றிக்கடன் செலுத்துவதற் காகவும், நான் மேற்கொண்டுள்ள புனிதப் பயணத்தை, என் உயிருக்கேகூட ஊறு நேரலாம் எனப் பலரும் எச்சரித்து வந்தாலும், தொய்வில்லாமல் தொடரு வேன் என்று உறுதி கூறுகின்றேன். என்னைப் பொறுத்தமட்டில், உயிருக்குப் பயந்து, ஏற்றுக்கொண்ட புனிதப் பணி யில் இருந்து சிறிதும் நான் பின்வாங்க மாட்டேன்;

நான் மக்களாகிய உங்களை மட்டும் நம்புவதால், எக்காலத்திலும் சோர்ந்து போக மாட்டேன்.

'அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா'

- எனப் பரணி பாடிய புரட்சித் தலைவர் வழி நடக்கும் என்னை, எவரும் பயமுறுத்திப் பணிய வைத்துவிட முடி யாது. எனது நோக்கத்தைத் திசை திருப்பி, மக்கள் மன்றத்திலிருந்து என்னை அகற்றி விட, எவர் நினைத்தாலும் அவர்கள் துவண்டுபோவார்கள், தோல்வியைத் தழுவுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த எதிர்ப் பையும் சந்திக்கின்ற, சமாளிக்கின்ற பயிற்சியை, நான் புரட்சித் தலைவரின் பாடசாலையின் நன்கு பயின்று உள்ளேன்.

**ஊக்க சக்தியும் ஆக்க சக்தியும்**

புரட்சித் தலைவர் எனக்கு வழங்கி விட்டுப் போயிருக்கிற அளவிட முடியாத ஊக்க சக்தி அது! என்மீது மறைமுகத் தாக்குதல் நடத்துவோரின் வியூகத்தை முறியடிக்கும் ஆக்க சக்தி அது!!

சீர்கெட்டுக் கிடந்த தமிழகச் சட்ட ஒழுங்கு நிலையினை நிமிர்த்திக் காட்டிய பாங்கறிந்து, இந்தியத் துணைக்கண்டத் தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பலரும் நம்மை மனந்திறந்து பாராட்டும் நிலையை எய்தி உள்ளோம். தமிழகம் இழந்த பெருமையை மீண்டும் ஈட்டித் தருவதில், நமது அரசும், இயக்கமும் விரைந்து செயலாற்றி வருகின்றன.

இன்றைய தினம், காங்கேயம் மற்றும் அனைத்துத் தொகுதி மக்களின் நல்லா தரவோடு அமைந்துள்ள, உங்கள் சகோ தரியின் தலைமையிலான உங்கள் அரசு, ஒட்டுமொத்த தமிழகத்தின் உயர்வுக்கும் - வளத்திற்கும், உரிய உயர்வான பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஆட்சிப் பொறுப்பேற்று, உங்கள் ஆசியோடு முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த வுடன், முதல் உத்தரவாக மலிவுவிலை மதுக்கடைகளை மூடியதிலிருந்து, அண் மையில் நிலமற்ற ஏழை எளியோர் அனைவர்க்கும் பொங்கல் திருநாளுக் கென, இலவசமாக வேட்டி சேலைகள் வழங்க உத்தரவிட்டது வரை, ஏழை எளியோர் துயர் துடைப்பதையே, குறிக் கோளாகக் கொண்டு செயலாற்றி வரு கிறோம்.

அதே நேரத்தில், நமது திட்டமிட்ட பயணத்தில் பல்வேறு இன்னல்களையும், எதிர்பாராத இடர்ப்பாடுகளையும் சந்திக் கிற பின்னணிக்கு, நாம் தள்ளப்பட்டி ருக்கிறோம். இதில் குறிப்பாக ஏழை களைப் பாதிக்கிற பிரச்சினைகள் பற்றி,



ஏற்கெனவே மக்களின் கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன்.

மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், மத்திய அரசு அரசி விலையை உயர்த்தி உள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்களுக்குப் பதில் சொல்கிற நிலையில், இப்போது நான் இருக்கிறேன். அரிசி விலை உயர்வினால் மற்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் ஏறியுள்ளன. இந்த விலையேற்றத்திற்கான காரணங்களை மட்டும், சாதாரண மக்களுக்குச் சொல்லிவிட்டால் போதுமா?

அதனால் அவர்களைத் திருப்திப்படுத்திவிட முடியுமா? அவர்களைக் கைதூக்கி விடுகிற காரியத்தை, அவர்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் காண, நமது அரசே முன்வர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

உர விலை ஏறியபோது, மண்ணெண்ணெய் விலை ஏறியபோது, டீசல், பெட்ரோல் மற்றும் சமையல் வாயு விலை ஏறியபோதெல்லாம், நான் மத்திய அரசின் கவனத்திற்கு அவைகளை நேரத்தோடும், காலத்தோடும் கொண்டு வந்திருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டின் திட்டச் செலவினை மத்திய அரசு குறைத்துவிட்டது என்று, பல்வேறு விவாதங்கள் மக்கள் மன்றத்தில் இப்போது நடந்து வருகின்றன. ஒரு சிலர், வேறு எந்தப் பிரச்சினையைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்புப் பெறாத காரணத்தினால், திட்டச் செலவுப் பிரச்சினையை முன்வைத்து, நம்மைத் திட்ட முன் வந்திருக்கின்றார்கள். மக்களைத் திசை திருப்ப முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டச் செலவிற்கு, எங்கள் அரசின் செயல்பாடுகள் காரணமில்லை. இருந்தபோதிலும், தமிழகத்தின் ஒட்டுமொத்த நலன் கருதி, இந்த ஆண்டுத் திட்டச் செலவினை மத்திய அரசிடமிருந்து உயர்த்திப் பெறுவதற்கு, அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். திட்டச் செலவுகளுக்குப் பணம் பெறுவதை மட்டும் அளவுகோலாக வைத்து, ஒரு மாநில அரசின் திறமையை, செயல்பாட்டை எவராலும் எடைபோட முடியாது. ஒரு ஜனநாயக நாட்டில், நிர்வாக முடிவுகளுக்கும், அரசியல் முடிவுகளுக்கும் உள்ள தொடர்பை, உண்மையான திறனாய்வாளர்களால்தான் கண்டுகொள்ள முடியுமே தவிர, அரசியல் குழப்பவாதிகளால் அதனை அறிந்து கொள்ளமுடியாது. இந்திய அரசியல் அமைப்பில், மாநிலங்கள் தங்களது எதிர்ப்பை ஜனநாயக முறையில் தெரிவிக்கிற பழக்கம், நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு மாநிலமும், திட்டச் செலவு குறித்து, மத்திய அரசிடம் அந்த வகையில்தான் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

**தொழிலாளர் நலன்**

இப்படிப்பட்ட தடைகளின் மூலம், எங்கள் அரசின் மக்கள் நலப்பணிகளை, எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஆரம்ப காலத்திலேயே, எதிர்ப்பட்ட தடைகளைக் கடந்துதான், இந்த அரசு எல்லா வகையிலும் செயல்பட்டு வருகிறது.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்தான், நாட்டில் மிகவும் குறைந்த வருமானம் உள்ள தொழிலாளர்கள் என்பதை உணர்ந்து, தொழிலாளர்கள் நலன் பேணி, அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கும் எங்கள் அரசு, இந்த ஆண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் நாளையொட்டி, ஒரு கோடியே இருபது இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு, இலவசமாக வேட்டி, சேலை வழங்கி வருகிறது.



**● வீடு சின்னதாக இருக்கும் காரணத்தாலேயே ஒருவருடைய மனமும் சின்னதாக இருக்கும் என்று அர்த்தமல்ல.**

பணப்பற்றாக்குறை உள்ளபோதிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் செயல்வடிவம் கொடுத்துத் துவக்கிய, தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டுக்கு ஆந்திர மாநிலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும்பணி, விரைவில் முடிக்கப்படப் போராடும் உத்வேகத்தில்தான், அண்மையில் ஐதராபாத் நகரில் ஆந்திர முதல்வர் அவர்களைக் கலந்து பேசினேன். விரைவில் புரட்சித் தலைவர் அவர்களின் கனவு நனவாக்கப்படும் என்பதை, மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக் குடிநீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதோடு மட்டும், தண்ணீர்ப் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை.

**ஆத்திரக்காரர்கள்**

தமிழ் மக்கள் தாய் என்று போற்றி வணங்கும் காவிரி நதி நீரைத் தமிழ்நாட்டிற்கு வரவிடாமல் தடுக்கும் சிலரின் நியாயமற்ற முயற்சிக்கு, இந்த அரசு கடுமையாக எதிர்ப்புக் குரல் கொடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். காவிரி நீர் நடுவர் மன்றமும், உச்சநீதி மன்றமும், அரசிதழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பை வெளியிட்ட மத்திய அரசும், நமது நியாயத்தைஉணர்ந்துதான் இருக்கின்றன. ஆனால் அதை உணர வேண்டிய அண்டை மாநிலமான கர்நாடக அரசு மட்டும், அதை உணர்ந்ததாகவே தெரியவில்லை. ஆண்டாண்டுக் காலமாய், கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சிக்கு உழைத்து வரும் கர்நாடகத் தமிழர் மீது, வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சியில், கர்நாடகத் தமிழர்கள் பங்கு எப்படிப்பட்டது என்பதை, கர்நாடகத்தில் வாழும் கன்னட மக்கள் அனைவரும் அறிவார்கள்.

மாநில அரசு மட்டும் மவுனம் சாதிக்கிறது; மக்களைத் திசை திருப்புகிறது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது போல, ஒரு சில கன்னட வெறியர்கள் அவிழ்த்துவிட்ட வன்முறையால், ஒரு இலட்சத்திற்கும் மேலான, ஒரு பாவமும் அறியாத அப்பாவி கர்நாடகத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வன்முறையைத் தூண்டியவர்கள்மீது, கர்நாடக அரசு கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும்; இந்திய ஒருமைப்பாடு காக்க உடன் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பொது வாழ்வில் சுயநலம் தேடும் கர்நாடக வன்முறைக் கும்பல்களைக் கட்டுப்படுத்தி, தமிழ்நாட்டிற்கு ஓடி வந்துள்ள கர்நாடகத் தமிழர்களை, மீண்டும் முன்போலவே கர்நாடகத்தில் பாதுகாப்பாக வாழவைக்க, அனைத்து ஏற்பாடுகளையும் கர்நாடக அரசு செய்து தரவேண்டும். தமிழகத்தின் பெருந்தன்மையை, பொறுமையை, எவரும் பலவீனமாகக் கருதிடக் கூடாது என்று, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயமாகக் கிடைக்க வேண்டிய காவிரி நீர், தற்போதைக்குக் கிடைக்காமல் இழுபறியாய் இருந்தாலும், தமிழகத்தின் பெருந்தன்மைக்கு இயற்கையே உதவும் வகையில், நமது மாநிலத்தில் போதுமான அளவு மழை பெய்து, இந்த ஆண்டு தமிழகத்தில் வேளாண்மை, வெற்றிகரமாக அமையும் சூழ்நிலை உருவாகியுள்ளது கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மேம்பாட்டுக்கு உளப்பூர்வமாக, தீவிரமாக உழைக்கின்ற அரசு எங்கள் அரசு என்பதை, ஆட்சிப் பொறுப்பேற்ற ஒருசில மாதங்களிலேயே, தமிழக மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். தேர்தல் வாக்குறுதிகளாக நாங்கள் அறிவித்திருந்த அனைத்தையுமே, ஒன்றன்

(41—ஆம் பக்கம் பார்க்க)



## மாமல்லபுரம்

# பொங்கல் நாட்டிய விழா

### மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசும் மத்திய அரசும் இணைந்து, மாமல்லபுரத்தில் நடத்தும் இந்தப் பொங்கல் நாட்டிய விழாவில் கலந்துகொண்டு, அதைத் தொடங்கி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மக்கட்பணி ஆற்றி வருகின்ற எனக்கும் நாட்டியத்திற்கும், நிறைய தொடர்பு உண்டு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். பன்னாட்டுப் பயணிகள் நம் நாட்டிற்கு வருகை தந்து, இந்தத் துணைக் கண்டத்தில் உள்ள பல மாநிலங்களுக்குச் சென்று, அங்குள்ள கலை நுட்பங்கள், சிற்பங்களின் பெருமைகள், திருக்கோயில்களின் புராதனம், மக்களின் எளிமை, அவர்களின் உயர்ந்த பண்பு, ஆகியவற்றையெல்லாம் கண்டு களித்து; நமது சிறப்பான வரலாறு, உயர்ந்த நாகரீகம் போன்றவற்றை, ஆழ்ந்து உணர்ந்துகொள்ளக் கூடிய வாய்ப்பினை அவர்களுக்கு இந்த விழா தருகிறது. அந்த அடிப்படையில், இதுபோன்ற விழாக்களை ஏற்பாடு செய்வது, இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

நம் நாட்டிற்கு, குறிப்பாக இவ்வாண்டு, வெளிநாட்டுப் பயணிகள் அதிக அளவில் வரவேண்டும் என்ற நோக்கத்துடன், இதுபோன்ற விழாக்கள் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாநில அரசோடு மத்திய அரசும் இணைந்து இம்முயற்சியில் ஈடுபட முன்வந்துள்ளதை, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். சுற்றுலா வளர்ச்சியில் மத்திய அரசும், மாநில அரசும் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இணைந்து செயல்பட்டால்தான், சுற்றுலா வளர்ச்சியில் சிறந்த சாதனைகளைப் புரிய முடியும். அதற்கு ஒரு முன்னோடியாகத் தான், இன்று இந்தப் பொங்கல் நாட்டிய விழா இங்கே நடத்தப்படுகிறது.

நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை



மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரதநாட்டியம் விளங்குகிறது.

''அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்'' என்று, இறைவனையே பரதக் கலையின் கண் கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

இந்தியத் திருநாட்டின் நடனங்கள், கலைப் பொக்கிஷங்கள் மட்டுமல்ல, அவை இந்திய

## பொங்கல்-நாட்டிய விழா தொடக்க விழா

பொங்கல்-நாட்டிய விழா 15.1.92 அன்று மாலை 6 மணி அளவில் மாமல்லபுரத்தில் தொடங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நாட்டிய நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து, மாமல்லபுரம் நகர் வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விழா தொடங்கு முன்பாக, மாமல்லபுரம் புதிய அமைப்பின் மாதிரி அமைப்பினைப் பார்வையிட்டார். விழாவிற்குச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுற்றுலாத் துறையின் சார்பில் பொன்னாடை போர்த்தினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலா பிரியா இ.ஆ.ப. அவர்களும் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை உரை ஆற்றினார். இதனை அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் அடிக்கற்களைத் திறந்து வைத்தார். ரூ.20 இலட்சம் செலவில் கிழக்கு—ராஜவீதி அபிவிருத்தித் திட்டம், ரூ.88 இலட்சத்தில் பேருந்து நிலையம், 7.07 இலட்சம் ரூபாய் செலவில் கோயில் அருகில் வாகனங்கள் நிறுத்தும் இடம். 5.60 இலட்சம் ரூபாய் செலவில், ஐந்து ரதங்கள் அருகில் வாகனங்கள் நிறுத்துமிடம், மற்றும் 2.87 இலட்சம் ரூபாய் செலவில் ஓய்வெடுக்கும் இடத்தையும் அர்ச்சுனனின்'தவம்' இடத்தை அபிவிருத்தி செய்யவும் அடிக்கல் திறந்து வைக்கப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்தபின், சிறப்புரை ஆற்றினார்.

விழா துவங்கும் வரையில் நாதசுவர இசை வழங்கிய டாக்டர் நாமகிரிப்பேட்டை திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும், பரத நாட்டியம் ஆட இருந்த டாக்டர் பத்மா சுப்பிரமணியத்திற்கும் முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. சு.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவில் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். விழாவிற்கு வருகை தந்திருந்த மக்கள் வெள்ளத்தில் ஏராளமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் காண முடிந்தது.

விழா இறுதியில் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் பரத நாட்டிய நிகழ்ச்சியும், ஆவடி காவல் துறையினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலை நிகழ்ச்சிகளைக் கடைசிவரை இருந்து கண்டுகளித்தார்.

நிகழ்ச்சித் தொகுப்பு
இரா. இராச சேகரன்

## திருக்குறள் அரசு

இன்று திருக்குறள் அரசு நடக்கிறது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்; இதுவரை வேறு எந்த முதல்வரும் இப்படி அறிக்கை விட்டதில்லை. இதற்காகத் தமிழர்கள் அனைவருமே அவரைப் பாராட்ட வேண்டும்.

கோயில்களே ஒழுக்கத்தைக் காக்கும் கல்லூரிகள் என்பதால்தான் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தை முதன்மைப்படுத்தியிருக்கிறார்; மனிதனுக்கு ஒழுக்கம் அவசியம் என்பதால்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோயில் திருப்பணி நிதியைத் துவக்கியிருக்கிறார்; அதையடுத்துத் தண்ணீரின் அவசியத்தைச் சொல்லியிருக்கிறார் திருவள்ளுவர்; இதையுணர்ந்தே தட்டுப்பாடின்றித் தண்ணீர் கிடைக்கவும் செய்திருக்கிறார் காவிரிச் செல்வியாம் நம் முதலமைச்சர். மூன்றாவதாகக் கள்ளுண்ணாமையை வலியுறுத்தியிருக்கிறார் திருவள்ளுவர்; இதையறிந்துதான், நமது முதல்வர் அவர்கள், மதுவிலக்கை மிகத் தீவிரமாக அமல்படுத்தியிருக்கிறார்.

இதற்காகவே புரட்சித்தலைவி அவர்களைக் கோயில் கட்டிக் கும்பிட வேண்டும்.

—திருக்குறளார்
திரு. வீ. முனிசாமி
(16.1.92-இல், திருவள்ளுவர் திருநாளில் பேசியதிலிருந்து)

நாட்டின் ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகவும் விளங்குகின்றன. எனவே, இந்தக் கலைகளைக் கட்டிக்காத்து வளர்ப்பது, நமது தலையாயக் கடமை யாகும்.

இந்தப் பொங்கல் நாட்டிய விழா, வரலாற்றுச் சிறப்புமிக்க, உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரத்தில் நடைபெறுகிறது. மாமல்லபுரம் ஒரு காலத்தில் வளம் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிய இடம். தமிழகத்தின் வரலாற்றுப் புகழையும், பண்பாட்டுப் பெருமையையும், நாகரிக மேம் பாட்டையும், விளக்கிக் காட்டிடும் தொல்பொருள் செல்வங்கள், இங்கு ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்தின் வரலாற்றுக்கு, புகழ் தரக்கூடிய பற்பல உண்மைகள் இங்கே புதைந்து கிடக் கின்றன. எத்தனையோ குடவறைக் கோயில்கள், பாறைச் சிற்பங்கள், கட்டடக் கோயில்கள், பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டு, இன்றும் தமிழகத்தின் பழமைக் கலைகளைப்பறைசாற்றும் சாட்சிகளாக நிலைத்திருக்கின்றன. அதற்கு மேலாக, மாமல்லபுரத்தை நிர்மாணித்த மன்னன், ஓர் கலையுலகையே இங்கு அமைத்துள்ளார்.



மாமல்லபுரத்துக் கலைகள், என்றென்றும் மக்கள் மனதில் அழியாத இடம் பெற்றுள்ளது போல, பன்னாட்டு மக்களை மாமல்லபுரத்தில் வரவேற்று, அவர்கள் தமிழகத்தின் எழில் மிகுந்த கலைகளைக் கண்டு, கேட்டு, இன்புறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பொங்கல் நாட்டிய விழாவும், மக்கள் மனதில் நின்று நிலவி, புகழ்பெற வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சி யில், மாமல்லபுர நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், சுற்றுலா அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்ததிலும், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் கலந்து கொண் டுள்ள அனைத்துக் கலைஞர்களுக்கும், வருகை தந் துள்ள பன்னாட்டுப் பயணிகளுக்கும், இங்கு கூடியுள்ள அனைத்துப் பெருமக்களுக்கும், எனது பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாமல்லபுரம் பொங்கல்-நாட்டிய விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் (15.1.1992) ஆற்றிய உரை**

# நீலகிரி மாவட்ட நலப்பணிகள்



நீலகிரி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டிற்கு ரூ.49.190 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 1,574 நபர்களுக்கு மானியத் தொகையுடன் கூடிய கடன் வழங்கப்படும். இதில் மத்திய, மாநில அரசுகளின் பங்குகளாக ரூ.24.595 இலட்சம் வீதமாக இருக்கும்.

நடப்பு ஆண்டில் எண்ணிக்கை, நிதி அளவு கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்படும்:

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு - மொத்த இலக்கில் 50 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

2. பெண்களுக்கு - மொத்த இலக்கில் 40 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

3. ஊனமுற்ற நபர்களுக்கு மொத்த இலக்கில் 3 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

இதுவரையிலும் மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ரூ.24.594 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

பயனாளிகளின் தேர்வு முடிவு பெற்றுள்ளது. இதுவரையில் மொத்தம் 1,086 நபர்களுக்கு, ரூ.22.634 இலட்சம் வங்கிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சி (டிரைசம்):**

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டிற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 35 நபர்கள் வீதம் மொத்தம் 140 நபர்கள் பல்வேறு பயிற்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் தற்போது 50 நபர்கள் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 300 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ரூ.55.500 இலட்சமும், ஒரு ஊராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.0.910 இலட்சமும், 4 பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு 7.200 இலட்சமும், 9 சிறிய பாலம் கட்டுவதற்கு ரூ.2,899 இலட்சமும், 2 மதிய உணவுக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.2.00 இலட்சமும், 25 தார்ச் சாலைகள் (20.2 கி.மீ.) அமைப்பதற்கு 44.897 இலட்சமும், 9 கப்பிச் சாலைகள் (6.8 கி.மீ.) அமைப்பதற்கு 11.480 இலட்சமும் 21 வடிகால் வேலைகள் செய்வதற்கு 5.997 இலட்சமும், 4 குடிநீர் வினியோகம் செய்வதற்கு 1.140 இலட்சமும், 13 இதர வேலைகளுக்காக 4.847 இலட்சமும், 250 எக்டேர் பரப்பிற்குச் சமூகக் காடுகள் ஏற்படுத்த ரூ. 5.480 இலட்சமும் ஆக ரூ.142.350 இலட்சத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதி ரூ.41.60 இலட்சம் இதுகாறும் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.40.24 இலட்சம் கிராம மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் மற்றும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் வேலைகளை நிறைவேற்றப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

தமிழக அரசு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான சில அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதாகும். இத்திட்டத்தின் கீழ், பருவ நிலைக்கு ஏற்ற வகையில் சாலைகள் அமைத்தல், இதுவரை குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சொந்தக் கட்டடம் இல்லாத பள்ளிகளுக்கு ஒரு சொந்தப் பள்ளிக் கட்டடமும், ஆரம்பப் பள்ளிக்கு ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடமும் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையம் கட்டடம் இல்லாத மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்தல், தெருவிளக்கு போடுதல், ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல் ஆகிய பணிகள்

செய்து தரப்படும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவும் செப்டம்பர் 1992-க்குள் முடிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்ட நிதியுடன் சேர்த்து ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையின் மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செவ்வனே நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நீலகிரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சிப் பணிகள்

இயற்கை எழிலுக்குப் பெயர் பெற்றது நீலகிரி மாவட்டம். இம் மாவட்டத்தில் தேயிலை, காபி, காய்கறிகள், வாசனைப் பொருட்கள் உற்பத்தி போன்றவை முக்கியத் தொழில்களாக இருப்பினும், பட்டு வளர்ச்சித் தொழிலும் இம்மாவட்டத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பட்டு வளர்ப்பு மூலம் இம்மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றம் போன்றவைகளுக்குப் பட்டு வளர்ப்புத் தொழில் முக்கிய காரணமாக அமைகின்றன.

இம்மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி 1981-82-ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு, தற்சமயம் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம், தாழ்த்தப்பட்டோருக்கான சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குன்னூரில் உள்ள மாநில பட்டு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தின் மூலம் 'தமிழ்நாடு வெள்ளை' என்ற வெள்ளை நிற நாட்டினக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, மத்திய பட்டு ஆராய்ச்சி மையத்தினரால் சிறந்த இனம் என ஒப்புதல் பெற்றுள்ளது இதன் சிறப்பாகும்.

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

1991-92-ஆம் ஆண்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.9.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி 50.00 ஏக்கரில் புதிதாக முசுக்கொட்டை நடவு செய்யப்பட்ட மாதம் ரூ.150 உதவித்தொகையுடன் 51 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ள்ளது. இதில் 31 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள். இதன்பின் தலா ரூ.300 மதிப்புள்ள இலவசப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்கப்படவுள்ளன். அடுத்த ஆண்டில் நடவு மேற்கொள்ளத் தனியார் மூலம் சாம்பல் நோய் தாக்காத இன்மாக எம்ஆர்.2 இனத்தில் 2.0 இலட்சம் நாற்றுகளும், அரசுப் பண்ணைகளின் மூலம் 1.44 இலட்சம் நாற்றுகளும் நடவு செய்யப்பட்டுள்ளன.

> அறியாமை-இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம், குருட்டு நம்பிக்கையின் அன்னை, சங்கடம் தோன்றிய இடம், அழிவும், வறுமையும் வாழ்ந்து வரும் தாயகம்.
>
> —இங்கர்சால்

இந்த ஆண்டில் குன்னூர் அருகே உள்ள ஸ்பிரிங்பீல்டு பட்டுப் பண்ணையில் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க ரூ.3.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பண்ணைக்காக 2.00 ஏக்கரில் முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வெள்ளேரிக் கம்பையில் உள்ள ஆதிவாசிகள் பண்ணையைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்க ரூ.0.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் தலா ரூ.8,500 வீதம் 51 நபர்களுக்குக் கடன் வழங்கி அதில் 20 பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 15 சதவிகித மானியமும், 31 தாழ்த்தப்பட்ட, மலைச்சாதியினருக்கு 25 சதவிகித மானியமும் வழங்கத் தொகை ஒதக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் இதுவரை 26 நபர்களுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1989-90-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1991-92-ஆம் ஆண்டு முசுக்கொட்டை விரிவாக்கம் இலக்கு 125.00 ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டு 120.00 ஏக்கர் முசுக்கொட்டை நடவு செய்யுப்பட்டுள்ளது. இதில் 40 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு தலா ரூ.150 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்குத் தலா ரூ.150 மதிப்புள்ள விஞ்ஞானப் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. இதில் 12 நபர்கள் தாழ்த்தப்பட்ட, மலைச் சாதி இனத்தவர்கள், 20 பேர் பெண்கள். இத்திட்டத்தின் மூலம் தலா ரூ.8,500 வீதம் 42 நபர்களுக்கு மானியமில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 85,000 முட்டைத் தொகுதிகள் வளர்த்து சுமார் 28.0 இலட்சம் மதிப்புள்ள 22,350 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், சரக உதவி ஆய்வாளர், இளநிலை ஆய்வாளர்கள் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

### பைவோல்டின் பண்ணை, மசக்கல்

இந்தப் பண்ணையில் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யத் தேவையான இரு சுழற்சி இனப் (பைவோல்டின்) பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசு வித்தகம் கோவைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் 1991-92-ஆம் ஆண்டில் 1.15 இலட்சம் இரு சுழற்சி இன விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### இளம்புழு வளர்ப்பு மையம் தெங்குமாராஹாடா

இந்தப் பண்ணை மூலம் நவீன முறையில் இளம்புழு வளர்த்துத் தருவதால் தனியார் விவசாயிகள் முதிர்ந்த புழு வளர்ப்பில் தோல்வியைத் தவிர்த்து அதிகப் பட்டுக் கூடுகள் அறுவடை செய்கிறார்கள். இம்மையத்தில் 1991-92-ஆம் ஆண்டில் 36.600 முட்டைத் தொகுதிகள் இளம் புழுக்களாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பது அமர கவியின் வாக்கு. இவ்வாக்கினை அடிப்படையாகக் கொண்டு பட்டுத் தொழில் வளர்ச்சி நீலகிரி மாவட்டத்தில் செம்மையுற நடைபெற்று வருகிறது.

-மூ.நா. கிருஷ்ணசாமி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

# தகவல் தொடர்பில் அஞ்சல் துறையின் அரிய சாதனை

நமது நாட்டில் தகவல் தொடர்பில் முக்கியப் பங்கு வகிப்பது அஞ்சல் துறையே ஆகும். இந்தியாவின் மக்கள் தொகையில் பாதிக்குமேலானோர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள். தொலைதூரப் பகுதிகளிலும் மூலை முடுக்குகளிலும் வசிக்கும் இந்த மக்களுடன் தொடர்பு கொள்ள உதவும் ஒரே சாதனம் கடிதப் போக்குவரத்தே ஆகும்.

உலகத்திலுள்ள அனைத்து நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது தபால் துறையே மிகப் பெரிய விரிந்த துறையாகும். ஆண்டுதோறும் சுமார் 4,000 மில்லியன் கடிதங்களை இத்துறை கையாளுகிறது. இந்தியாவிலுள்ள மொத்தம் 1,47,500 அஞ்சல் அலுவலகங்களில் சுமார் 89 சதவிகிதம் (1,32,500) கிராமப்புறங்களில் நிறுவப்பட்டுள்ளன. நமது நாட்டின் மிகத் தொன்மையான துறைகளில் ஒன்றான அஞ்சல் துறை, சுமார் 6 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தகவல் தொடர்பில் ஈடுபட்டுள்ள பிற துறைகள், நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு மிக வேகமாக முன்னேறி வந்தாலும், அஞ்சல் துறையும் தனது சேவையில் பின்தங்கிவிடவில்லை. அஞ்சல் அலுவலகங்களில் போதிய இடவசதியின்மை, ஒழுங்கற்ற முறையில் விரைவில் உருவாகிவிடும் நகரங்கள், கடிதங்களை விரைவில் பட்டுவாடா செய்வதற்கு இடையூறாக உள்ள போக்குவரத்து நெரிசல்கள், நாளுக்கு நாள் பெருகிவரும் ஆயிரக்கணக்கான கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்தக் கிடைக்கும் குறுகிய காலம் போன்ற பல இடையூறுகள் அஞ்சல் துறையின் பணியை மிக வெகுவாகப் பாதித்த போதிலும், இத்துறை தனது பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு செவ்வனே பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது.

அஞ்சல் துறையின் பணியினை மேம்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்ட நிபுணர் குழு 1980-இல் அளிக்கப்பட்ட தனது அறிக்கையில், அஞ்சல் துறை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தது. இதன் அடிப்படையில் இந்திய அஞ்சல் பணியில் நவீன தொழில்நுட்பங்களைப் படிப்படியாகப் புகுத்த அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

நமது நாட்டில் சென்னை, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் உச்சி வேளைகளில் பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் வந்து குவிகின்றன. இவைகளைக் குறுகிய காலத்திற்குள் பிரித்து பட்டுவாடா செய்யவேண்டியிருக்கிறது. மனிதர்களைக் கொண்டு இவற்றைப் பிரிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதால், ஒரு நாளைக்கு 30 ஆயிரம் கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்தக்கூடிய அஞ்சல் பிரிக்கும் இயந்திரங்களைக்கையாள அஞ்சல் துறை தீர்மானித்துள்ளது. இதன்படி முதல்கட்டமாக சென்னை, டெல்லி, கல்கத்தா, பம்பாய், பெங்களூர், ஆமதாபாத், ஐதராபாத் ஆகிய நகரங்களில் இத்தகைய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைப்போல அஞ்சல் அலுவலகங்களில், மணியார்டர்கள், பதிவு அஞ்சல்கள், பார்சல்கள், துரித அஞ்சல் (Speed Post) போன்றவற்றைக் கையாளுவதில் ஏற்படும் நீண்ட காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், நாட்டின் பல்வேறு அஞ்சல் அலுவலகங்களிலும் உள்ள சுமார் 8,000 கவுண்டர்களை இயந்திரமயமாக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவைகளில் பலநோக்குப் பயனுடைய இயந்திரங்களைக் கொண்ட கணிப்பொறிச் (Computer) சாதனங்கள் நிறுவப்படும். இவற்றால் கடிதப் போக்குவரத்து துரிதப்படுத்தப்படுவதுடன், அஞ்சல் அலுவலகங்களில் தற்சமயம் நிலவும் இடநெருக்கடியும் கணிசமான அளவுக்குக் குறையும்.

மணியார்டர்களைப் பட்டுவாடா செய்வதில் ஏற்படும் காலதாமதம் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், இன்னும் நமது நாட்டிலுள்ள சில கிராமங்களுக்கு மணியார்டர் சென்றடைய 15 நாட்களுக்கு மேல் ஆகிறது. கிராமப்புறங்களில் மணியார்டர்களைக் காலதாமதமின்றி உடனுக்குடன் பட்டுவாடா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மணியார்டர்கள் மற்றும் கடிதங்களைத் துரிதமாக அனுப்ப மின்னணுச் சாதனங்கள் (Electronic Money Order Transfer) அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

நகரங்களில் நாளுக்குநாள் உருவாகிவரும் பல மாடிக் கட்டடங்களில் குடியிருப்பவர்களுக்கு வீடுவீடாகச் சென்று தபால் பட்டுவாடா செய்வதில் அஞ்சல் துறைக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டும், கடிதங்களை விரைவில் பட்டுவாடா செய்யவும் பல மாடிக் கட்டடங்களில் குடியிருப்பவர்கள் தங்கள் கட்டடத்தின் அடித்தளத்தில் தனியாகத் தபால் பெட்டி வைத்து அஞ்சல் துறைக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்எனவும்வேண்டுகோள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டபூர்வமான ஆணை 1991 நவம்பர் 1 முதல் அமலுக்கு வந்துள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் நாட்டில் எந்த ஒரு கிராமமும் 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அஞ்சல் நிலையம் இல்லை என்ற குறையைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர, தற்போது நடைமுறையிலிருக்கும் உள்நாட்டுத் துரிதக் கடிதப் போக்குவரத்துப் போல, பம்பாய், டெல்லி நகரங்களிலிருந்து பன்னாட்டுத் துரித கடிதப் போக்குவரத்தை 1992-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் அறிமுகப்படுத்த அஞ்சல் துறை திட்டமிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.



திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில்

# பட்டுத் தொழில் வளர்ச்சி

தென் மாவட்டங்களில் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பட்டுத் தொழிலில் முன்னணியில் விளங்குகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பட்டுத் தொழில் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் 2,732 ஏக்கரில் பட்டுச் செடி நடவு செய்த 3,500 விவசாயிகள் பட்டுத் தொழில் செய்து வருகின்றனர். ஒரு ஏக்கரில் மல்பரி நடவு செய்தால் 5 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புக் கிடைத்து வருகிறது. பட்டுத் தொழிலை ஊக்கப்படுத்த அரசு பல திட்டங்களையும் உதவிகளையும் அளித்து வருகிறது.

திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டப் பட்டுத் தொழில் மையம் இயங்கிவருகிறது. இம்மாவட்ட மையத்தின்கீழ் ஐந்து தொழில்நுட்பச் சேவை மையங்கள் பழனி, வத்தலகுண்டு, வேடசந்தூர், சாணார்பட்டி, நத்தம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இம்மையங்கள் மூலம் பட்டுத் தொழில் செய்யப் புதிய விவசாயிகளைத் தேர்வு செய்தல், அவர்கள் மல்பரி செடி நடவு செய்யத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்குதல், விவசாயிகட்குத் தேவையான பட்டுப் புழு வளர்ப்புப்பயிற்சி அளித்தல், பட்டு முட்டைகள் வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன. இந்த ஐந்து தொழில்நுட்பச் சேவை மையங்களில் 45 சரக அலுவலர்கள் இந்தப் பணியைச் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு 300 விவசாயிகட்குப் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக் காலத்தில் ரூ.150 உதவித் தொகையாகவும் ரூ.150 மதிப்புள்ள உபகரணங்களும் வழங்கப் படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ஆயிரம் விவசாயிகட்குப் பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

உலக வங்கி உதவியுடன் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு மொத்த ஒதுக்கீடான ரூ.41.7 கோடியில் ரூ.2 கோடி இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு 1989-90-இல் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. 1991-92 திட்டத்தின் மூன்றாவது ஆண்டு ஆகும். ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 1,500 ஏக்கர் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு முடிய 900 ஏக்கர் நடவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புதிதாக மல்பரி நடவு செய்யும் விவசாயிகட்கு, மல்பரி நாற்றுக்கள் ஏக்கருக்கு 5,000 என்ற விகிதத்தில் வழங்கப் பட்டு வருகின்றன. நாற்றுக்கென அரசு ஏக்கருக்கு ரூ.300 மானியம் வழங்குகிறது. புது நடவு செய்த விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி அளித்தல், அவர்கட்குப் புழு வளர்ப்புத் தளவாடச்சாமான்கள் புழு வளர்ப்பு மனை கட்ட ரூ.7,500 வங்கிகள் மூலம் கடன் பெற உதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், திண்டுக்கல்லில் ஏற்கெனவே உள்ள பட்டு முட்டை வித்தகம், பட்டுக்கூடு அங்காடி ஆகியவை சுமார் ரூ.25

இலட்சம் செலவில் விரிவுபடுத்தப் பட்டு வருகிறது.

புதியதாகப் பட்டுநூற்பு ஆலைகள் தொடங்க உள்ள பட்டுநூற்பாளர் களுக்கு நடைமுறை மூலதனக் கடன் பெற உதவி செய்யப்படுகிறது. இதில், ஒரு பேசினுக்கு ரூ.9,000 வங்கிக் கடன் பெறவும் அவ்வாறு கடன் வழங்கும் வங்கிகளுக்கு ஒரு பேசினுக்கு ரூ.4,500 அரசு நிரந்தர இட்டு வைப்பு வழங்குகிறது. அதி லிருந்து வரக்கூடிய வட்டியின் ஒரு பகுதி, கடன் பெற்ற நூற்பாளருக்கு வட்டி மானியமாக வழங்கப்படு கிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 120 பேசின்களும் 14 சர்க்காக்களும் பட்டுநூற்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 300 பெண்கள் நிரந்தர வேலைவாய்ப்புப் பெற்று வருகின் றனர்.

விவசாயிகட்குத் தரமான முட்டை வழங்க ஆண்டுக்கு 10 இலட்சம் முட்டை உற்பத்தி செய்யும் திறனு டன் ஒரு பட்டு முட்டை வித்தகம் செயல்பட்டு வருகிறது. இவ்வித் தகம், மதுரை, பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளின் தேவை களையும் பூர்த்திசெய்து வருகிறது. இது தவிர, நடப்பு ஆண்டில் ஒரு தனியார் வித்தகம் திண்டுக்கல்லில் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத் தின்கீழ், செயல்பட்டு வருகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளைத் தரத்திற்கேற்ற நியாயமான விலைக்கு விற்பனை செய்ய திண்டுக்கல்லில் அரசு பட்டுக் கூடு அங்காடி செயல்பட்டு வரு கிறது. இங்கு அரசு மற்றும் தனியார் பட்டுநூற்பாளர்கள் ஏல முறையில் பட்டுக்கூடு கொள்முதல் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு 1.5 இலட்சம் கிலோ கூடுகள் அங்காடி மூலம் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றன. தேசியப்பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், புதிய பட்டு நூற் பாளர்களுக்குத் தேவையான தொழி லாளர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு கிராமியப் பட்டுநூற்பு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, ஆண்டுக்கு 40 பெண்களுக்கு 6 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ஒரு பயிற்சியாளருக்கு ரூ.250 பயிற்சித் தொகை வழங்கப் படுகிறது. மூன்று ஆண்டுகளில் 128 பயிற்சியாளர்கட்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. உதவித் தொகை மற்றும் கச்சாப் பொருள் ஆகியவற்றுக்கு ஆண்டுக்கு ரூ.4.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மாதிரி மல்பரி, பண்ணைகள் மூன்று சின்னகலையம்புத்தூர், நாகம்பட்டி, வேல்வார்க்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இங்கு இளம்புழு வளர்த்து விவசாயிகட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுக்கு 45,000 முட்டைகள் வளர்த்து விநியோகம் செய்யப்படு கின்றன. இங்கு மல்பரி நாற்றுகள் வளர்த்து விவசாயிகட்கு வழங்கப் பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை அபி விருத்தித் திட்டத்தின்கீழ், 100 விவசாயிகட்கு 1991-92-ஆம் ஆண்டில் 2.63 இலட்சம் செலவில் திட்டம் அனுமதிக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், புதியதாக நடவு செய்யும் விவசாயிகட்குப் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி, கல்விச் சுற்றுலா, புழு வளர்ப்பு மனை கட்ட புழு வளர்ப்புத் தள வாடம் மற்றும் செடி நடவு செய்யக் கடன் ரூ.9,000 வழங்கப்பட்டு அதில் 25 சதம் மானியமாக வழங்கப் படுகிறது.

இம்மாவட்டத்தில் ஏழு தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இந்நிறுவனங்கள் ஒவ் வொன்றுக்கும் 10 ஏக்கரில் மல்பரி நடவு செய்யவும், 20 பெண்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், 20 புழு வளர்ப்பு மனைகள் அமைத்து அதில் தேவையான உபகரணங்கள் வைக்க வும் பயிற்சி பெற்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் 0.50 ஏக்கர் மல்பரி தோட்டமும் புழு வளர்ப்பு மனை அதற்குத் தேவையான உபகரணங் களும் வழங்கப்பட்டு உள்ளன. 5 ஆண்டுகள் கழித்து இதிலிருந்து வரக்கூடிய வருமானத்தைச் சேமிப்பு செய்ததன் மூலம் சொந்த நிலம் வாங்கி இதே தொழிலைத் தொடரத் திட்டமிடப்பட்டு 1,440 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு ஆகும் மொத்தம் ரூ.16.10 இலட்சத்தில் அரசு உதவியாக ரூ.11.16 இலட்சம் ஏழு தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

திண்டுக்கல், பழனி, நத்தம், நிலக்கோட்டை ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் கூட்டுறவுச் சங் கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை விவசாயிகட்குத் தேவையான இடுபொருள்கள் வழங்கவும், மேலும் தேவையான சேவைகளைச் செய்து வருகின்றது. இங்கு பட்டுநூல் முறுக் கேற்றும் பணி நடைபெற்று வரு கின்றன. இங்கு சின்னாளப்பட்டி யில் ரூ.4 இலட்சம் செலவில் பெண்களுக்கான பட்டுநூல் நூற்பு மற்றும் முறுக்கேற்றும் சங்கம் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இச்சங்கத்தில் 60 பெண்கள் அங்கத்தினர்களாகவும், சங்கத்தில் பணி செய்வதன் மூலம் நிரந்தர வேலைவாய்ப்பும் பெற்று வருகின் றனர்.

**மு. பிச்சையா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

## சாலை விபத்துக்கள் குறைந்துள்ளன!

**1990**-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1991-ஆம் ஆண்டில் சாலை விபத் துக்கள் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.

1990-இல் நடந்த 5,877 விபத்துக் களில், 481 பேர் இறந்துள்ளனர். 1991-இல் 5,103 விபத்துக்களில், 416 பேர் இறந்துள்ளனர்.

சென்னை நகரில் போக்குவரத்து விதி களை மீறியதற்காக 1991-இல், 1,01,513 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் அதிக வேகமாக வாகனங்களை ஓட்டிய தற்காக 36,798 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதேபோல சமிக்ஞை களை மதிக்காமல் சென்றதற்காக 26,557 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

இந்தத் தகவல்களைச் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ராஜகோபாலன் தெரிவித்தார்.



# திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாள் விழா, தமிழ்நாடு அரசு சார்பில் 16.1.1992 அன்று மாலை சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழா மேடையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர் படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ் விழாவில் கலந்துகொண்டு - திருவள்ளுவர் விருது, சிறந்த நூல்களுக்குப் பரிசு, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி, தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதிய அரசு அலுவலர்களுக்குப் பரிசுகள் ஆகியவற்றை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

**வரவேற்புரை**

தமிழ்த்தாய் வாழ்த்தோடும், டாக்டர் சிவ சிதம்பரம் பாடிய திருக்குறள் வாழ்த்தோடும் தொடங்கிய இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்புரையாற்றினார்.

'இந்த நந்நாள், தமிழ் வளர்ச்சித் துறைக்கு வாய்த்த ஒரு பொன்னாள்; இந்த நாளில் புரட்சித் தலைவர் அவர்களே திருவள்ளுவர் விருது வழங்கும் முறையினைக் கொண்டு வந்தார்; இன்றைய தினம் அதற்கு ஆக்கம் தருகிறார் புரட்சித் தலைவி அவர்கள்; புதியதோர் வரலாற்றைப் பொன்னெழுத்துக்களால் பொறித்து வருகிறார்' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்.

**தலைமையுரை**

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில்–

'புரட்சித் தலைவியின் அரசு காயாத சூரியனாகத் தேயாத சந்திரனாகப் பவனி வந்துகொண்டிருக்கிறது. காய்கின்ற சூரியன் வெளியே எங்கோ இருக்கலாம்; அது மாலை





தமிழ்நாடு புகழ் கண்டதற்கு, ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வான்புகழ் கொண்டதற்கு ஒரே காரணம், வள்ளுவர்! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். கவிஞர்கள் வார்த்தைகளைச் செதுக்கிச் செதுக்கி எழுதுகிறவர்கள்.

வள்ளுவனைத் தமிழ்நாடு ஊருக்குத் தரவில்லை; ஒரு நாட்டுக்குத் தரவில்லை; ஓர் இனத்துக்குத் தர வில்லை; ஒரு மொழிக்குத் தர வில்லை; உலகுக்கே தந்தது - என்று உணர்ந்து உணர்த்தினார் பாரதியார்.

'திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவொளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது' - என்று தீர்ப்புக் கூறினார் தந்தை பெரியார்.

யில் மறைந்துவிடும். இந்தச் சூரியனோ, மாலை வந்தும் மறையாமல் இருப்பதோடு, தேயாத சந்திரனாகி ஒளிவீசி ஜொலிக்கிறது; அதனால்தான் காயாத சூரியன் தேயாத சந்திரன் என்று நான் குறிப்பிடுகிறேன்' என்றார்.

**சிறப்புரை**

திருவள்ளுவர் திருநாள் விழாவில்-திருக்குறளார் திரு. வீ.முனுசாமி அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

**முதல்வர் உரை**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, இருபதாயிரம் ரூபாய்க்கான காசோலையும் வாழ்த்தும் உடையதான திருவள்ளுவர் விருதும், 42 சிறந்த நூல்களுக்குப் பரிசும், அவற்றைப் பதிப்பித்தோர்க்குச் சான்றிதழ்களும், அகவை முதிர்ந்த 20 தமிழறிஞர்களுக்குப் பரிவுத் தொகையும், தமிழில் சிறந்த வரைவுக் குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர் மூவருக்குப் பரிசுகளும் வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழறிஞர்களும், தாய்மார்களுமாகப் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்த இவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை விவரம் வருமாறு:

'உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல் தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரீகம் தமிழ் நாகரீகம்! அந்தப் பெருமைமிகு தமிழ் இனத்தின் தலையாய நூல் திருக்குறள்! இருபது நூற்றாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது, இந்த நூற்றாண்டுக்கும் உரியதாக விளங்க முடியு மென்றால், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் ஏற்றது என்றால், அந்த ஒப்பிலாச் சிந்தனைச் செறிவை என்னவென்று சொல்வது?

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது; சாதாரண மக்களாலும் புரிந்து கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது; நடையிலே எளியது; ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு - திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர், திருவள்ளுவர்.

There hardly exists in the literature of the world a collection of maxims in which, we find so much lofty wisdom.

- அதாவது, 'உலக இலக்கியம் எதனினும், இவ்வளவு உயரிய ஞானத்தை உள்ளடக்கிய அறவுரைத் தொகுப்பு அமைந்ததில்லை' என்கிறார் ஆல்பிரட் சுவிட்சர்.

மன்னருக்கு நீதி சொன்னவர்கள், சின்னவருக்குச் சொன்னதில்லை. எளியோருக்குச் சட்டமியற்றியவர்கள், வலியோருக்கு அதை வகுத்ததில்லை. இந்த மரபை, 2,000 ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு தமிழ்ச் சிந்தனையாளர் உடைத்திருக்கிறார் என்றால், அது தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். அரசருக்கு, அமைச்சருக்கு, மக்களுக்கு, ஆசிரியருக்கு, மாணவருக்கு, தலைவருக்கு, தொண்டருக்கு, இல்லறத்தாருக்கு, துறவறத்தாருக்கு, பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு, ஆடவருக்கு, பெண்டிருக்கு என்று - எல்லோருக்கும் வாழும் வழியையும், நெறியையும் வகுத்துக் கொடுத்தவர், வள்ளுவர். அவர் ஓர் யுகத்துக்குரியவரல்லர்; எல்லாக் காலத்துக்கும் ஏற்றவர்.

வள்ளுவரின் பொருட்பாலில், கள்ளுண்ணாமை வலியுறுத்தப் பட்டதைப் போல், விந்தியத்துக்கு இப்பாலும், அப்பாலும், எவராலும் சொல்லப்படவில்லை.

'துஞ்சினார் செத்தாரின்
வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'.

- கள் உண்பவர்கள் விஷத்தை உண்பவர்கள் என்று, வள்ளுவப் பெருமான் கண்டித்துச் சொல்கிறார். வள்ளுவருக்கு நாம் செய்யும் வழிபாடு, அவர் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதுதான். எவ்வளவு இடர்ப்பாடுகளும், எதிர்ப்புகளும், இழப்புகளும் இருந்தாலும், அவற்றை முகமலர்ச்சியுடன் தாங்கி, வள்ளுவன் உரைத்த கள்ளுண்ணாமையைத் தமிழ்நாடு கடைப்பிடிக்க, எங்கள் அரசு எடுத்துவரும் தளராத முயற்சிகளை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை, வேத வாக்காகக் கொண்டு, மதுவை ஒழிக்கப் போராடும் என் முயற்சிகளுக்கு, ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டியது, உங்கள் கடமை ஆகும்; தங்களது இணையற்ற எழுத்தோவியங்களுக்காக, தமிழ்த் தொண்டிற்காக, பரிசு பெறும் படைப்பாளர்களின் கடமையும் ஆகும் என்பதை, அன்போடு நினைவூட்டக், கடமைப்பட்டிருக்கிறேன்.

1985-ஆம் ஆண்டு நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'திருவள்ளுவர் விருது' வழங்கும் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ், திருக்குறள் தொடர்பான நூல் எழுதுபவர், அல்லது திருக்குறள் தொடர்பானகருத்துக்களைப்பரப்புபவர் ஒருவரை, ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுத்து 'திருவள்ளுவர் விருது' வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு திருவள்ளுவர் விருதினை நமது மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் பெறுகிறார்கள் என்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நாவலர் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை நூல்' உரைநூல்களில் சிறந்ததாக, உண்மைக்கு உகந்ததாக, அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளதை, தமிழ் நல்லுலகம் பாராட்டுகின்றது. நாவலர் அவர்களுக்கு நான், இன்று 'திருவள்ளுவர் விருதினை' வழங்கிச் சிறப்பிப்பதில், பெருமை அடைகின்றேன். அவரது தமிழ்த்தொண்டு மென்மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, வள்ளுவப் பெருந்தகையாரை நினைவுகூரும் வகையில், 'திருவள்ளுவர் விருதும்', சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசுகளும் வழங்குவதில், பெருமிதம் அடைகின்றேன். இந்த விழாவிலேயே அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு, அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் முகத்தான், நிதி உதவி அளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



• இழிவின் மூலகாரணம் என்னவென்று சிந்தித்துப் பார்த்து, அவ்விழிவு பின் சந்ததிக்கும் என்றென்றும் திரும்பி வரமுடியாதபடி, பரிகாரம் தேடுவதே உண்மையான சீர்திருத்தவாதியின் கடமை.

நாட்டிற்கும், மக்களுக்கும், மொழிக்கும், உழைத்த நல்லவர்களை நாம் நினைவுகூர வேண்டும், பாதுகாத்து அரவணைக்க வேண்டும், என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணங்களை, அவர் வழி நடக்கும் எங்கள் அரசு, தொடர்ந்து தொய்வில்லாமல் செயல்படுத்தும்.

**நன்றியுரை**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின், பரிசு பெற்றோர் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'திருவள்ளுவர் விருதோடு எனக்குப் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியுள்ள இந்த இருபதாயிரம் ரூபாயையும் மாணவர் பரிசுத் திட்டத்திற்காக அளிக்கிறேன். அதாவது பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியரிடையே திருக்குறள் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெறுவோருக்குப் பரிசு வழங்கப்படும். இந்த இருபதாயிரம் ரூபாயும் வைப்பு நிதியில் போடப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு இந்தப் பரிசு அளிக்கப்படும்'- என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

விழா முடிவில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு. த. பெரியாண்டவன் அவர்கள் நன்றி கூறினார். •





# சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

ஒவ்வொர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

அதற்கேற்ப, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை 1991 செப்டம்பர் தொடங்கி ஓராண்டில் நிறைவேற்றி முடிக்க முதல்வர் அவர்கள் தகுந்த ஆணை களைப பிறப்பித்துள்ளார்.

அவ்வாணைப்படி, இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில் தொடங்கப்பெற்று 1992-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுறவிருக்கிறது. அனைத்துப் பணிகளும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில் ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளது சிறப்பிற்குரியதாகும்.

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ரூ.194.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கேற்ப நிதி வசதியை உரிய நேரத்தில் அரசு ஒதுக்கும்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் 7 முக்கிய அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், தொடக்கப் பள்ளிகளுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் இத்திட்டத்தில் அடங்கும்.

கிராமங்களுக்கருகில் உள்ள முக்கிய சாலையிலிருந்து 1.60 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள 1000-க்கு அதிகமாகவும் 500-லிருந்து 1000-க்குக் குறைவாகவும் மக்கள் தொகையுள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். இதனால் கிராம மக்கள் நகரங்களுடன் எளிதாகத் தொடர்பு கொள்ளவும், வேளாண்மை, கைவினைப் பொருட்கள் போக்குவரத்திற்கும் சிறந்த வசதிகள் ஏற்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. நடப்பாண்டில் ரூ.83.34 கோடி செலவிட்டு 3,874 கி.மீ. சாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

குடிநீர் வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தர இத்திட்டம் வகை செய்கிறது. தவிர, கோடைக் காலத்தில் குடிநீர் வசதியேயில்லாத அல்லது மிகக் குறைந்த வசதியுள்ள வாழ்விடங்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படும். 1991-92-ஆம் ஆண்டில் 5,999 வாழ்விடங்களுக்கு ரூ.53.36 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தர அரசு முடிவு செய்துள்ளது.

புதிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்படுவதுடன், தற்போது இவ்வசதியைப் பெற்றுள்ள இடங்களில் உள்ள குறைகள் களையப்படுவதுடன் கூடுதலாகத் தெரு விளக்குகள் அமைத்துக் கிராமங்கள் ஒளிமிகுந்த இடங்களாக மாறும்



**எஸ்.பி. இளங்கோவன்,**
**இ.ஆ.ப.,**
**அரசுச் செயலர்,**
**ஊரக வளர்ச்சித்துறை**
**சென்னை.**



பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;

நாள் அண்மையிலேயே உள்ளது. இவ்வாண்டில் ரூ.19.88 கோடி செலவில் 69,781 தெரு விளக்குகள் தமிழகக் கிராமங்கள் அனைத்திலும் அமைக்கப்பட்டு ஒளிவீசத் தொடங்கும்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள குளங்களையும், பழைய ஜமீன் குளங்களையும் மேம்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு அவை தரமுள்ளதாக நிலைப்படுத்தப்படவுள்ளன. நடப்பாண்டில் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், கசிவுநீர்க் குட்டைகள் உட்பட 2,677 பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கால்வாய்கள் தூர் எடுக்கும் பணியும் இதில் அடங்கும். பல்வேறு இடங்களிலுள்ள கால்வாய்களைத் தூரெடுக்கும் மொத்த நீளம் 1,305 கி.மீ. இவற்றிற்கென ரூ.11.82 கோடி செலவாகுமென கணக்கிடப்பட்டு நிதி வசதி செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் அரசினரால் நடத்தப்படும் தொடக்கப் பள்ளிகளுக்கு நிலையான கட்டடங்கள் ஒன்றேனும் இல்லாதிருந்தால் இத்தகைய இடங்களில் ஒரு பள்ளிக் கட்டடம் அமைக்கப்படும். தொடக்கப் பள்ளிகளின் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்து 1,068 கட்டடங்கள் ரூ.14.79 கோடி செலவில் அமைக்கப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு நிலையங்களுக்கு நிலையான கட்டடங்கள் உருவாக்கப்படும். இந்த பணிக்காக ரூ.9.98 கோடி செலவு செய்யப்பட்டு 1,409 கட்டடங்கள் கட்டப்படும்.

வேளாண்மை, கால்நடை, துப்புரவு, ஊரக வளர்ச்சி, கேளிக்கை போன்ற நிகழ்ச்சிகளைக் கிராம மக்கள் கண்டு களித்துப் பயனடைய 978 தொலைக்காட்சிப் பெட்டிகளும் உண்டு. இதற்காக ரூ.1.45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு தொடங்கி ஈராண்டுகளில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும். அப்போது 7,502 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டு கசிவு நீர்க் குட்டைகள் உட்பட 3,231 சிறு பாசனத் திட்டங்கள் சீரமைக்கப்பட்டுவிடும். மேலும் 2,198 தொடக்கப் பள்ளிகள் 2,879 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்கள் கட்டப்பட்டுவிடும். 8,972 வாழ்விடங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு 1,94,000 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். மேலும் 2,910 கி.மீ. தொலைவுப் பாசன வாயக்கால்களில் தூர் எடுக்கும் பணி நிறைவடையும். தவிர 1,861 ஊராட்சிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். ஈராண்டுகளிலும் இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.387.24 கோடியாகும்.

மாநில அளவில் இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றிடும் பொறுப்பை ஊரக வளர்ச்சி ஆணையரிடமும், மாவட்ட அளவில், ஊரக வளர்ச்சி முகமைகளின் தலைவர்களுமான மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது. ●

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 16.1.1980 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதையும், அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரா, கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் முக்கியமான இடங்களையும் இப்போக்குவரத்துக் கழகம் தனது இயக்க எல்லைகளாகக் கொண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாட்டில் 124 வழித்தடங்களிலும், கர்நாடக மாநிலத்தில் 29 வழித்தடங்களிலும், ஆந்திர மாநிலத்தில் 21 வழித்தடங்களிலும், கேரள மாநிலத்தில் 24 வழித்தடங்களிலும், பாண்டிச்சேரியில 22 வழித்தடங்களிலும், மூன்று மாநிலங்கள் உட்பட 6 வழித்தடங்களிலும் ஆக மொத்தம் 226 வழித்தடங்களில் 848 பேருந்துகளை இயக்கி வருகிறது. 31.12.1991 வரை 924 பேருந்துகளைத்தன்னகத்தே கொண்ட இப்போக்குவரத்துக் கழகத்தில் 122 சொகுசுப் பேருந்துகளும் (Deluxe Coach) அடங்கி உள்ளன.

ஒரு நாளில் சுமார் 6 இலட்சம் கி.மீட்டர் தூரம் இயக்கப்படும் இப்பேருந்துகளில் ஒரு நாளைக்குச் சராசரி 1.15 இலட்சம் பயணிகள் பயணம் செய்கிறார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகம் 20 பணிமனைகளையும், 4 தொழிற்பட்டறைகளையும், 3 ஒட்டுநர் தொழிற் பயிற்சி நிலையங்களையும் கொண்டுள்ளது. மேலும் ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் (I.T.I.) இப்போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப் பட்டு வருகிறது. பயணிகளின் வசதிக்காக மாநிலம் முழுவதும் 15 சிற்றுண்டிச் சாலைகளையும், 5 சாலையோர உணவகங்களையும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நடத்தி வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் ஒரு நாளைய சராசரி மொத்த வருமானம் ரூ.27 இலட்சம்.



### தமிழகத்தில்

# தொழில் நுட்பக் கல்வி


**பேராசிரியர் தி.இரா. நடேசன்**

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்**


தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்வி முறை கிழக்கிந்தியக் கம்பெனியார், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1794-ஆம் ஆண்டு, நில அளவைப் பள்ளியினை நிறுவிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நில அளவைப் பள்ளி விரிவடைந்து ஒரு பொறியியற் கல்லூரியாக மலர்ந்தது.

1886-ஆம் ஆண்டு சென்னை வேப்பேரியில் துவக்கப்பட்ட செங்கல்வராயன் பாலிடெக்னிக்கும் 1890-ஆம் ஆண்டு மதுரையில் துவக்கப்பட்ட தமிழ்நாடு பாலிடெக்னிக்கும், முன்னாட்களில் துவக்கப்பட்ட ஒரு சில தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களின் முன்னோடியாகத் திகழ்ந்து, சுதந்திரம் உதித்த நிலையில், மைய அரசும் மாநிலத்தில் உள்ள அரசும் இணைந்து, தொழில் மயமாக்கும் நிலையைப் புகுத்தியபோது நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வளரத் தூண்டுதலாகி, தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்காகாமல், ஒரு நல்ல சூழ்நிலை உருவாகிற்று. 1957- ஆம் ஆண்டுவரை, தொழில் நுட்பக் கல்வி முறையின் நிர்வாகம், பொதுக் கல்வி இயக்குநரின் வசமிருந்தது. 1957-ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வித்துறை அமைக்கப்பட்டு, அது பொறியியற் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் வளர்ச்சியை ஊக்குவித்தது.

தற்போது பட்டப்படிப்பு நிலையில் தொழில் நுட்பக் கல்விக்கான வசதிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும், ஐந்து அரசு பொறியியற் கல்லூரிகள், மூன்று அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் முப்பது சுயநிதி பொறியியற் கல்லூரிகள் ஆகியவற்றினால் அளிக்கப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பொறியியற் கல்லூரி, இந்தியன் தொழிற்கல்வி நிலையம் (ஐ.ஐ.டி.) மற்றும் திருச்சியிலுள்ள பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஆகியவை பல பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டக் கலையினைப் போதிக்க வழிவகை செய்துள்ளன. தமிழ் நாட்டிலுள்ள இரண்டு மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்திலும் குறைந்தது ஒரு பொறியியற் கல்லூரியாவது அமையப் பெற்றுள்ளது. இவை அனைத்திற்குமான மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கை எட்டாயிரத்து ஐநூறாகும். தமிழகம் மட்டுமே பெண்களுக்கென்றே ஒரு தனியான பொறியியற் கல்லூரி அமையப் பெற்று பிற பொறியியற் கல்லூரிகளில், இருபாலரும் கல்வி கற்கும் வசதிகள் பெற்ற சிறந்த தனித்தன்மை பெற்ற மாநிலமாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் ஐந்து தன்னாட்சிப் பொறியியற் கல்லூரிகளும் இரண்டு பல்கலைக் கழக மற்றும் பல்கலைக் கழகமாகக் கருதக் கூடிய கல்லூரிகளும் உள்ளன. பணிபுரியும் பட்டயப்படிப்பு முடித்தவர்கட்குப் பகுதிநேரப் பொறியியற் கலையும் பதினோரு கல்லூரிகளில் போதிக்கப்படுகின்றன.

தொழில் நுட்ப வினைஞர்கள், தொழில் நடவடிக்கைகட்கு முதுகெலும்பைப் போன்றவர்கள், எனவே தொழில் நுட்ப வினைஞர்களை உருவாக்கிப்பயிற்சியளிக்கப்பட்டயப் படிப்பு மற்றும் பட்டயப் பிற்படிப்பினைக் கற்பிக்க இம்மாநிலத்தில் நூற்றி இருபத்தொன்பது தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (பாலிடெக்னிக்குகள்) உள்ளன. (அரசு பாலிடெக்னிக்குகள் இருபத்தொன்று, அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள் முப்பத்தைந்து, மற்றும் சுயநிதி பாலிடெக்னிக்குகள் எழுபத்தி மூன்று). இவற்றின் மொத்த சேர்க்கை எண்ணிக்கை சுமார் இருபத்து இரண்டாயிரத்து ஐநூறு ஆகும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு பாலிடெக்னிக்காவது உள்ளது. தொழில் நுட்பக் கல்வியில் பெண்களின் தேவை பெண்களுக்கென்று தனியாக அமையப் பெற்ற பதினோரு பெண்கள் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களாலும், இருபாலருக்குமான கல்வி நிறவனங்களாலும் நிரப்பப்படுகிறது. மைய அரசின் சமுதாய வளர்ச்சித் தொழில் நுட்பக் கல்வி நிலையத் திட்டம் இந்த மாநிலத்திலுள்ள பதினொரு தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் அமையப் பெற்று, நாட்டுப் புறங்களில் வேலையில்லா இளைஞர்கட்கு உதவுகின்றது.

வளர்ந்து வரும் தொழில் மற்றும் சமூகத்தின் தேவைக்கேற்ப தொழில் நுட்ப மனித வளத்தினை மேம்படுத்தி, திறமையை ஊக்குவிப்பதே தற்போதைய தொழில் நுட்பக் கல்வியின் நோக்கமாகும். ●






## மனிதாபிமானத்தின் மணிமகுடம்

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

## டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புகழாரம்!

இந்த ஜனவரி 17-ஆம் நாள், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பிறந்த நாள்;

'எங்க வீட்டுப் பிள்ளை - எங்கள் வீட்டுப் பிள்ளை' என, இன்றும் தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்கள் எல்லாம், யாரை ஏற்றிப் போற்றிக் கொண்டாடி மகிழ்கிறார்களோ, அந்தப் பிள்ளை 75 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த நாள்...

'ஓர் சகாப்தம் கண்விழித்த இனிய நாள்;
ஓர் சரித்திரம் தொடங்கிய திருநாள்;
ஓர் உயரிய தத்துவம் உதித்த நன்னாள்'

எனச் சொன்னால் அது மிகையாகாது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவரின் வாக்கிற் கொப்ப, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தோன்றி - வளர்ந்து - ஈடுபட்ட துறைகள் அனைத்திலும், தன் புகழ் முத்திரையினைப் பதித்தவர் ஆவார்.

கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும் - புது நம்பிக்கையாகவும், தன் இளமைக் காலம் முதல், திரைப்படத் துறையிலும்- அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித் தலைவர்.

மக்களோடு பழகி,
மக்களோடு வாழ்ந்து,
மக்களுக்காக உழைத்து,
மக்களுக்கு வாரி வழங்கி,
மக்களுக்காகச் சிந்தித்து,
'மக்கள் திலகமாய்',
'மன்னாதி மன்னனாய்', வாழ்ந்து மறைந்த அவரைத்தான், இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள், தங்கள் இதயக் கோயிலில் தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள்.

அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும் - மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும், உலக வரலாறு காணாத அற்புதங்களை நிகழ்த்திக் காட்டின.

அவர் ஏற்றுக்கொண்ட அரசியல் ஆசானாம் பேரறிஞர் அண்ணாவை, 1967-இல் ஆட்சிக் கட்டிலில் அமர்த்திக் காட்டிடும் அளவுக்கு, அவரது மக்கள் செல்வாக்கு அன்றைக்குத் திகழ்ந்தது.

அண்ணா அவர்கள், கூட்டணி ஆட்சி அமைக்கும் அளவுக்கே தனக்கு வலுவுள்ளது எனக் கருதிக் கணக்கிட்டுக் கொண்டிருந்த வேளையில், புரட்சித் தலைவருள் மறைந்திருந்த மக்கள் சக்தி, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தனிப் பெரும் பான்மை பலத்தை அன்றைக்கு உண்டாக்கிக் காட்டியது.



அச்சரித்திர நாயகனின் வரலாறு, அதன் பின்னர், தமிழ்நாட்டில் அவர் யாரை அடையாளம் காட்டுகிறாரோ, அவர் தான் ஆட்சி அரியணை ஏறி அமர முடியும் என்னும் அளவுக்கு, உயர்ந்தோங்கியது.

அவரால் ஆட்சிக் கட்டிலுக்கு ஏற்றி விடப்பட்டோர், ஏறிய ஏணியை இடறிவிட்ட சூழ்நிலையில் தான், 1972-இல் தனக்கென - தன்னை நம்பியிருந்தோர்க்கென, தனி இயக்கம் கண்டார்.

அரசியலில் தனக்குக் கலங்கரை - விளக்காய் - வழி காட்டியாய் திகழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் புகழை - பெருமையை - பெயரை, என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் நோக்கில், 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனத் தனது அரசியல் இயக்கத்திற்கும் பெயர் சூட்டினார்.

அந்த ஆலமரம் தான், எண்ணற்ற இலட்சிய வேங்கைகளைத் தன்னகத்தே பெற்ற, திராவிட இயக்கப்பரிணாம வளர்ச்சியாக இன்றைய தினம் காட்சியளிக்கிறது.

'புரட்சித் தலைவர் நடந்தால் ஊர்வலம்; அவர் நின்றால் மாபெரும் பொதுக் கூட்டம்; மாநாடு' என்ற சரித்திரச் சாதனைகள் பல அன்றைக்கு நிகழ்ந்தன.

எனவே தான், உலக வரலாற்றில் வேறெங்கும் காண முடியாத ஓர் அபூர்வமாக, 1972-இல் ஓர் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்து, ஐந்தே ஆண்டுகளில், அசைக்க முடியாத ஓர் ஆட்சி அமைத்துக் காட்டும் அளவுக்கு, ஓர் சரித்திரச் சாதனையை நிகழ்த்திக் காட்டினார் புரட்சித் தலைவர்.

1977 ஜூன் திங்கள் 30-ஆம் நாள், தங்களது பொற்கால வரலாற்றை எழுதும் பொறுப்பினை, அந்தப் பொன்மனச் செம்மலிடம் தமிழக மக்கள் ஒப்படைத்தனர்.

11 ஆண்டுகள் அந்தப் பொற்காலம் நீடித்தது. சங்க காலச் சிறப்புக்குப் பின், தமிழ் வரலாற்றில் 'களப்பிரர்கள் காலம்' என்னும் ஓர் இருண்ட காலம் எப்படி இருந்ததோ - அதேபோல், ஓர் இரண்டாண்டுக் கால இருண்ட காலத்தை, இருபதாம் நூற்றாண்டிலும் தமிழகம் தாண்டி வரவேண்டிய அவலம் நிகழ்ந்தது.

## பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா- 17.1.92

தமிழக முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 17.1.92 அன்று நடை பெற்றது. மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்.

முன்னதாக, செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பிறகு முதல்வர் அவர்கள் விழா மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்— திரு. இ.மதுசூதனன், திரு. கே.ஏ.செங்கோட்டையன், திரு. சு.முத்துசாமி, திரு. இராம.வீரப்பன், திரு. எஸ்.டி.சோமசுந்தரம், திரு. எஸ்.கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. கோ.விசுவநாதன், திரு. டி.எம்.செல்வகணபதி, திருமதி. ஆர்.இந்திரகுமாரி, திரு. எம்.ஆனந்தன் மற்றும் திரு. டி.ஜெயக்குமார் ஆகியோர் டாக்டர் எம்.ஜி.ஆரின் அரசியல், திரைப்படத்துறை சாதனைகளையும் அவரது நல்லியல்புகளையும் நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டினார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றுப் பேசுகையில், ''மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

தமிழகச்சரித்திரத்தில் படிந்துவிட்ட, அக்கரும் புள்ளி மருவுக்குப் பின் - புரட்சித் தலைவரிடம் நம்பித் தங்களை ஒப்படைத்துக் கொண்ட தமிழக மக்கள் - கடந்த ஜூன் மாதம் 24-ந் தேதி, தங்கள் பொற்கால வரலாற்றை எழுதும் பொறுப்பை,-

அவரிடம் கொண்டிருந்த அதே நம்பிக்கையோடு, இன்னும் அதைவிடக் கூடுதலான எதிர்பார்ப்புக்களோடு நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.



புரட்சித் தலைவரின் புனிதப் பயணம் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறுகிறது; 'எம்.ஜி.ஆர்.'- 'எம்.ஜி.ஆர்.' - என்னும் தாரக மந்திரம்; சாகா வரம் பெற்ற அச்சரித்திர நாயகனின் தத்துவம்; தொடர்ந்து நமக்குத் தலைமை ஏற்று வழி நடத்திச் செல்கிறது.

புரட்சித் தலைவரின் சாதனைகள் கலை உலகில் கணக்கில் அடங்காதவையாகும்; அரசியல் உலகில் அதைவிட அதிகமாகும்.

எத்தனையோ தலைவர்களைக் கண்டுள்ளது இந்திய நாடு; ஆனால் மூளை பலமும், இளகிய இதயமும் கொண்ட மாமனிதர்கள், ஒரு சிலரே ஆவர். அவர்களில் முதன்மையானவர்கள்தான், அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணாவும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரும் ஆவர்.

அதிலும் மனிதாபிமானத்தின் மணிமகுடமாகத் திகழ்ந்தவர் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆவார். எனவே தான் இன்றும் அவரை 'ஆயிரத்தில் ஒருவர்' என உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அந்த 'அன்னமிட்டகை', தன் இளமையில் ஒரு கவளம் சோறின்றிப், பல நாள் பசியால் துடித்திருக்கிறது என்பதை இன்று நினைத்தாலும், நம் விழிகள் ஈரமாகின்றன.

'கொடிது கொடிது வறுமை கொடிது',
என்ற அவ்வைப் பிராட்டியார்,

'அதனினும் கொடிது இளமையில் வறுமை'
என்றார்.

அந்தக் கொடுமையைப், பசியோடு இளமையில் அனுபவித்த காரணத்தால் தான் - இனி எந்தத் தலைமுறைக்கும் இளமையில் பசி என்கிற கொடுமை இருந்திடலாகாது, எனத் திண்ணமாக ஓர் முடிவெடுத்து - அவர் கொண்டு வந்த திட்டம்

---

1977-இல் ஆட்சிக்கு வந்த பிறகு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடினார். அந்தப் புரட்சித் தலைவனுக்கு இன்று நமது முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அரசு விழா நடத்துகிறது. தமிழக சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் முழு திருவுருவப் படத்தைச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்'' என்று கூறினார்.

**மாணவ, மாணவிகளுக்குப் பரிசு:**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின், டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் பேட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். விழாவில் சென்னை மாவட்டத்தின் சார்பில் ரூ.1,20,620/- மதிப்பில் 91 நபர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. பின்னர் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தலைமைச் செயலர் அவர்களும், பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

**கலைநிகழ்ச்சி:**

விழாத் தொடக்கத்தில் பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

விழா முடிவில் வயலின் மேதை திரு. குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினரின் வயலின் இசைக்கச்சேரி நடைபெற்றது.

முன்னதாக மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 75-வது பிறந்த நாளையொட்டி சென்னை அண்ணா சாலையிலுள்ள எம்.ஜி.ஆரின் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை அணிவித்தார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்

தான் மகத்தான சத்துணவுத் திட்டமாகும். மனித வள மேம்பாடு பற்றிச் சிந்தித்த வேறு எவரும், இதுவரை சிந்திக்காத ஓர் உன்னதத் திட்டம் என, உலகின் பல பகுதியினராலும் பாராட்டப்பட்ட திட்டமாகும்.

அந்த இளகிய தலைவனின் உள்ளத்தைப் பெற்றிருக்கும் ஆட்சியாக, இன்றைய உங்கள் ஆட்சி அமைந்துள்ளதால் தான், அத்தகைய திட்டங்களைத் தொய்வின்றி நடத்திட உறுதி பூண்டுள்ளது.

1.7.82-இல் தொடங்கிய அந்தத் திட்டம், இன்று 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்னும் பெயரில் விரிவுப் படுத்தப்பட்டு, புதிய உத்வேகத்தோடு செயல் படுத்தப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஆறேழு மாதங்களாக, 'ஏழைகளைக் கண்ணால் பார்ப்பதை விட, இதயத்தால் பார்க்க வேண்டும்', என்ற புரட்சித் தலைவரின் கொள்கைப்படி நடந்து வருவதைக் கண்டு வருகிறீர்கள்.

அந்த அடிப்படையில் உதயமானது தான், நாங்கள் இன்றைக்கு நிறைவேற்றியுள்ள, ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை எளியோருக்கான இலவச வேட்டி-சேலைத் திட்டமாகும்.

'மக்களின் வரிப்பணம் மக்கள் நல்வாழ்வுக்கே பயன்பட வேண்டும்' என்றார் பேரறிஞர் அண்ணா.

'திட்டங்களின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்' என்றார் புரட்சித் தலைவர்.

இவ்விரு தலைவர்களின் அடிச் சுவட்டில் நடைபோடும் எங்கள் அரசு - அவர்கள் காட்டிய இந்த உயரிய நோக்கங்களைத் தனது இலக்காகக் கொண்டு, எவ்வளவு தெளிவாகவும், தீர்மானமாகவும், உறுதியாகவும் காரியமாற்றி வருகிறது என்பதை, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களில் இருந்து, மிகத் தெளிவாக அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

'எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பது மட்டுமல்லாமல்; எத்தகைய மக்களுக்காகத் திட்டங்கள் தீட்டுகிறோம்' என்பதற்கே முதலிடம் தந்து, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்னும் குறள் நெறிக்கேற்ற நாடாக, தமிழகத்தை உயர்ந்தோங்கச் செய்திட, எங்களது அன்றாடத் திட்டங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. புரட்சித் தலைவரின் பொற்காலக் கனவை நனவாக்கும் வகையிலேயே, எங்கள் செயலும் சிந்தனையும் அமைந்திருக்கும்.

புரட்சித் தலைவர் அவர்கள் தனது அரசியல் எதிரிகளை மட்டும் வெற்றி கண்டார் என்றில்லை;

நோயை எதிர்த்து வெற்றி கண்டார்;
சாவை எதிர்த்து வெற்றி கண்டார்;
பகையை எதிர்த்து அவர் வெற்றி கண்டார்;
பசியை எதிர்த்து அவர் வெற்றி கண்டார்.

அம் மாபெரும் வெற்றிச் செல்வனின் மகத்தான வாரிசுகள் நாம்; அப்புகழ்மிக்க புரட்சித் தலைவரின் இதயச் சோலையில் மலர்ந்த பூக்கள் நாம், என்பதை இப்புவிக்குத் தெரிவித்துக் கொண்டுள்ளோம்.

ஏழ்மை இருளை...
இல்லாமை எனும் மருவை...
அறியாமை எனும் பேதமையை...
வறுமை எனும் கொடுமையை...

இனி - என்றென்றும் நம் இனிய தமிழகத்தை தீண்டாது துரத்துவோம்! வன்முறைக் கலாச்சாரம் நமக்கு வழக்கமில்லை;

நம் அரசியல் எதிரிகளும் - அண்டை மாநிலத்தினரும் - அதைப் பயன்படுத்தினாலும் - நாம் அடக்கத்தோடு அதனை எதிர்கொள்வோம்.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'

என்ற நம்பிக்கை நமக்குள்ளது;

இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ஆசியும் - அருளும் என்றும் நமக்குள்ளது; அவர் இறவாது வாழ்கிறார்; நம்மோடிருக்கிறார்; இருக்கிறார் என்ற உணர்வு நமக்குள்ளது.

அந்த உணர்வினை நம் இதயத்தில் தேக்கி, நாம் புனிதப் பயணம் தொடர்வோம்; மங்காப் புகழ்மிகு அச்சரித்திர நாயகன் புகழ் காக்க, சங்க நாதம் முழங்கிடுவோம்;

வளமும் - நலமும் மிக்க தமிழகத்தை - தமிழ் இனத்தைக் காப்போம் என இந் நன்னாளில் உறுதி ஏற்போம்!

**— பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவில் (17.1.92) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**



**மாணவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களுடைய இதயங்களை ஆசிரியர்கள் பண்படுத்திவிடட்டும். ஏமாற்றம், ஏக்கம் என்ற இரண்டு வார்த்தைகளையும் அகராதியில் இருந்து துடைத்துவிட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவி புரியட்டும்.**

கர்நாடகக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் திரும்பும்

# தமிழர்களுக்குப் பாதுகாப்பு

**கா**விரி நதி நீர்ப்பங்கீட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் உச்ச நீதிமன்றம் தமிழகத்திற்கு 205 டிஎம்சி தண்ணீர் ஆண்டிற்கு விட வேண்டும் என கர்நாடகா அரசிற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கியதன் விளைவாக, கடந்த டிசம்பர் மாதம் 13-ஆம் தேதியன்று கர்நாடகாவில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த 2-ந் தேதி தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனை யொட்டி, தீயசக்திகளினால், அங்கு பல ஆண்டு வாழும் தமிழர்களுக்கு அசம்பாவிதங்களும், சொத்துக்களைச் சேதப்படுத்துவதும், தமிழர்களைத் துரத்துவதுமான சம்பவங்கள் நடைபெற்றன.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து, தமிழர்கள் கர்நாடகாவில் பெங்களூர், சத்தியகால் ஜாகரி, மைசூர், மண்டியாலா ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறினர். தருமபுரி மாவட்டத்திற்கு ஒசூர் வழியாகவும், ஜவலகிரி வழியாகவும், வந்து எட்டு வட்டங்களில் பல ஊர்களில் தங்கியுள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், கர்நாடகா கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் தமிழகத்திற்கு வரும் தமிழர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் எல்லையில் வரவேற்பு முகாம் அமைக்கும்படி மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கியதால், தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் ஜீஜுவாடி, ஜவ்லகிரி, தருமபுரி ஆகிய இடங்களில் வரவேற்பு மையமும், ஒசூர், தருமபுரி ஆகிய இரு மையங்களில் 'நிவாரண மையமும்' திறக்க உடனடி நடவடிக்கை மேற்கொண்டார். வரவேற்பு மையத்தில் கர்நாடகாவிலிருந்து வரும் நபரின் முழு விவரம் பதிவு செய்யப்பட்டு, அங்கு அவர்களுக்கு உணவு, உடை இருப்பிடம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

தருமபுரி மாவட்ட மாரவாடியில் கிட்டத்தட்ட 139 குடும்பம் கர்நாடகாவிலிருந்து வந்துள்ளனர். அவர்களைச் சந்தித்தபோது, அவர்கள் பெங்களூர் நகரைச் சுற்றியுள்ள பகுதியில் வசித்து வந்துள்ளனர். அனைவரும் கட்டடத் தொழில் புரிந்ததாகவும், தமிழர் என்றாலே அவருடைய வீட்டுக்குத் தீவைப்பதும், கண் எதிரே வீட்டிலுள்ள பொருட்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றதாகவும், பயங்கர ஆயுதங்களுடன் தாக்க வருவதால் உயிருக்குப் பயந்து வந்துள்ளதாகவும் தெரிவித்தனர். மையத்திலுள்ள தமிழ்ப் பெண்கள், தங்கள் கழுத்தில் உள்ள மஞ்சள் கயிற்றைக் கொண்டு, நாங்கள் தமிழ்ப் பெண்கள் என்பதை அறிந்து தாக்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மேலும், சத்யகால் ஜாகரிப் பகுதியில் 7 கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் காவிரி வழியாகவே வந்து பரிசல் மூலம் காவிரி ஆற்றைக் கடந்து பென்னாகரம் வருகின்றனர். அவ்வாறு சத்தியகால் ஜாகரிப் பகுதியில் 14 ஆண்டுகளாக வசித்து வந்த திரு. கருப்புசெட்டி என்பவரைச் சந்தித்தபோது- 'அவர் சேலம் மாவட்டம் கொளத்தூர் அருகே உள்ள சேத்துக்குழியைச் சேர்ந்தவர் என்றும், அவருடன் தாயார் எல்லம்மாள், தந்தை முனியன், மனைவி



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 18.1.92 அன்று, சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இராணி மெய்யம்மை மண்டபம் மற்றும் ராஜா முத்தையா மண்டபம் ஆகியவற்றைக் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார்.



மதி மற்றும் ஆண், பெண் குழந்தையுடன் 85 வயதுடைய பாட்டி திருமதி சடையம்மாளையும் அழைத்து வந்ததாகவும், வரும் வழியில் பாட்டியால் நடக்க முடியவில்லை. எனவே, எனது மனைவி குழந்தைகளை உறவினர்களுடன் அனுப்பி வைத்துவிட்டு என் பாட்டியை நான் தூக்கி வந்தேன். ஆனால், என்னால் தொடர்ந்து தூக்கி வரமுடியவில்லை. மேலும் என் பாட்டி உடல்நிலை மிகவும் மோசமான நிலை ஏற்பட்டதால், 'நீ மட்டுமாவது தப்பிப் போய்விடு என்னைப் பற்றி கவலைப் படாதே' என்று கூறினாள். எனவே, என் பாட்டியைக் காட்டிலேயே விட்டு விட்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் நாங்கள் சத்தியகால் ஜாகிரிப் பகுதிகளிலிருந்து பென்னாகரம் வர கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் மலைப்பகுதியில் வரவேண்டும். நாங்கள் 7 நாட்கள் நடைப்பயணம் செய்து வந்தோம்' எனக்கண்ணீர் மல்கக்கூறினார்.

இதே பகுதியை சேர்ந்த குழந்தைசாமி என்பவரைப் பேட்டி கண்ட போது, 'நானும் சத்யகால் ஜாகிரி பகுதியைச் சார்ந்தவன், நாங்கள் 15 ஆண்டுகளாக அங்கு இருந்து மேட்டு நிலத்தை விளை நிலமாக்கி நல்ல தோப்பும் வயலமாக மாற்றி உள்ளோம். அங்குத் தமிழனைக் கண்டாலே அடித்துத் துரத்துகிறார்கள். கும்பல் கும்பலாக இரவில் வந்து வீட்டுக்குத் தீவைக்கிறார்கள்,' என்று குறிப்பிட்டார் மேலும் நாங்கள் ஏழு நாட்கள் இரவு பகல் பாராமல் மலை, காட்டுப் பகுதிகளில் நடந்து காவிரி கரையைப் பிடித்தால் தமிழ் நாடு அடையலாம் என நினைத்துக் காவிரி ஓரமாகவே வந்தோம். வரும் வழியில் உணவு இல்லாததால், கூட்டிக் கொண்டு வந்த ஆடுகளை வெட்டிச் சுட்டுச் சாப்பிட்டோம். ஒரு சிலர் புளியங்காய், உப்பு வைத்துச் சாப்பிட்டு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர்களுடன் வேறு ஊரைச் சார்ந்த கர்ப்பமுற்ற பெண்மணி இரண்டு நாட்கள் இடுப்பு வலியுடன் நடந்து வந்து, வரும் வழியிலேயே பிரசவித்த நிலைமையும் ஏற்பட்டது என்றும் நெஞ்சை உலுக்கும் வகையில் தெரிவித்தார்கள்.

இவ்வாறு கர்நாடகத்திலிருந்து வந்த தமிழர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்கள் ஜூஜூவாடி, காணசந்திரம், ஆட்டுக்காரன்பட்டி, தருமபுரி, குப்பூர், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு நிவாரண ஆணையர், திரு. ஹரி பாஸ்கர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., ஓசூர் சார் ஆட்சியர் திரு. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு. பி.சி. பந்த், இ.கா.ப., காவல்துறைத் துணைத் தலைவர் (ஆயுதப்படை) திரு.கே.ராமலிங்கம், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. ராமானுஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.பி. முனுசாமி, திரு. முனிவெங்கடப்பன், திரு. சிங்காரம் ஆகியோர் உடன் சென்றனர்.

மேலும், கர்நாடகாவில் அல்லல் பட்டுத் தமிழகம் திரும்பும் தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொருட்டு, கர்நாடகாவில் தமிழர்களின் சொத்துக்கள் இழப்பை மதிப்பிடும் பொருட்டும் தமிழர்களுக்கு உண்டான பாதிப்பை அறியவும், கர்நாடகாவில் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என வற்புறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதன் அடிப்படையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வரின் வற்புறுத்தலின்படி, மத்திய அரசின் உள்துறை இணைச்செயலாளர் திரு. குர்னிகால்சிங் சந்த், இ.ஆ.ப., அவர்களை இரு மாநிலங்களிலும் உள்ள நிலைமைகளைக் கண்டறியும் பொருட்டு உத்தரவிட்டார்கள்.

மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் அவர்கள் ஜூஜூவாடி, சாணசந்திரம், அதகப்பாடி, நல்லம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும், முகாமில் உள்ள தமிழர்கள் கர்நாடகாவில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள், மற்றும் சேதமான சொத்துக்கள், உயிர்ப்பலி பற்றி அவரிடம் எடுத்துரைத்தனர்.

உள்துறை இணைச் செயலாளரைப் பேட்டி கண்ட போது 'கர்நாடக மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்தேன். மேலும் நிலைமை சீரடைந்துள்ளதாகவும், தீவைப்பு, கொள்ளை, திருட்டு ஆகிய சம்பவங்கள் நடந்ததாகவும், கொலை, கற்பழிப்பு ஏதும் நடைபெறவில்லை எனவும்தெரிவித்தார். மேலும் தமிழகத்திற்கு வந்தவர்கள் மீண்டும் தைரியமாக கர்நாடகம் செல்லலாம் எனவும் இது விஷயமாக கர்நாடக அரசு நல்ல சூழ்நிலையினை உருவாக்கி வருகிறது எனவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசு பாதுகாப்பு, முழு நஷ்டஈடு, ரேஷன் ஆகியவற்றை உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளதாகவும், வேலை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பும், வீடு இழந்தவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்டத்தில் கர்நாடகாவிலிருந்து வந்த தமிழர்களுக்கு வேட்டி, சேலை, ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் வேறு ஊர்களுக்குச் செல்ல விரும்புவோருக்கு பயணத் தொகையும் அரசு சார்பில் அளிக்கப்பட்டு வருகிறது.

**மு. கிருஷ்ணன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

மருத்துவம்:

# உணவு சில மருத்துவ உண்மைகள்

டாக்டர் எஸ். நந்தகுமார், எம்.டி.,

முந்திரி, பருப்பு, நெய், திராட்சை, வெல்லம் ஆகியவற்றுடன் சமைக்கப் படுகிற பொங்கலில் - அசைவச் சாப் பாட்டைவிட அதிகச் சத்து உள்ளது என்பன போன்ற பல அரிய உண்மை களை விளக்கும் கட்டுரை இது:

**நம் உணவில் உள்ள சத்துப் பொருட்கள் யாவை - அவை நமக்கு எப்படிப் பயன்படுகின்றன?**

நாம் அன்றாடம் உண்ணும் உணவில் மாவுச்சத்து (Carbohydrate), புரதச் சத்து (Protein), கொழுப்புச் சத்து (Fatty acid), ஆகியவை அடங்கி யுள்ளன.

இவற்றில், மாவுச்சத்திலுள்ள உணவானது மனிதனுக்குத் தேவை யான சக்தியைக் கொடுத்து, தசை களின் இயக்கம், உடல் உறுப்பு களின் இயக்கம் ஆகியவற்றிற்கு மூல காரணமாக உள்ளது. இச்சத்தானது- தானிய வகைகள், சர்க்கரை, வெல்லம், கிழங்கு வகை ஆகிய வற்றில் உள்ளது.

புரதச் சத்துள்ள உணவானது, மனிதனின் தசைகள் வளர்ச்சி பெறு வதற்கும், இரத்தத்தில் நோய் எதிர்ப் புச் சக்தி அதிகரிக்கவும், மேலும் இரத்தத்தின் முக்கியப் பகுதியாகவும் Haemoglobin, Harmones, Enzymes போன்றவற்றை உற்பத்தி செய்யவும் பயன்படுகிறது. இந்தப் புரதச் சத் தானது - முட்டை, பால், இறைச்சி, மீன் ஆகியவற்றிலும் பருப்பு வகைகள், கொட்டைகள், கடலைகள் ஆகியவற்றிலும் உள்ளன.

கொழுப்புச் சத்துள்ள உண வானது நம் உடலில் உருவ அமைப்பு, தோலின் உலர்வற்ற தன்மை, உடல் உஷ்ணநிலைப் பாதுகாப்பு முதலிய வற்றிற்குக் காரணமாக உள்ளது. இது - மீன், முட்டை, பால், இறைச்சி ஆகியவற்றில் உள்ளது.

**வைட்டமின்களும், தாது உப்பு களும் எப்படி நமக்கு உதவுகின்றன?**

வைட்டமின்கள், தாதுஉப்புகள், அடங்கிய உணவு வகைகள் மனிதனை நோய் நொடியிலிருந்து காப்பாற்றும் மேலும், அவைகள் நம் உடலின் முக்கிய இரசாயன மாற்றங்களுக்கும் காரணமாகின்றன. எலும்புகள், பற்கள் வளர்ச்சிப் பாதுகாப்பு போன்றவற்றிற்கும், இரத்த விருத்தி, இரத்தம் உறைதல் போன்றவற்றிற் கும் தைராய்டு எனப்படும் சுரப்பி வேலை செய்யவும் அவை பயன்படு கின்றன.

வைட்டமின்கள் 15-ம், தாது உப்புகள், 24-ம் நமக்கு முக்கிய மானவை எனக் கண்டறியப்பட்டுள் ளன. வைட்டமின்கள் மிக முக்கிய மாக A, D, E, K, B-Complex ஆகிய வைகளும் - தாது உப்புக்களில் கால் சியம், பாஸ்பரஸ், இரும்பு, சோடியம், பொட்டாசியம், குளோரின், அயோடின், துத்தநாகம் போன்றவை களும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

வைட்டமின்களும், தாது உப்புக் களும், வைட்டமின் 'ஏ' Codliver oil, Shark liver oil, கல்லீரல், வெண் ணெய், நெய், முட்டை, கேரட், மாங்காய் முதலியவைகளில் நிறைந் திருக்கின்றன.

வைட்டமின் B-Complex கைக் குத்தல் அரிசி, முழு கோதுமை, வேர்க்கடலை, கடலைப் பருப்பு, எள், பால், முட்டை, மீன், இறைச்சி முதலியவைகளில் இருக்கின்றது.

வைட்டமின் C நெல்லிக்காய், எலுமிச்சை, ஆரஞ்சு, மற்றும் அனைத்துக் கீரை வகைகளிலும் உள்ளது.

வைட்டமின் D - Sharkliver oil, Cod liver oil கல்லீரல், முட்டை, பால், வெண்ணெய், மீன் ஆகியவை களில் இருக்கின்றது.

மேற்கூறிய அனைத்து உணவு வகைகளிலும் தாது உப்புக்கள் உண்டு. மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் அனைத்தும் சரியான விகிதத்தில் வயது, எடை, அவர வரும் செய்யும் வேலைக்கேற்ப உண்ணப்படுவதே சரிவிகித உண வாகும்.

மாவுச்சத்து (தானிய வகை) 60 சதவிகிதமும், புரதச் சத்து 20 சதவிகிதமும், கொழுப்புச் சத்து 20 சதவிகிதமும் அன்றாட உணவில் இருத்தல் அவசியமாகும்.

**இரத்தத்தில் நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் சேருவது எப்படி?**

நாம் உண்ணும் உணவில் உள்ள 'கார்போஹைட்ரேட் என்ற மாவுச்



டாக்டர் எஸ். நந்தகுமார்

சத்தானது Glucose என்ற சர்க்கரைச் சத்து ஆகவும் புரோட்டின்-அமினோ அமிலம் (Aminoacid) எனப்படும் பொருளாகவும், கொழுப்பு வகைகள் (Fatty acid) என்பதாகவும் மாற்றமடைகின்றன. இவ்வாறு மாறிய பிறகே அவையெல்லாம் நமது இரத்தத்தில் கலக்க முடியும்.

இவற்றில், குளுக்கோஸ் எனப்படும் சர்க்கரைச் சத்து இரத்தத்தில் கலந்த பிறகு உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் சென்று எரிபொருளாக மாற்றமடைகிறது. இவ்வாறு எரிபொருளாக மாற 'இன்சுலின்' (Insulin) என்ற ஹார்மோன் தேவை.

**கலோரிச் சத்து என்றால் என்ன?**

சர்க்கரைச் சத்தானது - எரிபொருளாகி, மனிதனின் இயங்கும் சக்தியாக மாற்றமடைவதையே நாம் கலோரிச் சத்து என்கிறோம். இந்த வகையில் பார்த்தோமானால் -

*1* கிராம் மாவுச்சத்து (Carbohydrate) - *4* கலோரியாகும்;

*1* கிராம் புரதச் சத்து (Protein) - *4* கலோரியாகும்;

*1* கிராம் கொழுப்புச் சத்து (Fattyacid) - *9* கலோரியாகும்.

**எதுவும் உண்ணாமல் பட்டினி இருப்பது உடலுக்கு நல்லதா?**

வாரம் அல்லது மாதம் ஒரு வேளைமட்டும் உண்ணாமல் இருப்பதில் தவறு ஏதும் இல்லை; அது நல்லதும் கூட. ஆனால், சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு இது பொருந்தாது.

இயற்கையில், மனித உடலில் குளுக்கோஸ் சத்தானது எரிபொருளாக மாற்றப்படுவதால் எந்தவித ஆபத்தும் இல்லை. ஆனால் ஒருவர் பலவேளை உண்ணாமல் இருக்கும்போது, அவர் உடலில் உள்ள கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் கரைந்து எரிபொருளாக மாற்றப்பட்டு அவரது உடல் உறுப்புகளை இயங்கச் செய்கிறது. இவ்வாறு மாவுச்சத்து அல்லாமல், - புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் எரிபொருளாக மாற்றம் அடையும் போது உடலுக்கு ஆபத்தைத் தரும் இரசாயனப் பொருட்கள் இரத்தத்தில் கலந்துவிடும்.

அதே நபர் சில நாட்கள் மேலும் உண்ணாமல் இருந்தால், இந்த இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் இரத்தத்தில் கலந்து, அந்த நபரைக் கோமா நிலைக்குக் கொண்டு போய்விடும். இதையே மருத்துவத்தில் Keto acidosis என்கிறோம். இன்சுலின் என்ற ஹார்மோன் குறைப்பாட்டினாலும் இதுபோன்ற கோமா நிலை ஏற்படும். இதை 'Insulin Dependant diabetes Mellitus Complicating keto acidosis' என்று கூறுகிறோம்.

இந்த வகை சர்க்கரை வியாதியில் சர்க்கரையின் அளவு இரத்தத்தில் மிக அதிகம் இருந்தாலும், அவை இன்சுலின் பற்றாக்குறையினால் மாற்றம் அடைவதில்லை.




**புரதச் சத்து நமக்கெல்லாம் மிக மிக இன்றியமையாதது என்கிறார்களே - ஏன்?**

நம் உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்களில், பத்து வகையான அமினோ அமிலங்களை நமது உடலால் தயாரிக்க முடியாது. எனவே, அவற்றை நாம் உண்ணும் உணவில் இருந்துதான் பெற வேண்டும். இவைகள் புரதச் சத்தில் மிகுதியாக உள்ளன. இந்தப் பத்தும் இருந்தால்தான் நம் உடலில் அந்தப் புரதச் சத்து பயனுள்ள வகையில் சேகரிக்கப்படும். எனவே, இவை அடங்கிய உணவு வகைகளை 'முதல் தரப் புரதச் சத்து' என்கிறோம்.

ஒன்று அல்லது இரண்டு அமினோ அமிலங்கள் குறைவுபட்டால்கூட, அந்தப் புரதச் சத்து உடலில் வீணாகி அதனுடைய முழுப் பயன் நமக்குக் கிடைக்காமல் போய்விடும்.

இவ்வாறு அனைத்து அமினோ அமிலங்கள் அடங்கிய புரதச் சத்து பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றில் சுமார் 20 சதவிகிதம் அடங்கியுள்ளது. ஆனால், தாவர வகைப் புரதச் சத்தான பருப்பு, கொட்டை, கடலை போன்றவற்றில் ஒன்று அல்லது இரண்டு அமினோ அமிலங்கள் குறைபாடாகவே உள்ளன. இந்த உணவு வகைகளை 'இரண்டாம்தரப் புரதச் சத்து' என்கிறோம்.

குறைபாட்டை ஈடுசெய்ய - நாம் புரதச் சத்து உணவுகளைத் தானிய வகைகளுடன் (அரிசி, கோதுமை) சேர்த்து உண்ணும்போது, அவை முற்றிலும் பயனுள்ளதாக மாற்றப்படுவது மட்டுமின்றி, இறைச்சி, மீன் போன்றவை உண்ணுதலுக்குச் சமமாகவும், முதல்தரப் புரதச் சத்தாகவும் மாற்றம் பெறுகிறது.

நம் முன்னோர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்துதான் பொங்கல், இட்லி, பருப்புடன் கலந்த சாதம் போன்றவற்றைச் சாப்பிடும் உணவுப் பழக்கவழக்கத்தை அக்காலத்திலேயே உண்டாக்கியிருக்கிறார்கள் போலும்.

பத்து அமினோ அமிலங்கள் அடங்கிய தாவர புரதச் சத்து சோயா பீன்ஸ் எனப்படுகின்ற கொட்டை வகையாகும். இதில் இருந்து பால், பவுடர் முதலியன எடுக்கப்பட்டு, சிறு குழந்தைகளுக்கு நல்ல உணவாகக் கிடைக்கப்பெறுகிறது. இதையே Vegetable milk என்கிறோம். 100 கிராம் அளவுள்ள சோயாபீன்ஸில் 43 கிராம் முதல்தரப் புரதச் சத்து உள்ளதாகக் கணக்கிடப்படுகிறது.

**நார்ச்சத்து (Fibre Diet) என்றொரு புதிய கண்டுபிடிப்புப் பற்றி மருத்துவ உலகில் பேசப்படுகிறதே - அதென்ன?**

வைட்டமின்களில் கூறிய கீரை, காய்கறி, பழவகைகளில் நார்ச்சத்து எனப்படும் ஒரு பொருளும் அதிகம் இருக்கிறது. பழங்களைத் தோலுடன் சாப்பிடுவது நல்லது. நம் உடலுக்கு இந்த நார்ச்சத்தானது மிகவும் முக்கியமாகும்.

காரணம் என்னவென்றால் - இந்த நார்ச்சத்தானது -

1. நம் சிறுகுடல், பெருங்குடல்

ஆகியவற்றில் புற்றுநோய் வராமல் இது தடுக்கிறது.

2. Cholesterol என்னும் கொழுப்பு, உடலில் மிதமாக இருக்க உதவுகிறது.

3. நீரிழிவு நோயாளிகளின் உடலில் சர்க்கரை அதிகரிக்காமல் பாது காக்கிறது.

4. இரத்த நாளமானது கொழுப்பு மிகுதியால் அடைப்பட்டுக் கடினமா வதால் ஏற்படும் Atheroselerosis என்ற நோய் வராமல் தவிர்க்கிறது.

5. மலச்சிக்கல் ஏற்படாதிருக்கச் செய்கிறது.

**யார் யாருக்கு எவ்வளவு கலோரி தேவைப்படுகிறது.?**

(Recommended energy requirements)

1. பிறந்த முதல் மாதத்திலிருந்து 11 மாதங்கள் வரை. 100 முதல் 120 கலோரிகள் ஒரு கிலோவிற்குத் தேவை.

2. 1-3 வயது-1220, 4-6 வயது-1720, 7-9 வயது-2050 கலோரிகள் ஒரு நாளைக்குத் தேவை.

3. 10-12 வயது-2420, (ஆண்) - 2260 (பெண்), 13-15 வயது வரை-2660 (ஆண்) - 2300 (பெண்), 16-18 வயது வரை - 2800 (ஆண்), - 2200 (பெண்) கலோரிகள் ஒரு நாளைக்குத் தேவை.

4. ஆண்: (கலோரிகள் ஒரு நாளைக்கு)

55 கி.கி. எடையுள்ள மிதமான வேலை செய்வோருக்கு (light work)- 2400 கலோரிகள். சற்றுக் கடின மான வேலை செய்வோருக்கு (Moderate work) - 2800 கலோரிகள். கடினமான வேலை செய்வோருக்கு (Heavy work) - 3900 கலோரிகள்.

பெண்: (கலோரிகள் ஒரு நாளைக்கு)

மிதமான வேலை செய்வோருக்கு (light work) - 1900 கலோரிகள். சற்றுக் கடினமான வேலை செய்வோருக்கு (Moderate work) - 2200 கலோரிகள். கடினமான வேலை செய்வோருக்கு (Heavy work) - 3000 கலோரிகள். குழந் தைக்குப் பால்தரும் பருவம் உள் ளோருக்கு (Women during pregnancy & Lactation) (45 K.G.)




300-லிருந்து 500 வரை கூடுதல் கலோரிகள் தேவை.

**உணவு வகைகளை எப்படி அறிந்து-அளந்து சாப்பிடுவது?**

எந்தெந்த உணவில் தோராய மாக எவ்வளவு கலோரி இருக்கிறது என்று இந்தப் பக்கத்தில் தெளி வாகப் பட்டியலிட்டுக் கூறியிருக் கிறோம். அவற்றில் இருந்தே, நாம் சாப்பிடத்தக்க சரிவிகித உணவு என்ன என்றும் நீங்களே அறிந்து கொள்ளலாம்.

**நோயாளிகள் - எதுவுமே உண்ணாமல் வெறும் வயிறுடன் இருக்கலாமா?**

உடல் நலக் குறைவு என்றால் சிலர் சாப்பிடாமல் இருப்பார்கள்; 'லங்கனம் பரம ஒளஷதம்' என் பார்கள்; அது நல்லதல்ல. அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் எளிதாக ஜீரணமாகக்கூடிய இட்டலி, இடி யாப்பம் போன்ற உணவு வகை களை நோயாளிகள் மிதமாக உண் ணுவது நல்லது.

சர்க்கரை வியாதி உள்ளோர் தாம் செய்கிற வேலைக்கு ஏற்பவும், சாப்பிடும் மருந்துகளுக்கு ஏற்பவும் உண்ணவேண்டும்.

இரத்த அழுத்தம் உள்ளவர் களுக்குக் கொழுப்புச் சத்து, உப்பு ஆகியவற்றை உணவில் தவிர்க் கலாம்; சிறுநீரக நோயாளிகளுக்கு உண்ணும் உணவில் ஒரு குறிப்பிட்ட அளவே புரதச் சத்தும், உப்புச் சத்தும் பொருந்தும்.

**உடல் பயிற்சிகள் ஒருவருக்கு எப்படியெல்லாம் உதவுகின்றன?**

உடல் பயிற்சி செய்வதென்பது, மனிதனுக்கு மிகமிக இன்றியமை யாதது ஆகும்; அதுவும் ஒவ்வொரு வரின் உடலுக்கு ஏற்றவாறு அமைந் திருப்பது மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக, 40 வயதுக்கு மேற் பட்ட நபர்கள் - காலை-மாலை நடப்பது, சைக்கிள் மிதிப்பது

சாதாரணமாக நாம் உண்ணும் உணவில் - எது எதில் எந்த அளவு கலோரிச் சத்து இருக்கிறது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்:

| உணவு வகை | சுமாராக எடை | கலோரி |
|---|---|---|
| தோசை | 100 கிராம் | 200 |
| இட்டலி | 140 கிராம் | 200 |
| பொங்கல் | 100 கிராம் | 356 |
| ஊத்தப்பம் | 100 கிராம் | 330 |
| பூரி | 40 கிராம் | 184 |
| சைவ பிரியாணி | 100 கிராம் | 244 |
| கிச்சடி | 100 கிராம் | 168 |
| உப்புமா | 100 கிராம் | 233 |
| முறுக்கு | 100 கிராம் | 521 |
| சமோசா | 100 கிராம் | 256 |
| அடை | 100 கிராம் | 571 |
| உருளைக்கிழங்கு சிப்ஸ் | 20 கிராம் | 113 |
| வாழைப்பழம் | 100 கிராம் | 100 |
| ஆப்பிள் | 80 கிராம் | 50 |
| மாங்காய் | 70 கிராம் | 50 |

போன்ற உடற்பயிற்சிகளை மட்டும் செய்வதே போதுமானதாகும். சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கும், இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் அந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தபிறகே அவ்வாறான உடற்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

உடல் பயிற்சியினால் உடலில் உள்ள குளுகோஸ் அளவும், கொழுப்புச் சத்தின் அளவும் மிதமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. மனிதனுக்கு உடல் ஆரோக்கியத்தையும் மூளைச் சுறுசுறுப்பையும் இது கொடுக்கும்.

**கடைகளில், டின்களில் அடைத்து அதிக விலையில் விற்கப்படும் குழந்தை உணவுகள் பற்றி உங்கள் கருத்தென்ன?**

டின்களில் அடைத்துப் பல பெயர்களில் கடைகளிலே விற்கப்படுகின்ற குழந்தைகளுக்கான விலை உயர்ந்த உணவுப் பொருட்களில் சரி விகித அளவில் சத்துக்கள் இருக்கின்றன என்பது ஒரு விதத்தில் சரியே; ஆனால், இன்றைய சூழ்நிலையில் வசதியற்ற பாமர மக்கள் அதை வாங்கிப் பயன்படுத்துவது மிகவும் கடினமாகும்.

ஆனால், அவைகளுக்குச் சமமாகவோ, அதைவிட மேலானதாகவோ, குறைந்த செலவில் நாமே அப்படிப்பட்ட உணவைத் தயாரிக்க முடியும். இதற்காக-அதிக உழைப்போ, செலவோ கூடத் தேவையில்லை. ஏழை எளிய மக்களும் இதை எளிதாகத் தயாரிக்க முடியும். இவற்றை மனதில் கொண்டே, நமது அரசின் மதிய உணவுத் திட்டமும் குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கு ஏற்ப சரியான விகிதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.




கீழ்க்கண்ட அட்டவணையைப் பார்த்தால் நாமே அப்படிப்பட்ட உணவைத் தயாரிக்கலாம் என்பது உங்களுக்குப் புரியும்.

| | |
|---|---|
| முழுக் கோதுமை அல்லது கேழ்வரகு | — 40 கிராம் |
| உளுத்தம் பருப்பு | — 16 கிராம் |
| வேர்க்கடலை | — 10 கிராம் |
| வெல்லம் | — 20 கிராம் |
| ஆக மொத்தம் | — 86 கிராம் |

அது 330 கலோரிகள் (புரோட்டீன் 11.3 கிராம்) ஆகும். இவ்வகையில் ஒன்று சேர்த்து அரைத்து மாவாக்கித் தயாரிக்கப்படும் உணவு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு மிகுந்த சக்தி தரும் நல்ல உணவாகப் பயன்படுகிறது.

**நீண்ட நாட்கள் வாழ விரும்புவோர் என்ன செய்யவேண்டும்?**

நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என விரும்பினால் நீங்கள் சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளப் பழக வேண்டும்; ஒரே வேளையில் மிக அதிகமாகச் சாப்பிடுவதும், ஒரு வேளைக்குச் சாப்பிடாமல் இருப்பதும் முறையல்ல.

சில சமயங்களில் அது உடலுக்குத் தீமையை உண்டாக்கும் 'Eat to live is better than live to eat' என்று காந்தியடிகளே கூறியிருப்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

2. இரவில் விரைவில் உறங்குவதும், அதிகாலையில் எழுதுவதும் உடலுக்கு இன்றியமையாத ஒன்றாகும். 'Early to bed and early to rise is wise and healthy' என்ற ஆங்கிலப் பழமொழி இதைத்தான் வலியுறுத்துகிறது.

3. மதிய உணவிற்குப் பிறகு சிறிது நேரம் ஓய்வெடுப்பதும், இரவு உணவிற்குப் பிறகு சிறிது தூரம் நடப்பதும் இன்றியமையாத உடற்பயிற்சியாகும். இதைக் குறிப்பிடும் விதத்திலேயே - Rest for a while after lunch; and walk for a mile after dinner' என்பார்கள் ஆங்கிலத்தில்.

4. இதோடு மட்டுமல்லாமல், மூன்று வேளையும் நாம் சாப்பிடும் உணவானது சத்துள்ளதாக இருத்தல் வேண்டும்; மாவுச்சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து ஆகியவைகள் கலந்தவையாக இருத்தல் வேண்டும்.

இந்த முறையை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்தீர்களேயானால் கண்டிப்பாக நீண்ட நாட்கள் வாழலாம்.

**சந்திப்பு: பி.எல்.ஆர்.**




**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தொழிலதிபர் டாக்டர் எம்.ஏ.எம்.இராமசாமி அவர்கள் ரூ.5,00,001 க்கான காசோலையை 18.1.92 அன்று வழங்கினார்.**



# பனை ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல்

**கா**கிதத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு தெற்கு, தென் ஆசிய நாடுகளில் பனை ஓலையை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். பெரும் பகுதி பனை ஓலைச் சுவடிகள் தனியார் மற்றும் நிறுவனங்களின் பொறுப்பில் உள்ளன. அவைகளில் பெரும்பான்மை 11 அல்லது 12-வது நூற்றாண்டைச் சேர்ந்தனவையாகும்.

சோலிங்கனூர் வித்தியாபீடம் பள்ளியிலிருந்து ஐந்து பெட்டிகளில் 10,25,28,29 மற்றும் 7 கட்டுகள் அடங்கிய ஓலைச்சுவடிகள் வேதியல் பிரிவில் பாதுகாக்கப் பெறப்பட்டன. இவை வித்தியாபீடம் பள்ளிக்கு அவ்வூரிலுள்ள திரு. சம்பத் என்பவரால் வழங்கப்பட்டன.

எழுத்தாணியைக் கொண்டு பனை ஓலையில் எழுதப்பட்டுள்ளது. எழுதப்பட்ட பகுதியில் கரித்துண்டினால் தேய்ப்பதால் எழுத்து நன்றாகத் தெரிகிறது. பனை ஓலையின் இரண்டு முனைகளிலும் துவாரம் ஏற்படுத்தப்பட்டு கயிற்றினால் இணைத்துச் சுவடிகளை இரண்டு மரச்சட்டங்களின் இடையில் வைத்து ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

கருவேட்டு நகர் அரசாட்சியில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் இப்போது உள்ள பள்ளிப்பட்டு பக்கத்தில் திரு. வெங்கட்ராயப் பிள்ளை என்பவர், 600 கிராமங்களைப் பரிபாலித்து வந்தார். அவர் பத்மாபுரம் என்கிற இப்போது உள்ள எரும்பி என்ற ஊரில் வசித்து வந்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் இந்த சமஸ்தானம், உடையத் தொடங்கியபோது, பனை ஓலைச் சுவடிகள் அனைத்தும் பெரிய பொறுப்பில் இருந்த இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த ஓலைச் சுவடிகள் அனைத்தும் சுமார் 200 ஆண்டுகளுக்குமுன் அந்த ஆட்சியின்போது இருந்த அறிஞர்களால் தயாரிக்கப்பட்டன. அவர் இறக்கும்போது இந்தச் சுவடிகள் அனைத்தும் கிராம அலுவலராகப் பணிபுரிந்த அவருடைய புதல்வர் திரு. பெருமாள் பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன்பின்பு இவை அவருடைய புதல்வர் திரு. சம்பத் அவர்களின் கண்காணிப்பில் வந்தன. இவரால் அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாத காரணத்தால், அநேகச் சுவடிக் கட்டுகளை எடுத்துச் சென்று கங்கையில் விட்டுவிட்டார். மிஞ்சிய ஓலைச்சுவடிக் கட்டுகளைப் பேணிப் பாதுகாக்கவும், படித்து அறியவும் உதவிடும் எண்ணத்துடன் வித்தியாபீடம் பள்ளிக்கு வழங்கினார்.

வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் இந்தப் பனை ஓலைகள் பெறப்பட்டபோது, இவை உலர்ந்து உடையும் நிலையில் இருந்தன. மிருதுவான தன்மையும், வளைந்து கொடுக்கும் தன்மையும் இழந்து காணப்பட்டன. மேலும், தூசி படிந்தும், வண்ணம் இழந்தும் காணப்பட்டன. இந்த ஆவணங்கள் பூச்சிகளாலும், பூஞ்சைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தன. கிழிசலும் பூச்சித் துவாரங்களும் காணப்பட்டன.

இந்தச் சுவடிகளில் படிந்திருந்த தூசி, மிருதுவான தூரிகை கொண்டு நீக்கப்பட்டன. பின் புகைப்பெட்டியில் வைத்து பாராடைகுளோரா பென்ஜீன் (Para-Dichloro Benzene) கொண்டு பத்து தினங்களுக்குப் புகையூட்டப்பட்டன. (Fumigation) ஓலைச்சுவடிக் கட்டுகள் நல்ல நிலையில் உள்ளனவற்றைத் தனியாகவும் மிகவும், பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளவற்றைத் தனியார்கவும் பிரிக்கப்பட்டன. சுவடிகளில் நல்ல நிலையில் உள்ளனவற்றைச் சோலிங்கனூர் வித்தியாபீடம் பள்ளிக்கு இவ்வருங்காட்சியக வேதியல் பாதுகாப்பு அலுவலர்கள் எடுத்துச் சென்று மாணவர்களுக்கு ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பது குறித்து செய்முறைப் பயிற்சி அளித்தார்கள்.

பனை ஓலைச்சுவடிகள் கட்டிலிருந்து பிரிக்கப்பட்டு பென்சிலைக் கொண்டு பக்க எண்கள் இடப்பட்டன. பின் பஞ்சை சாராயத்தில் நனைத்து அவற்றில். பூசப்பட்டு மிருதுவாக்கப்பட்டன. அதன்பின் சாராயத்தில் (Rectified Spirit) 5 சதவிகிதம் எலுமிச்சை எண்ணெய் (Lemon Grass Oil) –

கலந்து, அவற்றில் பூசப்பட்டு பாதுகாக்கப்பட்டன. இறுதியாக,

**சு. தங்கவேலு**
**காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியகம்**
**சென்னை**



பனை ஓலைகள் ஒன்று சேர்க்கப் பட்டுக் கட்டாகக் கட்டப்பட்டன. இவ்வாறாக மாணவர்கள் சுவடி களைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தப் பட்டனர்.

மிகவும் பாதிக்கப்பட்ட சுவடிகள் அரசு அருங்காட்சியக வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் பாதுகாக்கப் பட்டன. தேவையற்ற பனை ஓலை ஒன்று தண்ணீர் நிரம்பிய தட்டில் இடப்பட்டு அதில் உள்ள எழுத் துக்கள் அழியாமல் இருக்கின்றனவா என்பது உறுதி செய்யப்பட்டது. எழுத்து அழியாமல் இருந்ததால் ஓலைச்சுவடிகளைப் பரப்பி, கண் ணாடித் தட்டில் வைத்து தண்ணீரில் இடப்பட்டன. பின் இந்த ஓலைச் சுவடிகள் கண்ணாடித் தட்டுடன் (Glass Plate) 5 சதவிகிதம் சோடியம் குளோரைட்டில் (Sodium Chloride) இடப்பட்டு புகைப்போக்கியில் (Fume Exhaust) வைக்கப்பட்டது. பார்மலின் (Formalin) இந்தக் கரை சலில் 15 சதவிகிதம் ஆகும் அள வுக்கு ஊற்றப்பட்டது. தட்டு அடிக் கடி குலுக்கப்பட்டது. இதில் இருந்து உண்டாகும் குளோரின் காற்று பனை ஓலைகளைச் சலவை செய் கிறது. 10 நிமிடங்களுக்குப் பின் சுவடிகள் முழுவதும் (Bleaching) சலவை செய்யப்பட்டவுடன், கண் ணாடித் தட்டுடன் கூடிய சுவடிகள் எடுக்கப்பட்டு, குழாய் நீரில் காட்டிச் சுத்தம் செய்யப்படுகிறது. அதற்குப் பின் மிகவும் சுத்தமான நீரில் சுத்தம் செய்யப்படுகின்றன. பின் இவை உலர்த்தப்பட்டு அசிடோன், டால் பினால் 10 சதவிகிதம் பாலி வினைல் அசிடேட் தயாரிக்கப்பட்டு சுவடிகள் கெட்டிப்படுத்தப்படுகின் றன. இப்படியாக, பனை ஓலைச் சுவடிகள் புதுப்பிக்கப்பட்டுப் பாது காக்கப்படுகின்றன. இந்த முறையில் பனை ஓலைகள் சலவை செய்யப் படுவதுடன் அவற்றில் உள்ள அமிலங்களும் நீக்கப்படுகின்றன.

மேலும், இதிலிருந்து காரமான குளோரின் காற்று உற்பத்தியாவ தால் இது (Fumigated) புகை உண் டாக்கியாகவும் செயல்படுகிறது.

இந்த ஆவணங்களில், தமிழ் அகராதி - நிகண்டு, அருணகிரி அந்தாதி, திருகச்சியூர் நொண்டி நாடகம், சம்பை விநாயகர் விருத்தம், சுபமுத்து அரிக்கினமுத்து சுந்தரவிலாசம், மாரியம்மன் உலா, கும்பக்கணக்கு, சுந்தர காண்டம், ஆயுர் வேத மருந்துகள் தயாரித்தல், மார்க்கண்டேய நாடகம் ஆகியவை அடங்கியுள்ளன. மற்ற ஓலைச் சுவடிகள் தெலுங்கில் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பல இலக்கி யங்கள் அடங்கியுள்ளனவாகும்.

இந்தப் பனை ஓலைச் சுவடி களை ஆராய்ந்தறிய தொல்பொருள் துறை இயக்குநர் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகக் கட்ட டத்தில் உள்ள கீழை நாட்டு ஆவண நூலகக் காப்பாட்சியர் அவர்களும் உதவினர். •

## தமிழ்நாடு ஜரிகை உற்பத்தி

கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற தமிழ்நாடு ஜரிகை உற்பத்தி நிறுவனம் 1988-89-ஆம் ஆண்டிற்கான அரசின் பங்கு மூலதனத்திற்கான ஊதியப்பங்கான (Dividend) ரூ.1,32,000-த்திற்கான காசோ லையை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் 6.1.92 அன்று வழங் கினார்.

இவ்வூதியப் பங்கை இந்நிறுவனம் அறிவிப்பது இதுவே முதல் முறை யாகும். கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசுச் செயலாளர் திரு. பி. சங்கர், இ.ஆ.ப., அவர் களும், மற்றும் தமிழ்நாடு ஜரிகை நிறுவனத்தின் தலைவர் மற்றும் துணிநூல் இயக்குநருமான திரு.முனிர் ஹோடா, இ.ஆ.ப., அவர்களும் உடன் இருந்தார்.



# நாடகத் தந்தை சம்பந்தனார்

'தமிழ் நாடகத் தந்தை' என்று நாட்டோரால் போற்றிப் புகழப்படும் பம்மல் சம்பந்தனார், காலமெல்லாம் நாடக வளர்ச்சிக்காகவே அரும்பாடு பட்டார்.

அக்கால நாடக நிலையைக் கண்ணுற்ற சம்பந்தனார், அதிலே மறுமலர்ச்சி உண்டாகக்கப் பெரிதும் உழைத்தார். பல நாடகங்களைப் பார்த்தார். அதிலே உள்ள குறைகளைப் போக்க என்ன செய்யலாம் என்று சிந்தித்தார். பழைய புராண இதிகாச நாடகங்களைத் திரும்பத் திரும்ப நட்த்துவதைவிட, புதிய புதிய நாடகங்கள் மேடைக்கு வரவேண்டும் என்று விரும்பினார்.

1891 முதல் 1936 வரை இவர் தமிழ் நாடகங்களை எழுதி, நடித்து, உழைத்து வந்தார். அவற்றையெல்லாம் 'நாடக மேடை நினைவுகள்' என்னும் நூலில் தொகுத்துத் தந்துள்ளார்.

எனவே; அந்தக் காலத்திலேயே, தமிழ் நாடகங்களில் புதுமையைப் புகுத்தினார். தரமான நாடகங்களைத் தயாரிக்க அவர் வழி வகுத்தார்.

அன்னாரின் வாழ்க்கை, இன்றைய நாடக உலகுக்கு மட்டுமல்ல, வருங்கால நாடக உலகுக்கும் வழிகாட்டியாக விளங்கும் என்றால், அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

சம்பந்தனாரின் முழு வாழ்வு, நாடக வாழ்வு. அவரது வாழ்க்கை ஏட்டைப் புரட்டும்போது நேர்மையும் நீதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலைக் களன்களாக விளங்குவதைப் பார்க்கலாம்.

சம்பந்தனாருக்கு, கல்வி மீது உற்சாகம் ஏற்பட, இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, இவருக்கு ஆசிரியராக இருந்த சுப்பிரமணியம் ஐயர், இவர் வீட்டிற்கு வந்து இவர் தந்தையிடம், 'சம்பந்தம், எம்.ஏ. ரங்கநாத முதலியாரைப்போலப் படித்து முன்னுக்கு வருவான்!' என்றாராம். இதைக்கேட்ட சம்பந்தனாருக்குக் கர்வம் பிறக்கவில்லை. உண்மையில் பயமே ஏற்பட்டது.

அந்தக் காலத்தில், ரங்கநாத முதலியார் என்பவர், சிறந்த கல்விமான் என்று பெயர் பெற்றவராம். அவரைப் போல நம்மால் வரமுடியுமா என்கிற பயம் சம்பந்தனாருக்கு. ஆகவே, எப்படியாவது கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும் என்று ஊக்கம் பிறந்தது.

இரண்டாவது — பள்ளியின் ஆண்டு விழாவில், மெட்ரிகுலேஷன் தேர்வில் முதலாவதாகத் தேறிய ஒரு மாணவன் தங்கப்பதக்கம் பெற்றதை இவர் பார்த்தார். அப்போது, நாமும் இதேபோல் பெறவேண்டும் என்று உறுதி கொண்டார். அவர் நினைத்தது நடந்தது. சம்பந்தனாரும் தங்கப்பதக்கம் பெற்றார்.

* * *

'1891-ஆம் ஆண்டு,என் ஆயுளில் இரண்டு முக்கியமான சம்பவங்கள் நேர்ந்தன. ஒன்று மிகவும் துக்ககரமானது. மற்றொன்று மிகவும் சந்தோஷமானது' என்று கூறுகிறார் சம்பந்தனார். அவை என்ன?

முதலில் இவர் அன்னை மறைந்ததை மனவேதனையோடு குறிப்பிடுகிறார். எப்படித் தெரியுமா? 'பகற் காலத்தில் வானம் களங்கமில்லாமலிருக்கும்போது, இடி விழுந்ததுபோல என்னை மகத்தான துயரத்தில் ஆழ்த்தியது' என்கிறார்.

இரண்டாவது, மகிழ்ச்சியான நிகழ்ச்சியாக ஒரு நாடகத்தைப் பார்த்தது பற்றிக் குறிப்பிடுகிறார். அதாவது, ஆந்திர நாடகத் தந்தை வெ. கிருஷ்ணமாச்சார்லு என்பவர், பெல்லாரியிலிருந்து சென்னைக்கு வந்து, தான் ஏற்படுத்திய சரச விநோத சபை உறுப்பினர்களுடன் தெலுங்கு நாடகமொன்றை நடத்தினார். அதை, தகப்பனாருடன் போய்ப் பார்க்கும் வாய்ப்பும் பெற்றார்.

சம்பந்தனார் பிற்காலத்தில், தமிழ் நாடகங்கள் எழுதுவதற்கும், தமிழ் நாடகங்களில் நடிப்பதற்கும் இதுஒரு அரியநிகழ்ச்சியாக இருந்தது.

'அன்னையும் பிதாவும், முன்னறி தெய்வம்' என்பார்கள். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் நாம் படித்திருக்கிறோம். சம்பந்தனாரின் பெற்றோர்கள் அவருக்குக் கூறிய அறிவுரைகள் - அறவுரைகள் பல. அவற்றையெல்லாம் அப்படியே தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார் சம்பந்தனார். அந்த இனிய உரைகள் தாம் என்னென்ன?

* என்ன இடுக்கண் நேர்ந்தபோதிலும் தைரியத்தைக் கைவிடாதே. தெய்வத்தை நம்பியிரு.

* எல்லாரையும் மகிழ்வித்து, நீ மகிழ்ச்சியாய் இரு.

* உண்மையே எப்பொழுதும் பேசு.

* கடுகடுத்துப் பேசாதே. இனிமையாய்ப் பேசு.

* உனக்கு யாராவது கெடுதி செய்தால் அதைப் பொறுத்துக் கொள். அவர்களுக்கு நீ நன்மை செய்யும்படி முயல்.

* கோபத்திற்கு இடம் கொடாதே. கோபம் வந்தால் முற்றிலும் அடக்கிவிடு.

* எந்நேரமும் நகை முகத்துடன் இரு.

* செல்வம் வந்தால் செருக்கடையாதே. ஏழ்மை வந்தால் தளர்ச்சியடையாதே.

* மனத்தினால் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. வாக்கினால் தீமை பேசாதே. செய்கையால் தீங்கு இழைக்காதே.

* பேராசைப் படாதே. கிடைத்தது போதும் என்று மகிழ்ச்சியுடன் இரு.

* வரும்படிக்குமேல் செலவு செய்யாதே. உன்னால் இயன்ற அளவு தர்மம் செய்.

* இன்றைக்குச் செய்ய வேண்டிய ஒரு வேலையை இன்றைக்கே செய்து முடி. நாளைக்கென்று தள்ளிப்போடாதே.

* புண்ணியம் செய். பாபம் செய்யாதே.

- இந்த நீதிபோதனைகள் அவருக்கு மட்டுமா? இல்லை. நமக்கும்தான்!

* * *

'மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் இறைவனிடம் மூன்று வரங்கள் கேட்பேன்' என்கிறார் சம்பந்தனார். அந்த மூன்று வரங்கள்தாம்:

1. அப்பிறப்பில் — இப்பிறப்பில் எனக்குத் தாய் தந்தைகளாய் இருந்தவர்களே, அப்பிறப்பிலும் தாய் தந்தையர்களாய் இருக்க வேண்டும்.

2. இப்பிறப்பில் என் நண்பர்களாய் இருந்தவர்களே எனக்கு நண்பர்களாய் இருக்க வேண்டும்.

3. அப்பிறப்பிலும் நான் ஒரு தமிழ் நாடக ஆசிரியனாகவும், விநோதத்திற்காகத் தமிழ் நாடகங்களில் நடிக்கும் நடிகனாகவும் இருக்க வேண்டும்.

* * *

1898-இல் மதுவிலக்குச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்த இவர், 64 ஆண்டுகள் உழைத்தார். மூன்று மாதத்திற்கு ஒரு முறை அருகிலுள்ள ஏதாவது ஒரு ஊருக்குப்போய், மதுவினால் உண்டாகும் கேடு குறித்து பிரச்சாரம் செய்தார். அன்றைய ஆங்கிலேய அரசு, மது விலக்குப் பிரச்சாரக் குழுவொன்றை ஏற்படுத்தி அக்குழுவிற்குச் சம்பந்தனாரைத் தலைவராக நியமித்தார்கள்.

—பி.வி.ஜி.

* * *

**சம்பந்தனார் பிறந்த நாள்: பிப்ரவரி-1**

தமிழகக் கிராமங்களில்

# மருத்துவ வசதிகளைப் பரவலாக்கப் பத்தாயிரம் முகாம்கள் நடத்தப்படும்!

**'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்' தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பு**

தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கை வளம் பெறவும், அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையவும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பல்வேறு கனவுகளை நனவாக்கும் வகையிலும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வெற்றி கண்டு வரும் நமது அரசின் மற்றுமொரு புதிய திட்டமாகிய, இம் மருத்துவ நலத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் பெருமிதம் அடைகின்றேன். மருத்துவத் துறைக்காக 1.50 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைப்பதிலும்; 5.83 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் முன்னரே எங்களது தேர்தல் அறிக்கையில், 'அனைவர்க்கும் சுகாதார நல்வாழ்வு அளிப்பதே எங்கள் ஆட்சியின் நோக்கமாக அமையும். இந்த இலக்கை அடையும் வகையில், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும், மருத்துவ வசதி கிடைக்க அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்யும். கிராமப்புற ஏழை மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில்,நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல் முதலான பொதுச் சுகாதாரத் திட்டங்கள், தக்க முறையில் மாற்றியமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும். கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளில், மருத்துவர்கள் மற்றும் மருந்துகள் இல்லை எனும் குறை அறவே நீக்கப்படும்', என்று குறிப்பிட்டிருந்தோம்.

தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இந்தப் புதிய திட்டம் அமைந்துள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்து, அவற்றைத் திறமையுடனும், விரைவாகவும் நிறைவேற்றுவதற்கான தக்க நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலமாக வசதிகளை முழு அளவில் செய்து, வெற்றி காண்பதில் தமிழகம் இணையற்று விளங்குகிறது என்பதை, அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலங்களுக்கும். ஓர் முன்னுதாரணமாக இத்திட்டத்தையும் தொடங்குகிறோம்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 'சத்துணவுத் திட்டம்', இந்திய நாட்டிலேயே முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டது. முதற்கட்டத்தில் இத்திட்டத்தின் நோக்கம், பலன்கள் போன்றவற்றை முழுமையாக அறியாத சிலர், தேவையற்ற விமர்சனங்களைச் செய்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால், இன்று, அனைத்து நாட்டு மக்களும் இத்திட்டத்தின் பலனைக் கண்டு, நாம் பெருமைப்படும் வகையில் வியந்து போற்றுகின்றனர். புரட்சித் தலைவரின் தொலை நோக்கினைப் பாராட்டுகின்றனர்.

அதேபோல், இன்று தொடங்கப்படவிருக்கும் மருத்துவ நலத் திட்டமும் தமிழ்நாட்டில் குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் நல்வாழ்வினை அளித்து, எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உரிய, திடகாத்திரமான உடல் வலிவைப் பெற்றவர்களாக அவர்கள் திகழ, இத்திட்டம் பெரிதும் உதவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

எனினும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. திட்டங்களை நிறைவேற்றும் அணுகுமுறையில், செயல்பாடுகளிலும், நாம் மேலும் முன்னேற்றம் காண்பது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமாகிறது.

தொழுநோய், காசநோய், கண்நோய் போன்றவை, தமிழக மக்களை அதிகமாகப் பாதித்து



வருகின்றன. இந்த நோய்களைத் தீர்க்க, கிராம மக்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொண்டுதான் கிராம மக்களுக்காக, அவர்கள் இருக்கும் இடத்திலேயே மருத்துவ வசதிகள் செய்து தருவது என்கிற எங்கள் இலக்கினை அடைய, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் மருத்துவர்களைக் காண்பது அரிது என்றிருக்கும் அவல நிலையைப் போக்கிடும் வகையில், பல்வேறு மருத்துவத் துறையில் உள்ள நிபுணர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி, பரிசோதனை வசதிகள் செய்து கொடுத்து, மருத்துவ வசதிகளைப் பரவலாக்கிட இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் இன்னதென ஆராய்ந்து, நோயின் காரணங்களை அறிந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, அந்த வழிகள் உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும். வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் சுட்டிக்காட்டியதற்கு, இம் மருத்துவ நலத் திட்டம் உரிய வகையில் செயல் வடிவம் தரும்.

இந்தத் திட்டத்தின்கீழ் முகாம்கள் நடத்தப்பட்டு, விளக்க உரை, கண்காட்சி மற்றும் வீடியோ படங்களின் மூலம், சுகாதாரக் கல்வியும் போதிக்கப்படும். கிராமப்புற மக்கள் தங்களின் நல்வாழ்விற்காக, தங்களின் பழக்க வழக்கங்களை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறப்படும்.

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதன் மேன்மை, குடிப் பழக்கத்தினால் ஏற்படும் தீமை, தவறான பழக்க வழக்கங்களினால் உடலுக்கு ஏற்படும் குறைகள், மற்றும் இடர்ப்பாடுகள் பற்றியும் இம்முகாம்களில் எடுத்துரைக்கப்படும்.

இன்னும் ஆறுமாதக் காலத்திற்குள், தமிழகத்தில் இதுபோன்ற 10,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கால கட்டத்திற்குள், தமிழக மக்களுக்கு நான் கொடுக்க நினைத்த, சுகாதாரப் பாதுகாப்பு அரணின் அடித்தளம் நிர்மாணிக்கப்படும் என்று நம்புகிறேன். மேலும் இத்திட்டத்தை நீட்டித்து, தமிழக மக்களுக்கு முழு மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் மாபெரும் வெற்றி அடைய, அரசும், அரசு அலுவலர்களும், அரசு மற்றும் தனியார் மருத்துவர்களும் இதில் ஈடுபட்டால் மட்டும் போதாது. இத்திட்டத்தின் பயனைப் பெற இருக்கின்ற பொதுமக்கள், முழுமனதுடன் இத்திட்டத்தில் ஈடுபட வேண்டும், பயன்பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நோய் இருப்பதை மறைப்பதால், நோயைக் குணப்படுத்த முடியாது. அது உங்களின் நிரந்தரக் குறையாக அமைந்துவிட வாய்ப்புள்ளது. எனவே, மக்களிடையே சுகாதார வாழ்க்கை குறித்த விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். நீங்கள் மனமுவந்து முன் வந்து நலம் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சிறந்ததொரு முன்னோடித் திட்டத்தை, முழுமையாக வெற்றிபெறும்படி நிறைவேற்றிடும் வகையில், உதவ முன்வந்துள்ள பல்வேறு துறை அதிகாரிகளுக்கும், தனிப்பட்ட மருத்துவர்களுக்கும், மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கும், என் சார்பிலும் அரசின் சார்பிலும், இதய பூர்வமான நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சி தமிழ்நாட்டில் மருத்துவப் புரட்சி', எனப் பலரும் பாராட்டும் வகையில் அமைந்திட வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்கச் செயல்பட்டு, பசிப்பிணி போக்கிடப் புரட்சித் தலைவர் தொடங்கிய சத்துணவுத் திட்டம் போல், நாம் தொடங்கிடும் இத்திட்டமும், நோயற்ற வாழ்வை நம் தமிழ் மக்களுக்கு வழங்கிச் சிறந்திடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

***(18.1.92 அன்று, கலைவாணர் அரங்கில் இலவச மருத்துவ நலத் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.)***

## பார்த்தோம் படித்தோம்

**தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் டாக்டர் பட்டம் பெறும் அட்டைப்படமும் அரிய பட்டமளிப்பு விழாப் பேருரையும் என்றும் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கக்கூடியது.**

**—பி.ராஜசேகரன்,**
**மதுரை.**

**கர்நாடகக் கொடுமைகளுக்கு அனைத்துக் கட்சி சார்பிலும் நிரந்தரத் தீர்வு காணுவதாகக் கூறிய முதல்வரின் உரை பாராட்டத் தக்கது.**

**—காகை ஜெ.ரவிக்குமார்**
**காங்கேயம்-1.**

**''மனிதனின் கவனக்குறைவு மற்றும் அலட்சியப் போக்கினால் ஏற்படும் விபத்துக்கள், இயந்திரம் மற்றும் மின்சாரக் கோளாறுகளினாலும் இயற்கையின் சீற்றத்தினாலும் நிகழும் விபத்துக்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது எப்படி என்று முழு விவரமாக அமைந்த அந்தக் கட்டுரை- பயனுள்ளதாக அமைந்திருந்தது.**

**—ந.சுந்தரபுத்தன்,**
**கண்கொடுத்த வனிதம்.**

# தெலுங்கு கங்கைத் திட்டம்

## தமிழக - ஆந்திர முதல்வர்கள் சந்திப்பு

சென்னை மாநகருக்கு, கிருஷ்ணா நதியில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கான தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களும்,மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். ஜனார்த்தன ரெட்டி அவர் களும் 11-1-92 அன்று புதிய உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர்.

இரண்டு முதலமைச்சர்களும் 90 நிமிட நேரம் பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக இந்தப் புதிய உடன்படிக்கை எட்டப்பட்டது.

இதன்படி, சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை 1995-96-ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள்ளாக கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குக் கிடைத்துவிடும்.

1983-ஆம் ஆண்டு தொடங்கிய இந்தத் திட்டம், ஏற்கெனவே 1992-ஆம் ஆண்டு முடிவடைந்து விடும் என்று அறிவிக்கப்பட்டிருந் தது. இப்போது அது ஓராண்டு தாமதப்படும் என்று இந்தப் புதிய உடன்படிக்கையின் மூலம் முடிவாகியிருக்கிறது.

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா ஆற்றில் இருந்து சென்னைக்குக் கொண்டு வரும் தெலுங்கு கங்கைத் திட்டத்துக்கு 1983-ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டம் பாதி முடிவடைந்த நிலையில் உள்ளது.

இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது பற்றி மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்களுடன் பேச்சு நடத்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஐதராபாத் சென்றார். ஆந்திர மாநில தலைமைச் செயலகத்தில் 11-1-92 அன்று இரு முதல்வர்களும் சந்தித்துப் பேசினர்.

தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள் நடந்து வருவது தொடர்பான வரைபடங்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் காட்டப்பட்டது. திட்டப் பணிகள் தொடர்பான வீடியோ படம் ஒன்றும் போட்டுப் பார்க்கப்பட்டது.

சென்னை நகர மக்களுக்குத் தெலுங்கு கங்கைத் திட்ட தண்ணீர் விரைவில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பேச்சுவார்த்தையின்போது மாண்புமிகு ஆந்திர முதல்வரிடம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். நீண்ட நேரப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, தெலுங்கு கங்கைத் திட்டத்தை 1995-96-இல் நிறைவேற்றி முடிப்பது என இரு தலைவர்களும் முடிவு செய்தனர். இது பற்றிய ஒப்பந்தத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஜனார்த்தன ரெட்டி அவர்களும் கையெழுத்திட் டனர்.

தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற 1,003 கோடி ரூபாய் செலவாகும் என்று 1989-ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டது. விலை வாசி உயர்வு காரணமாக இந்தத் திட்டச் செல வுக்கு 1,120 கோடி ரூபாய் ஆகும் என இப் போது மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்குத் துணையாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. செல்லப்பன், கிருஷ்ணா நீர்த் திட்டத் தலைமைப் பொறியாளர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

‘தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து ஐதராபாத் தில் பரஸ்பரப் பேச்சு வார்த்தை நடத்துவதற்குச் சம்மதித்த மாண்புமிகு ஆந்திர முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்துக்கு இந்தத் திட்டம் மிகவும் தேவையானது போல உங்களுக் கும் முக்கியமானது என்பதை அறிவேன். இந்தியா வில் 4- வது பெரிய நகரமான சென்னை நகரம் பல ஆண்டுகளாகக் கடும் குடிநீர்ப் பற்றாக் குறையை எதிர்நோக்கி உள்ளது. சென்னையில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்குள் போதுமான நீர் ஆதாரம் எதுவும் இல்லை.

வடகிழக்குப் பருவ மழையை நம்பித்தான் குடிநீர் வழங்கல் இருக்கிறது. இந்தப் பருவமழை நிலையற்று இருப்பதால் இதைச் சார்ந்து இருக்க

முடியாத நிலையில் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. நாட்டிலேயே சென்னை நகரில்தான் தனி நபருக்கு வழங்கப்படும் குடிநீர் வழங்கல் அளவு குறைவு. விரைவில் தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்றுவது தேவையான ஒன்றாகும்.

'மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திர ஆகிய மாநிலங்கள் கிருஷ்ணா நதியில் இருந்து தங்கள் பங்கு தண்ணீரில் தலா 5 டி.எம்.சி. தண்ணீரைத் தரச் சம்மதித்து இருக்கிறது என்று மறைந்த பிரதமர் இந்திராகாந்தி 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னையில் அறிவித்தார். அதில் இருந்து ஆந்திராவும், தமிழக அரசும் 15 டிஎம்சி கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து பெண்ணாறு மூலமாக எடுக்கும் திட்டத்துக்கான நடவடிக்கைகளை மேற் கொண்டது.

'ஐதராபாத்தில் 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ந் தேதி ஆந்திரா மற்றும் தமிழ்நாடு முதல்வர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது, இரு மாநில மக்களிடமும் பெரிய நம்பிக்கைகள் தோன்றின. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். ஐதராபாத்துக்கு வந்தபோது அவரிடம் காட்டப்பட்ட மரியாதையை யும் நல்லெண்ணத்தையும் நான் அறிவேன்.

'ஆண்டுகள் கழிந்தபிறகும் இந்தத் திட்டம் இன்னும் முடிவடையவில்லை. இந்தத் திட்டம் நிறைவேறுவது தொடர்பான பல்வேறு பிரச்சி னைகள் குறித்து இரு மாநில அலுவலர்களும் அடிக்கடிச் சந்தித்துக் கருத்து பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள். அவர்களால் முடிந்த அளவு பல இடையூறுகளை நீக்கி வருகிறார்கள்.

'இரு மாநில தலைமைச் செயலாளர்களும் சந்தித்து இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த முடிவு களை எடுத்து வருகிறார்கள். தலைமைச் செயலாளர் களின் கடைசிக் கூட்டம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் தேதி சென்னையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் பல பிரச்சினைகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

'ஆந்திராவில் 5 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் கொடுக்கும் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து சென்னை நகரின் குடிநீர் வழங்கலுக்கு 15 டிஎம்சி தண்ணீர் தரும் வகையிலான இந்தத் திட்டம் மிகச் சாதாரணமானதும், பாரம் பரியமானதுமாகும். எந்தவிதத் தொழில்நுட்பச் சிக்கலும் இதில் இல்லை.

'இந்தத் திட்டத்துக்கான செலவுத் தொகையை எவ்வாறு தமிழக அரசும், ஆந்திராவும் பிரித்துக் கொள்ள வேண்டும்? தமிழ்நாடு எல்லையில் எப்போது குடிநீர் வழங்கலுக்காகத் தண்ணீர் கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் அந்த ஒப்பந்தத்தில் விரிவாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. வேலைகள் நடக்கும்போது தமிழ்நாடு



★ தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமல்ல; களங்கம்.

— காந்தியடிகள்

எவ்வாறு பணம் வழங்க வேண்டும் என்பதெல் லாம் ஒப்பந்தத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

'பொது ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந் தனைகளை எல்லாம் தமிழ்நாடு நிறைவேற்றி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்தபட்சம் 3 ஆண்டில் அதிகப் பட்சம் 6 ஆண்டுக்குள் சென்னை நகருக்குக் குடிநீர் கிடைக்கும் வகையில் பணிகளை நிறை வேற்ற தமிழ்நாடு, ஆந்திர முதல்வர்கள் முடிவு செய்தனர்.

துரதிருஷ்டமாக மத்திய அரசின் வனத்துறை அனுமதி இந்தத் திட்டத்துக்குக் கிடைப்பதில் ஏற் பட்ட தாமதம், நிதி நெருக்கடி, தேவையான அளவு முதலீடு செய்யாதது போன்ற பல காரணங் களால் இந்தப் பணிகள் நடப்பதற்கு இடையூறு ஏற்பட்டது.

'விரைவில் சென்னை நகர மக்கள் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைப் பெறும் வகையில் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த விசேஷமாக உங்கள் உதவியைக் கோரி நான் இங்கு வந்து இருக்கிறேன். சமீபத்தில் நடந்த நமது மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தில் இடையூறுகளை எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி பல னாவது கிடைக்கும் வகையில் பணிகளை விரைவு படுத்த அவர்கள் நம் முன்பு ஆலோசனைகளை வழங்கி உள்ளனர்.

'இந்த இலக்குத் தேதியில் பணிகளை முடிக்க ஒரு செயல் திட்டத்தைத் தீட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தச் செயல் திட்டம் குறித்து நாம் விரிவாக விவாதித்து, அந்தத் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்பட்டு அடிக்கடி இந்த மாநில தலைமைச் செயலாளர்கள் கூட்டுக் கூட்டத் தில் தீவிரமாகக் கண்காணிக்கப்பட நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

'ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி தமிழக அரசு தனது பங்கை வழங்கும் என்று தமிழக அரசின் சார்பில் நான் உறுதி அளிக்கிறேன். விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற நீங்கள் உதவவேண்டும்.

'சென்னை நகர மக்களுக்கு ஆந்திர முதல்வர் அவர்கள் புதியவர் அல்ல. சென்னை நகர் மீது அவருக்குள்ள அன்பின் காரணமாக, இந்தத் திட்டத்தில் அவர் விசேஷ அக்கறை எடுப்பார் என்பதில் எனக்கு ஐயமில்லை' ●

## சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (முதல் பாகம்)

**ஆசிரியர்:** மானோஸ்

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:100 விலை:ரூ.12/-

மனிதனின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு உதவும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தன்னம்பிக்கையின் உதவியினால் வெற்றி பெற்ற பெருமக்கள் குறித்துச் சுவையாக எடுத்துக் கூறியுள்ளார் நூலாசிரியர்.

தோல்வி பெற்ற பெருமக்கள் பலர் மனந்தளராமல் பணியாற்றி வெற்றியை ஈட்டிய செய்தியும் விவரிக்கப்பட்டுள்ளது ஊனமுற்றவர்களும் முயற்சியின் காரணமாக வெற்றி பெற்ற வரலாறும் இந்நூலில் காணப்படுகிறது. மொத்தத்தில், வெற்றிக் கனியைப் பறித்துக் கொண்ட பல்வேறு நாட்டுப் பெருமக்களை இந்நூலின் உதவியால் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நமது வாழ்கைப் பாதையை அமைத்துக் கொள்ள இந்நூல் துணை புரிகிறது.

## சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (இரண்டாம் பாகம்)

**ஆசிரியர்:** மானோஸ்

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:67 விலை:ரூ.8/-

மனமும் வாக்கும் ஒன்றுபட்டால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இந்தக் கருத்துக்கு அரண் சேர்க்கும் வண்ணம் பல்வேறு செய்திகள் இந்நூலில் பரவிக் கிடக்கின்றன. மனம் வலிமை பெறுவதற்கு உடல் நலமும் தேவை என்பதை ஆணித்தரமாகக் கூறும் நூலாசிரியர், 'தாழ்வு மனப்பான்மையை மனிதன் அகற்ற வேண்டும்; அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற இயலும்' என்பதை நன்கு விளக்கியுள்ளார். சரளமான நடை - இனிய சொல்லாட்சி இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

## சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (மூன்றாம் பாகம்)

**ஆசிரியர்:** மானோஸ்

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

# நூல் நயம்

பக்கம்:91 விலை:ரூ.12/-

மனிதன் சாதனை புரிய வேண்டும் என்பதை, அறிவியல், உள இயல், வரலாற்று இயல், புவி இயல், ஆன்மீக இயல் இப்படிப் பல்வேறு இயல்களின் உதவி கொண்டு இந்நூலில் விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

எங்கெங்கே சுற்றினாலும் சொந்த வீட்டுக்குத் திரும்பித்தான் ஆக வேண்டும். என்னதான் மேலை நாட்டு நாகரிகம் - பழக்க வழக்கம் ஆகியவற்றை நாம் பின்பற்றினாலும் நமது சொந்த நாட்டுப் பண்பாடே உயர்ந்தது என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. நோய் நீங்க - நல வாழ்வு கிடைக்க யோகாவும் பிராணாயமும் தேவை என்பதை நூலாசிரியர் எடுத்துச் சொல்லியிருப்பதன் மூலம் நமது பண்பாட்டுச் சிறப்பு தெற்றென விளங்குகிறது. வாழ்க்கையில் வெற்றி பெற ஒருவரிடம் உறைந்திருக்கும் நலன்கள் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

—தமிழ்ப்பித்தன்

## மலரும் நினைவுகள் (மறக்க முடியாத தன் வரலாற்றுக் குறிப்புகள்)

**எழுதியவர்:** திருமதி இந்திரா காந்தி

**தமிழாக்கம்:** கி. வேங்கடசுப்பிரமணியன்

**வெளியிட்டோர்:**

பூரம் பதிப்பகம்
59, ராஜூ நாய்க்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-600 033.

பக்கம்:106 விலை:ரூ.13

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய முக்கியத்துவம் வாய்ந்த தன் வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டது இந்நூல். இதனை டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்.

ஆனந்த பவனம் தொடங்கி, இறுதி உரை வரை - திருமதி இந்திரா காந்தி அவர்கள் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இதிலே தொகுத்துக் கூறியுள்ளார்.

இந்தச் சுவையான துணிச்சல் மிக்க வீர வரலாற்றை இளைய தலைமுறை மட்டுமல்ல, எல்லாத் திறத்தாருமே படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

— கிரி

## இயற்கை மருத்துவம்

**ஆசிரியர்:** மகரிஷி க. அருணாசலம்

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:351 விலை:ரூ.30/-

இயற்கை மருத்துவத்தில் உலகத்துக்கே வழிகாட்டியாகத் திகழ்வது நம் இந்தியத் திருநாடு. அண்மைக் காலங்களில் நமது அரசும், நம் மக்களும் இயற்கை மருத்துவத்தின் பால் தமது அக்கறையையும், ஆர்வத்தையும் திருப்பியுள்ளனர்.

இந்நூலாசிரியர் உண்ணா நோன்பின் வகைகளையும், அதன் பலன்களையும், கொள்ளும் வழிகளையும், பிராணாயாமம் என்ற காற்றுச் சிகிச்சை முறைகளைப் பற்றியும், மற்றும் வெப்பச் சிகிச்சை, நீர்ச் சிகிச்சை, மண் சிகிச்சை போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களையும் எளிய நடையில் வழங்கியுள்ளதோடு, சில ஆசனங்களைப் பற்றியும், அவைகளை எக்காலத்தில், எதற்கு எப்படிச் செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளக்கப் படங்களுடன் விவரித்துள்ளார். அத்துடன் ஆஸ்த்மா, நீரிழிவு, குடல்வால் நோய், பற்களில் வரும் வியாதிகள் பற்றியும் விளக்கமாகக் கூறி அவைகளைத் தடுக்கும் இயற்கை மருத்துவத்தின் மகிமையைப் பற்றியும் குறிப்புகள் தந்துதவியுள்ளார். அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய நூல்.

—சுகுமாரன்

## அறுவடை பின்சார் தொழில் நுட்பம்

**ஆசிரியர்:** ப. பிள்ளையார்
டாக்டர் வ. சுப்பிரமணியன்.

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:179 விலை:ரூ.25/-

விவசாயிகள், தானிய விற்பனையாளர்கள் போன்றோருக்கு மிகுந்த பயன்தரவல்ல அருமையான நூல்.

உணவு தானியங்களின் ஊட்டச்சத்து முதல் கதிர் அடிப்பு முறைகள், தானியம் உலர்த்தும் வழிமுறைகள், சேமிக்கச் சிறந்த வழிகள், பயறுகள் உடைத்தல், எண்ணெய் வித்துக்களைப் பதப்படுத்தும் முறைகள், அறுவடை இயந்திரம், கதிர் அடிப்பான்கள் தூற்றும் இயந்திரங்கள் என்று படிக்கப் படிக்க பிரமிப்பைத் தரும் விவசாய முன்னேற்றமும் நூதன முறைகளும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆலை அமைப்பு முறைகளும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

எல்லாவற்றிற்கும் விளக்கப்படங்கள் தெளிவாகவும், புரிந்துகொள்ள எளிமையாகவும் உள்ளன. விவசாய சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய பயனுள்ள நூல்.

- என். குமாரசாமி.

(8 —ஆம் பக்கம் தொடர்ச்சி)

பின் ஒன்றாக நிறைவேற்றி வருவதே இதற்குச் சாட்சியாகும்.

மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திர மாய் விளங்கும் எங்கள் அரசு, தமிழகத் தின் எதிர்பார்ப்புகளை விரைவில் முழு வதுமாக நிறைவேற்றும். எங்கள் இலட் சியப் பாதையில், முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

**இம்மாவட்டத்திற்கு ரூ.225 கோடி**

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர் களை நமக்குத் தந்த இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கென, இவ்விழா நிகழ்ச்சியில் மட்டும், ஏறத்தாழ 225 கோடி ரூபாய்க் கான திட்டங்கள் தொடங்கிவைக்கப் பட்டுள்ளன.

நான் இங்கே வேட்பாளராக உங் களைச் சந்தித்தபோது, மிக முக்கியப் பிரச்சினையாக முழுவதும் நிலவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு பற்றித் தான்.

நான் தேர்தல் பிரச்சாரத்திற்காகக் காங்கேயம் தொகுதியைச் சுற்றி வந்த பொழுது, ஒவ்வொரு கிராமத்திலும் நான் சந்தித்த தாய்மார்கள் அனைவரும் என்னிடம் கேட்டுக்கொண்டது-

'நாங்க உங்களுக்கு ஓட்டுப்போட றோம். நீங்க வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினரா வந்து, எங்க குடிநீர்ப் பிரச் சினையைத் தீர்த்து வையுங்க' என்பது தான், நானும் அவர்களிடம், 'நிச்சயமாக உங்களது கோரிக்கையை நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன் நிறைவேற்றித் தருகிறேன்' என்று வாக்குறுதி அளித் தேன். தற்போது நான் உங்கள் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத போதிலும், நான் நேரில் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கத்தான், இன்று இங்கு வந்துள் ளேன். காங்கேயம் தொகுதியின் குடி நீர்ப் பிரச்சினையினை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக, இன்று இந்த விழாவில், காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற் கான அடிக்கல்லை நாட்டியுள்ளேன்.

இத்திட்டத்திற்காக ரூ.20.43 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளேன். இந்தத் திட்டத்தினால், காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களின் பல்லாண்டுக் கோரிக்கையான, பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் நான் இத் தொகுதித் தாய்மார்களுக்குக் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளேன், என்பதையும், பெருமகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத் தின்மூலம், காங்கேயம் தொகுதி மட்டு மல்லாது, வெள்ளக் கோயில், பொங்களூர் மற்றும் தாராபுரம் தொகுதிகளிலுள்ள பல கிராமங்களுக்கும், நிரந்தரப் பயன் கிடைக்க உள்ளது என்பதை, இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு பகுதிகளில் சிறு தொழில்கள் தொடங்கவும் - தொடங்கும் தொழிற் சாலைகளுக்கு மானியங்கள் வழங்கவும் மட்டும், 16 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான மதிப்பீடுகள் அரசால், ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தகைய நல்ல திட்டங்களையும் தற்போது, உங்கள் அனைவரது கரவொலி வாழ்த்துக் களோடு தொடங்கி வைத்துள்ளேன்.

இப்பகுதி மக்கள், நீண்ட நெடுநாட் களாகக் கோரி வந்துள்ள, ரூபாய் 13 கோடி செலவிலான நொய்யல் அணைக் கட்டுத் திட்டத்தையும், மெத்த மகிழ்ச்சி யோடு திறந்துவைத்துள்ளேன்.

குறிப்பாகக் காங்கேயம் தொகுதியின் மிகப்பிரதான சாலையாகக் கருதப்படும், பெருந்துறை-காங்கேயம் நெடுஞ்சாலை யைச் செப்பனிட்டுச் சீர்செய்ய மட்டும், ரூ.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரி வித்துக் கொள்கிறேன். இச்சாலையில் சென்னிமலை அருகே, பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தை, மீண்டும் புதுப்பித்துக் கட்டுவதற்காக மட்டும், ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசின் சாதனைகள்**

வருவாய்த்துறை மூலமும், சமூக நலத் துறை மூலமும், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறைகள் மூலமும், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத் துறை மூலமும், பொதுப்பணித்துறை மூலமும், கைத்தறித்துறை மூலமும், ஊரக வளர்ச்சித்துறை மூலமும், இன்னும் அரசின் அனைத்துத் துறைகள் மூலமும், ஏராளமான திட்டங்களை உங்கள் கண் முன் இதோ தொடங்கி வைத்துள்ளேன். இவை எல்லாம், கடந்த ஏழு மாத காலம் நடந்துள்ள எங்கள் ஆட்சிச் சாதனைகள் என்பதை மெத்தப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்டுள்ள நிகழ்ச்சிகள் மூலமும், பல கோடி ரூபாய்க்கான திட்டங் களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

● கல்வியும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

—தந்தை பெரியார்

ஆனால், இன்று பெரியார் மாவட்டத்தில் தான், மற்ற எல்லா மாவட்டங்களையும் மிஞ்சும் அளவுக்கு, மற்ற மாவட்டங்களில் தொடங்கிய திட்டங்களைவிட அதிகமாக, ரூபாய் 225 கோடிக்கான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

மேலும், இன்றைக்கு நடைபெறும் அரசு விழாவை, ஓர் மாநில மாநாட்டை மிஞ்சும் அளவுக்கு இங்கே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இத்தனைச் சிறப் புற நடத்திடக் காரணமாக இருந்து, உழைத்திட்ட அமைச்சர் பெருமக்களையும் அரசு அலுவலர்களையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர்; எனது அன்புச் சகோதரர் செங்கோட்டையன் அவர் களின் கண்துஞ்சாத பணி ஆற்றலை, இந்த நல்ல நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். நான் கடந்த சட்டமன்றத் தேர்தலில், பெரியார் மாவட்டத்தில்தான் போட்டியிடவேண்டும் என வற்புறுத்தி அழைத்ததில், பெரும்பங்கு அவருக்கு உண்டு.

சகோதரர் செங்கோட்டையன் அவர்கள், தொடக்க காலத்தில் இருந்து தான் கொண்ட கொள்கையிலிருந்தும், ஏற்றுக்கொண்ட தலைமையிலிருந்தும் துளிகூட மாறுபடாத பாங்குடையவராக வளர்ந்து வந்துள்ளார். கட்சியின் அடி மட்டத் தொண்டர்களில் ஒருவராகப் பணியைத் தொடங்கி, மாவட்டச் செய லாளராக, சட்டமன்ற உறுப்பினராக, தலைமைக்கழகத்தின் அமைப்புச் செய லாளராக, தற்போது கொள்கை பரப்புச் செயலாளராக, இப்படிப் பல்வேறு பொறுப்புக்களிலும், கொடுத்த பணியைச் சிறப்புடன் செய்து முடிக்கும் செயல் வீரராகத் திகழ்ந்துள்ளார் என்று சொன் னால், அது மிகையாகாது.

கழகத்திற்குச் சோதனை வந்த காலத் தில் எல்லாம், சற்றும் சருக்கலுக்கோ, வழுக்கலுக்கோ, இடம் கொடுக்காது, தன்னுடைய அரசியல் நிலையிலிருந்து சற்றும் சலனத்திற்கு ஆளாகாது, எப் போதும் தனது நிலையிலிருந்து மாறாத பண்பாளராக, சகோதரர் செங்கோட்டையன் திகழ்ந்த காரணத்தால்தான், இன்று அவர் அமைச்சரவையில் பொறுப்பேற்கும் அளவுக்கு உயர்ந்துள்ளார். கழகப் பணி யிலும் சரி, அரசுப் பணியிலும் சரி, அவரது கடின உழைப்பினைப் பல்வேறு சந்தர்ப்பங்களில், நானே வியந்து பாராட்டி யுள்ளேன்.

அத்தகைய அருமைச் சகோதரர் செங்கோட்டையன் அவர்களும், அவருக் குத் துணையாகப் பணியாற்றி வரும் மற்ற எனது உடன்பிறப்புகளும், இங்கே சிறப்புறப் பணியாற்றி, இச்சீர்மிகு விழா வினை நடத்தியுள்ளார்கள். அவர்கள்

அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொற்கால வரலாறு**

அலைகடலென ஆர்ப்பரித்து வருகை தந்துள்ள இலட்சோப இலட்சம் தாய்மார்கள், பெரியவர்கள், இளைஞர்கள் அனைவருக்கும், என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இன்றைக்கு காங்கேயத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது போன்ற பல்வேறு திட்டங்கள், தொடர்ந்து இங்கேயும் தமிழகத்தில் ஏனைய பகுதிகளிலும் நிறைவேற்றப்படும்.

தமிழகச் சரித்திரத்தில், புரட்சித் தலைவர் வழியில் ஓர் நல்லரசு, பொற்கால வரலாறு ஒன்றை உருவாக்கியது என நிகழ்காலத்தில் மட்டுமல்ல; வருங்காலத்திலும் வரலாறு நமக்கு வாழ்த்துப் பாடிடும் அளவுக்கு, நமது இலக்கினை அடையத் தொடர்ந்து பணிபுரிவோம்.

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெல்லும் முழங்கு நஞ்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு'

- எனப் பாவேந்தர் விரும்பிய நல்ல நாடாகத் தமிழகத்தைத் திகழ்ந்திடச் செய்வோம்.



'அச்சீர்மிகு திசை நோக்கித் தமிழகத்தை அழைத்துச் செல்ல, காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள சான்றோர்கள் ஆன்றோர்கள் அனைவரது நல்லாதரவையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

**— பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், 22.1.92 அன்று நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.**


# "பார்த்தாஸ்"

## (ஏர்கண்டிசன்ட்) கேப்ரோடு, நாகர்கோவில்.

**தொலைபேசி: அலுவலகம்: 7698, இல்லம்: 3886**

**கன்னியாகுமரி மாவட்டத்திலேயே ஓர் ஒப்பற்ற ஜவுளி மாளிகை! ஆடவர், பெண்டிர், குழந்தைகள் ஆகியோருக்கான தரம் மிக்கதும், விலை குறைவானதும் ஆன ஜவுளிகளை அள்ளி வழங்கும் ஒரு தலைசிறந்த ஆடையகம்!**

**மற்ற மாநிலங்களில் தயாராகும் பட்டுச் சேலைகளும்**

**காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, தர்மாவரம், வாரணாசி**

**பட்டுச் சேலைகளும் குறைந்த விலையில் கிடைக்கும்.**





# காலமெல்லாம் உங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை!

## பர்கூர் அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் உரை

**த**மிழகத்தில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று, தமிழக முதலமைச்சராக என்னைப் பொறுப்பேற்கச் செய்திட்ட, என் பாசத்திற்குரிய பர்கூர் தொகுதி மக்களை, மீண்டும் இன்று நான் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நான் உங்களுக்குப் பணிபுரிய மிகவும் கடமைப்பட்டுள்ளேன். ஆகவேதான், பதவிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே பர்கூர் நகருக்கு நான் நேரில் வந்திருந்து, பலகோடி ரூபாய்க்கான பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்துச் சென்றேன்.

தொடர்ந்து பல பிரச்சினைகள் இருந்தும்கூட, எனக்கு வாக்களித்த உங்கள் அனைவருக்கும் என்னால் ஆன பணிகளை, தொண்டினை ஆற்றிட வேண்டும் என்ற உணர்வோடு, இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கும் இந்த நல்ல வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

நீண்ட நெடுங்காலமாகவே தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு, ஆட்சியின் அரவணைப்போ, அலுவலர்களின் கவனிப்போ அற்ற நிலையில் இருந்த ஓர் தொகுதி என்பதால், பல்வேறுபட்ட குறைபாடுகள் உடைய தொகுதியாக இத்தொகுதி இருந்துவருகிறது.

அந்த அளவுக்குப் பின் தங்கிய தொகுதி, வறண்ட தொகுதி, வறுமையில் வாடும் தொகுதி என்பதால் தான், இதுபோன்ற தொகுதிகளை முன்னுக்குக் கொண்டுவரும் ஒரே எண்ணத்தில், இத்தொகுதியை எனக்கெனத் தேர்ந்தெடுத்து, இங்கே இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்றம் சென்றுள்ளேன்.

எனவே - ஏனைய தொகுதிகளில் உள்ள வாய்ப்பும், வசதியும், பர்கூர் தொகுதியும் பெற்றிடும் திட்டங்கள் அனைத்தும், ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படுத்தப்பட உள்ளன.

அந்த வகையில் தான் இப்பகுதியின் குடிநீர்த்தேவைக்கான திட்டங்களுக்கும், சாலை மேம்பாட்டுச் சீர் திருத்தங்களுக்கும், போக்குவரத்து வசதிகளை உருவாக்கும் பணிகளுக்கும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முடுக்கி விடப்பட்டுள்ளன.

நிலமற்ற ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள், மற்றும் அடித்தளத்தில் வீழ்ந்து கிடக்கும் மக்களுக்கும், முதியோர் மற்றும் தாய்மார்களுக்கும், அரசின்

நலத்திட்ட உதவிகள் தங்கு தடையின்றி முழுமையாகக் கிடைக்க, தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோருக்குப் பொங்கல் திருநாளை ஒட்டி சேலை, வேட்டி இலவசமாக வழங்கும் ஒரு மாபெரும் திட்டத்தைச் சமீபத்தில் நான் அறிவித்தேன். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும், உங்கள் அரசு இந்தச் சிறு உதவியை, நலிந்த பொருளாதார நிலையில் உள்ள என் சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் வழங்க முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவில் இன்று நான், என் தொகுதி மக்களாகிய உங்கள் அனைவரையும் நேரில் சந்தித்துப் புத்தாடைகளை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், தொகுதியில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளும் - மக்கள் குறைகளும், கோரிக்கைகளும் - உடனுக்குடன் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்;

அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடன் அவற்றுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்திட வேண்டும் என்ற நோக்கத்தோடும், இன்று முதல் எனது சட்டமன்றத் தொகுதி அலுவலகம் ஒன்று, பர்கூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்னும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அலுவலகம், பர்கூரில் உள்ள ஜெகதேவி சாலையில், 163-ஆம் எண் உள்ள கட்டடத்தில், இன்றுமுதல் தொடங்கப்பட உள்ளது. அந்த அலுவலகம் வாரத்தில் அனைத்து நாட்களிலும், காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். என்னால் நியமிக்கப்படும் எனது நேரடிப் பணியாளர்கள் அங்கு பொறுப்பில் இருப்பார்கள்.

எனவே தொகுதி மக்கள், இவ்வலுவலகத்தைப் பயன்படுத்தி, தொகுதியின் பிரச்சினைகள், கோரிக்கைகள், குறைபாடுகள், மற்றும் புகார்களை, எனக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அலுவலகத்தில் நீங்கள் கொடுக்கும் கோரிக்கை மனுக்களும், மற்றவைகளும், நேரடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதோடு, உரிய அரசு அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றத் தொகுதி அலுவலகம் திறக்கப்பட்டுவிட்டது; இனி மேல் நான் இங்கு வரமாட்டேன் என எவரும் ஐயுற வேண்டாம். தற்போது எப்படி மூன்று மாத கால இடைவெளிக்குள்ளேயே, மீண்டும் உங்களைச் சந்திக்கத் தேடி நேரில் வந்துள்ளேனோ, அதேபோல் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் உங்களை நேரில் வந்து சந்திப்பேன்.

பர்கூர் தொகுதியில் 22 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை அமைக்கவும்; 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் நிறுவவும் ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்பகுதியில் பல தொழிற்சாலைகள் தொடங்க ஏற்பாடுகள் செய்து வருகிறேன். அவற்றிற்கெல்லாம் அடிக்கல் நாட்ட விரைவில் நான் மீண்டும் இங்கு வந்து உங்களைச் சந்திப்பேன். தேர்தல் காலத்தில் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை, முழுமையாக நிறைவேற்றுவதில், கண்ணும் கருத்துமாகச் செயல்படுவேன் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'காலத்தி னாற்செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

- என்ற கொள்கை உடையவள் நான். எனவே, என்னை அமோகமாக வெற்றிபெறச் செய்த உங்கள் பேருதவிக்காகக்காலமெல்லாம் உங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை, என்ற எனது உள்ள உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(பெரியார் மாவட்டம் பர்கூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், 23.1.92 அன்று ஆற்றிய உரை.)**

## காங்கேயம் பர்கூர்-தொகுதிகளில் முதல்வர் நிகழ்ச்சிகள்:

பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், அரசுத் திட்டப் பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, 22.1.1992 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.225 கோடி செலவில், அரசின் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தும் நலிந்த பிரிவினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பேசினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பலர் வாழ்த்துரை நல்கினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 225 கோடி ரூபாய்க்கான அரசு நலத் திட்டங்களைத் தொடங்கிவைத்து, நொய்யல் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை, சத்தியமங்கலம் பேருந்து நிலையம், தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணி உள்பட 109.66 கோடி ரூபாய்க்கான திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். 25.52 கோடி ரூபாய்க்கான அரசு நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார். ஜீவா, சேரன், தீரன், சின்னமலை, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 70 புதிய பேருந்துத் தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள்



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ஆலய புனரமைப்பு நிதிக்கு 4.77 இலட்சம் ரூபாயும், கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதிக்கு 5.16 இலட்சம் ரூபாயும் வழங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் கர்நாடகத் தமிழர் நிதிக்குத் தனது 3 மாத ஊதியம் மற்றும் காங்கேயம் தொகுதி மக்கள் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., நன்றியுரையுடன் விழா இனிது முடிவடைந்தது.

**த**ர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி, மத்தூர், பர்கூர் ஆகிய இடங்களில் 81,300 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் விழா, 23.1.1992 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 81,300 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கி, சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பர்கூர் தொகுதி மக்களின் குறைகளையும் வேண்டுகோள்களையும் உடனுக்குடன் தமது கவனத்திற்குக் கொண்டுவரும் வண்ணம் பர்கூரில் உள்ள ஜெகதேவி சாலையில் புதிய அலுவலகம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இவ்வலுவலகம் வார நாட்கள் அனைத்திலும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களால் நியமிக்கப்படும் 3 நேரடிப் பணியாளர்கள் அங்கு பொறுப்பில் இருப்பார்கள். இது தவிர 100 பேர் மக்களிடம் நேரிடையாகச் சென்று மனுக்களைப் பெற்று வருவார்கள். இப்பணிக்கென அவர்களுக்கு 100 சைக்கிள்களும் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு 3 ஸ்கூட்டர்களும் வழங்கப்படும்.

மேலும், பர்கூர் தொகுதியில் 22 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய நூற்பாலை அமைக்கப்படும் என்றும் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் நிறுவப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிது முடிந்தது. – தொகுப்பு: தே. மணி.

## சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழக அரசின் புதிய சலுகைகள்

**த**மிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் பொருட்டு சில அடிப்படைத் தேவைகளை அமைப்பதற்காகச் சுற்றுலாத் திட்டங்களுக்குப் பல சலுகைகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.1.'92 அன்று அறிவித்தார்.

சுற்றுலாவை ஒரு தொழிலாக அறிவிக்க ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அரசு ஆராய்ந்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் திட்டங்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்க ஆணையிட்டுள்ளது.

o புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

o புதிய ஓட்டல்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்.

o புதிய ஓட்டல் திட்டங்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு ஆடம்பர வரியில் 50 சதவிகிதம் சலுகைகள் உண்டு.

o புதிய தொழில்களுக்கு வழங்கப்படுவது போல சுற்றுலாத் துறைக்கும் மின்சாரக் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும்.

o புதிய சுற்றுலாத் திட்டங்களுக்காக மின்சார ஜெனரேட்டர்கள் வாங்கினால் அதன் விலையில் 15 சதம் வரை மானியம் வழங்கப்படும்.

o தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிஐஐசி) மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிப்காட்) ஆகியவை வசூலிக்கும் வட்டியிலோ அல்லது 14 சதவிகிதம் வட்டியிலோ சுற்றுலாத் திட்டங்களுக்குக் கடன் வழங்கப்படும்.

மூன்று நட்சத்திரத் தகுதி வரையிலான ஓட்டல்கள், மத்திய அரசு அங்கீகரித்துள்ள ஓட்டல்கள், பூங்காக்கள், கோல்ப் விளையாட்டுப் பயிற்சி, குளிர்ப்பதனச் சுற்றுலாப் பேருந்துகள் ஆகியவற்றுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கும். நான்கு மற்றும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களுக்கு மேற்கண்ட சலுகைகள் கிடைக்காது.

சென்னை, மதுரை, கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட சுற்றுலாத் திட்டங்களுக்கு இச்சலுகைகள் பொருந்தாது.

இதுபற்றிய முழு விவரங்களை, தமிழ்நாடு அரசிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

# 'கலைமாமணி' விருது வழங்கும் விழா

தமிழ்நாடு இயல்,இசை,நாடக மன்றத்தின் சார்பில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கும் விழா, சென்னைக் கலைவாணர் அரங்கில் 26.1.92 அன்று மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவிற்கு, மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவில், விருதுபெறும் கலைஞர்களுக்கு, மேதகு ஆளுநர் அவர்கள் பொன்னாடையும் பொற்பதக்கமும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விருது பெறும் கலைஞர்கள் 39 பேர்களுக்குக் 'கலைமாமணி' பட்டம் வழங்கினார்.

விழாவில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார் இது தவிர, மறைந்த 14 கலை மேதைகளின் திருவுருவப் படங்களையும் திறந்துவைத்தார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற திரு. சி.எஸ். ஜெயராமன், திரு. கள்ளபார்ட் நடராஜன், திருச்சி திரு. சுவாமிநாதன் ஆகியோருக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் பொற்கிழியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

சிறந்த நாடகக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை நாடகப் பிரியாவுக்கும், சிறந்த கலை நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்புக்கும் விழாவில் கேடயங்கள் வழங்கப்பட்டன.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பேசுகையில்-

'பல்வேறு வகையான கலைக் கருவூலங்களைத் தென்னிந்தியா தன்னகத்தே கொண்டுள்ளது. இன்று வரை அது உண்மை அழகோடு பாதுகாக்கப்பட்டு வருகிறது. கலை, பண்பாட்டுப் பரிவர்த்தனை மூலம், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடிகிறது' என்றார்.

## மாண்புமிகு முதல்வர் உரை:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

'கலை! மனித மனத்தின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு! உள்ளத்து உணர்வுகளின் பிரதிபலிப்பு! தான் வாழ்வதோடு, தன்னைப் படைத்தவனையும் வாழவைக்கும் வல்லமையுடையது கலை! அது காலத்தால் அழியாதது! கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும், நம் ஆன்மாவோடு உறவாடும் ஆற்றல் பெற்றது.

உலகத்தில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, நம் தாய்மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஏனெனில், தமிழ் மொழி மட்டும்தான் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆயிரக்கணக்கான இயற்றமிழ் விற்பன்னர்கள், இசைத் தமிழ் வேந்தர்கள். நாடகத் தமிழ் வல்லுநர்கள் ஆகியோரின் கூட்டுப் படைப்பாக முத்தமிழ் விளங்குகிறது. இதுவே, நம் அன்னைத் தமிழின் தனிச் சிறப்பாக, தரணி எல்லாம் போற்றப்படுகிறது. முத்தமிழைக் காக்கும் அமைப்பாக இயங்குகின்ற இயல், இசை, நாடக மன்றத்தின், இச்சீர்மிகு விழாவில் கலந்துகொள்வதில் உவகை அடைகின்றேன்.

தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான, இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை

அறிஞரைப் போற்றாத நாட்டில்
அறிஞர்கள் தோன்றுவதில்லை!

வீரரைப் போற்றாத நாட்டில்
வீரர்கள் தோன்றுவதில்லை!

கவிஞர்களைப் போற்றாத நாட்டில்
கவிஞர்கள் தோன்றுவதில்லை!

கலைமேதைகளைப் போற்றாத நாட்டில்
கலைமேதைகள் தோன்றுவதில்லை!

இதனை உள்ளத்துள் கொண்ட அரசாக, இந்த அரசு திகழுவதால்





1955-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இயல்,இசை,நாடக மன்றத்திற்கு, அன்றைய பெயர், மெட்ராஸ் ஸ்டேட் சங்கீத நாடக சங்கம் என்பதாகும்.

**தமிழக அரசால் நிறுவப்பட்ட இந்த இயல்,இசை,நாடக மன்றம், இதுவரை 752 கலை மேதைகளுக்குக் கலைமாமணி விருதை வழங்கி உள்ளது. இந்த ஆண்டு, புதிய புதிய கலைப்பிரிவுகளைக் கௌரவிக்கும் வகையில், வழக்கமாக வழங்கப்படும் 31 கலைத் துறைகளுடன், கூடுதலாக 8 துறைகளைச் சேர்த்து, 39 கலைத் துறைகளைச் சார்ந்த பெருமக்களுக்கு, கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற கலைமேதைகளில், மூவர் இன்று பொற்கிழி பெறுகிறார்கள். சிறந்த நாடகக் குழுவிற்கும், சிறந்த கலை நிறுவனத்திற்கும், அவர்களைப் பாராட்டி சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**எல்லா வகையிலும் எனக்கு ஆசானாக, குருவாக விளங்கிய, என் உயர்வுக்குக் காரணமாகிய, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை, இன்று நான் தமிழகத்தின் முதலமைச்சராகத் திறந்து வைக்கும் வாய்ப்புப் பெற்றதை, நான் பெற்ற பெரும் பேறாகவே கருதுகிறேன்.**

பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியோராய்த், தமிழகக் கலைச் சோலையில் பூத்துக் குலுங்கி, புகழ் பெற்றோராய்த் திகழ்ந்த 186 கலை மேதைகளின் படங்கள், ஏற்கெனவே இம்மாமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இன்று 14 பெருமக்களின் படங்களை நான் திறந்து வைத்துள்ளேன். இந்தப் படங்களில், மாமன்றத்தின் 200-வது படமாகத் திறக்கப்பட்டுள்ளது, நம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புனித உருவம், என்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது-

கலைத் துறையில் முடிசூடா மன்னராகச் சாதனைச் சரித்திரம் படைத்து, பொது வாழ்க்கையில் புகழ் மகுடம் சூடி, அரசியல் அரங்கத்தில் காலத்தால் அழியாத காவியமாக விளங்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றுவோர் எல்லோரும் போற்றப்படுவார்கள்; எந்த மாமன்றத்திலும் எந்தக் காலக் கட்டத்திலும், அவருக்கு ஓர் தனி இடம் உண்டு என்பது உண்மையாகிறதல்லவா? இன்றும் அதனை நம்மால் உணர முடிகிறதல்லவா? அம்மாமனிதரின் புகழ்பாடி, தமிழ்க் கலைகளை வளர்க்க, காக்க, உங்கள் அரசு தொடர்ந்து செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

வாழ்வில் நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.250 வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இன்று முதல் ரூ.400 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இயல்,இசை,நாடக மன்றச் செயலாளர் ஆர்.எஸ். மனோகர் அவர்கள் இங்கே வைத்த இதர கோரிக்கைகளை அரசு பரிவுடன்

தான், தமிழ்காத்து, தமிழர்தம் நலம் பேணி, தமிழ்க் கலைகளுக்கு அரணாக விளங்குகின்ற உங்கள் அரசு, **முத்தமிழிலும் சிறந்தோர்களைத் தேர்ந்தெடுத்து, கலைமாமணி விருது வழங்கும் இவ்விழாவினை, இன்று சிறப்பாக நடத்திக்கொண்டு இருக்கிறது.**

**இந்த விழாவில் கலந்துகொளகிற போது, என் மனதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் ஏற்படுகின்றது. ஏனெனில், இந்தக் கலைமாமணி விருது ஒரு காலத்தில் எனக்கும் வழங்கப்பட்டது. அவ்வகையில் கலைமாமணிகள் வரிசையில் நானும் இருக்கிறேன். 1972-ஆம் ஆண்டு நான் கலைமாமணி விருது பெற்றேன். இன்று நானே கலைமாமணி விருது வழங்குகிறேன். கடந்த 20 ஆண்டுகளில் எவ்வளவு மாற்றம்! அன்று விருது வாங்கிய நான், இன்று விருது வழங்குகிறேன்.**

இந்த வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் யார் காரணம் என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். என் வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த என் தாயார் அவர்களும், என்னை வழி நடத்தும் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், என்னை வாழ வைக்கும் தெய்வங்களான இலட்சோப இலட்சம் தமிழ்ப் பெருமக்களும்தான் இதற்கெல்லாம் காரணம் என்பதை உணர்கிறேன்.

### அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

திருவள்ளுவர் திருநாளில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்குத் 'திருவள்ளுவர் விருதினை' வழங்கினார்.

இரண்டாம் அட்டை:

தருமபுரி மாவட்டம், பர்கூரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நான்காவது அட்டை:

தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றத்தின் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீதிபதி மு.மு. இஸ்மாயில் அவர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கினார்.

---

அடுத்த இதழில்...

தமிழ்நாடு சட்டப் பேரவையில், மேதகு ஆளுநர் உரை (30.1.92)- மற்றும் சட்டப் பேரவை நிகழ்ச்சிகள்- சட்டப்பேரவையில் டாக்டர் எம்.ஜி.ஆர். படத்திறப்பு விவரங்கள்- 'தமிழ்நாடு தொழில் கொள்கை-'92' ஆகியவை இடம் பெறும்.

பரிசீலித்து நல்ல முடிவுகளை அறிவிக்கும்.

இன்றைய தினம் கலைமாமணி விருது பெற்ற கலைமேதைகள் அனைவருக்கும், பொற்கிழி பெற்ற சான்றோர்களுக்கும், சுழற்கேடயம் பெற்ற நாடகக் குழுவினருக்கும், கலை நிறுவனத்தினருக்கும், எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்

தமிழ்நாடு இயல்-இசை-நாடக மன்றம், தமிழ் அன்னைக்கு மேலும் பல அணிகலன்கள் சேர்த்திடும் வண்ணம் செயல்படவேண்டும், தனது சீரிய பணியைச் சிறப்பாகத் தொடரவேண்டும், வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

விழாத் தொடக்கத்தில் மன்றத் தலைவர் திரு. குன்னக்குடி வைத்திய நாதன் அனைவரையும் வரவேற்றார் மன்றச் செயலாளர் திரு. ஆர்.எஸ். மனோகர் ஆண்டறிக்கை படித்தார்; விழா முடிவில் நன்றி நவின்றார்.



விழா முடிவில் கலைமாமணி திரு. யூ. சீனிவாசன் அவர்களின் மாண்டலின் இசை நிகழ்ச்சி நடந்தது. மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்களும் இசை நிகழ்ச்சியை இறுதிவரை கேட்டு மகிழ்ந்தார்கள்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
**பி.வி. கிரி.**

## கலைமாமணி விருதுபெறும் கலைஞர்கள்

நீதிபதி எம்.எம். இஸ்மாயில் - இயற்றமிழ்க் கலைஞர்
டாக்டர் விக்ரமன் - இயற்றமிழ்க் கலைஞர்
திருமதி சி. சரோஜா (பம்பாய்- இசைக் கலைஞர்
திருமதி சி. லலிதா சகோதரிகள்)- இசைக் கலைஞர்
தஞ்சாவூர்
திரு. வி. சங்கர அய்யர் - இசைக் கலைஞர்
திருமதி டி. ருக்மணி - வயலின் கலைஞர்
பாலக்காடு திரு. ஆர். ரகு - மிருதங்கக் கலைஞர்
மைசூர் திரு. துரைசாமி
அய்யங்கார் - வீணைக் கலைஞர்
சித்தூர் திரு. ஜி. வெங்கடேசன் - புல்லாங்குழல் கலைஞர்
திரு. திருவிழா ஜெய்சங்கர் - நாதசுரக் கலைஞர்
மன்னார்குடி
திரு. எம்.ஆர். வாசுதேவன்- தவில் கலைஞர்
திரு. டி.கே. தட்சிணாமூர்த்தி - கஞ்சிராக் கலைஞர்
திரு. ஏ.பி. சண்முகம் - தில்ரூபா கலைஞர்
டாக்டர் சீர்காழி
ஜி. சிவசிதம்பரம் - இறையருட் பாடல் கலைஞர்
திருமதி கலாநிதி நாராயணன் - பரதநாட்டிய ஆசிரியர்
திருமதி சரஸ்வதி - பரதநாட்டியக் கலைஞர்
மதுரை திரு. டி. சேதுராமன் - பரதநாட்டிய இசைக் கலைஞர்
பந்தணைநல்லூர் பரதநாட்டிய
திரு. பி. சீனிவாசன் - மிருதங்கக் கலைஞர்
திரு. ஆர்.சி. தமிழன்பன் - நாடக ஆசிரியர்
திரு. கே.எஸ். நாகராஜன் - நாடகத் தயாரிப்பாளர்
திரு. கே.டி. ராஜகோபால் - நாடக நடிகர்
திரு. ஏ.ஆர். சீனிவாசன் தொழில்முறை அல்லாத
(ஏ.ஆர்.எஸ்.) - நாடக நடிகர்
திரு. 'ஒருவிரல்'
கிருஷ்ணா ராவ் - நாடக நகைச்சுவைக் கலைஞர்
திருமதி எஸ். சுகுமாரி - நாடக நடிகை
திரு. ஜி. வெங்கடேஸ்வரன் - திரைப்படத் தயாரிப்பாளர்
திரு. சி.வி. இராசேந்திரன் - திரைப்பட இயக்குநர்
திரு. சத்யராஜ் - திரைப்பட நடிகர்
செல்வி பானுப்ரியா - திரைப்பட நடிகை
திரு. 'வெண்ணிற ஆடை'
மூர்த்தி - திரைப்பட நகைச்சுவை நடிகர்
திரு. 'சித்ராலயா' கோபு - திரைப்பட வசனகர்த்தா
திரு. தேவா - திரைப்பட இசை
அமைப்பாளர்
திருமதி பி. லீலா - திரைப்பட பின்னணிப் பாடகி
மேலக்கரந்தை
திருமதி பொன்னம்மாள் - வில்லுப்பாட்டுக் கலைஞர்
திரு. பி. சுந்தரராஜ் நாயுடு - கரகக் கலைஞர்
திரு. டி.ஏ.ஆர். நாடி ராவ் - புரவிநாட்டியக் கலைஞர்
திரு. பி.எஸ். நாகராஜ
பாகவதர் - இசை நாடக நடிகர்
திருமதி கே.வி. ராஜம் - இசை நாடக நடிகை
திருமதி பி. ஞானாம்பாள் - இசை நாடக ஆர்மோனியக்
கலைஞர்
கும்பகோணம்
திரு. டி.என். சங்கரநாதன் - பொம்மலாட்டக் கலைஞர்

### பொற்கிழி

கலைமாமணி திரு. சி.எஸ். ஜெயராமன்
கலைமாமணி திரு. 'கள்ளப்பார்ட்' நடராஜன்
கலைமாமணி திருச்சி திரு. சுவாமிநாதன்

### சுழற்கேடயம் பெறும் சிறந்த நாடகக் குழு

'நாடகப்பிரியா' சென்னை.

### சிறந்த கலை நிறுவனம்

மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப், சென்னை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
பதிவு எண் M. 8676
Licence No. TN/MS(C)/PB-23

